
குண்டூசி
1719
டிசம்பர் 55 விலை எட்டு அ.
மாடர்ன் தியேட்டர்ஸ்
அலிபாபாவும் 40 திருடர்களும்
டைரக்ஷன் T. R. சுந்தரம். B.SC. (LEEDS)

Remy
SNOW
Remy
POWDER
"சௌகார்" நக்ஷத்திரம்
ஸ்ரீமதி ஜானகியின்
பாராட்டு :–'ரெமி' அழகு
சாதனங்களுக்கு ஈடு
எதுவுமில்லை.
S. Janaki.

404

FIAT

சிறிய கார்

பெரிய வசதி

FIAT THE NEW 1100

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 DEC 1956
MADRAS

புதிய அழகு
புதிய பொலிவு

டி. வி. சுந்தரம் அய்யங்கார் &
ஸன்ஸ் லிமிடெட்,
மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி,
புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர்.

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்,
37, மவுண்ட் ரோட், சென்னை.

சப் டீலர்கள் :

மலபார் ஜில்லா: ஸி. ஸி. ஆடோமோபைல்ஸ் லிட்., கோழிக்கோடு: திருவாங்கூர்-கொச்சி ராஜ்யம்: கொய்லான் ஆட்டோமோபைல்ஸ், தபால் பெட்டி நெ. 32 கொல்லம்: தென் கன்னட ஜில்லா: யு. சுப்ராய நாயக், கன்டோன்மன்ட், மங்களூர்: நெல்லூர் ஜில்லா: டி. எஸ். ஆடோமோபைல்ஸ், நெல்லூர்: குண்டூர், கிருஷ்ணா மற்றும் மேற்குக் கோதாவரி ஜில்லாக்கள்: கரபதி காரேஜ், (ஜெனரல் மெஷினரி & ஆட்டோ ஸ்டோர்ஸ்), காந்தி நகர், விஜயவாடா.

குடும்பத்தில்
எல்லோரும் விரும்புவது...
Glaxo
கிளாக்ஸோ பிஸ்கோத்துகள்
சிறந்த பிஸ்கோத்துகள்
பிரிட்டானியா
Biscuits
Britannia
Glaxo
Biscuits

குண்டூசி

டிஸம்பர் 1955

ஆசிரியர் : பி. ஆர். எஸ். கோபால்

பட்டை 9
ஊசி 3
பிரதி 98

புயலோ புயல்!

புயல், புயல்! தமிழ் நாடெங்கும் ஒரே 'புயல்'! ரேடியோவைத் திருப்பினால் 'புயல்'! பத்திரிகைகளைப் பிரித்தால் 'புயல்'! வெளியே சென்று யாரிடமாவது பேசினால் அங்கும் 'புயல்'தான்! இப்படியாக அசல் புயலில் சிக்கியவர்களின் கோர அனுபவங்களும் தத்தளிப்பும் ஒருபுறம். இவைகளைக் கேட்டு மனம் கொந்தளிப்போர் மறுபுறம்.

புயல் பற்றிய செய்திகளே நம் உள்ளங்களில் பெரும் புயலை வீசச் செய்கின்றனவே; அந்தக் கோரப் புயலில் சிக்கி, அதிருஷ்டவசமாய் உயிருடன் தப்பித் தவித்துக் கொண்டிருப்போரின் உள்ளங்கள் எவ்வளவு கொந்தளித்துக் கொண்டிருக்கும் என்று யூகித்துப் பாருங்கள்.

தஞ்சையில் சென்ற புயல் அடித்துச் சரியாக மூன்று வருஷங்கள் ஆவதற்குள் மற்றொரு புயல்!— அதுவும் முந்தினதைவிட அதிக கோரத்துடன்! இத்தடவை தஞ்சை ஜில்லா மட்டுமன்றி, திருச்சி ராமநாதபுரம் ஜில்லாப் பகுதிகளும் இயற்கையின் கோர தாண்டவத்திற்குட்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான மக்களின் உயிரை இப் புயல் கொண்டு போயிருக்கிறது. அதுமட்டுமா; கணக்கிலடங்காத கால்நடைகளும் புயலுக்குப் பலியாகி யுள்ளன. விழுந்துபோன வீடுகளும், மரங்களும் ஏராளம். வாழை, தென்னை முதலிய தோப்புகள் படுநாசம். நெல் வயல்களோ சமுத்திர ஜலம் பாய்ந்து மணல் மேடுகளாக மாறி விட்டன.

லக்ஷக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், வயோதிகர்களும் தங்க இடமின்றி, உண்ண உணவின்றி, கட்டத் துணியின்றி வெட்ட வெளிகளில் கடும் குளிரில் கதறி அழுது கொண்டிருக்கின்றனர். மனித உள்ளம் படைத்த அனைவரும் இப் புயல் துயராளர்களுக்கு உதவி அளிக்க விரைந்து முன்வருவர்.

புயல் செய்திகளைக் கேட்டு மனத்துயருறுவது ஒரு மாதிரி. ஆனால் அசல் புயலில் அகப்பட்டு அவதிக்குள்ளாகி, அலறிக்கொண்டிருப்பவர்களின் கதியை கற்பனை செய்து பாருங்கள். இப்பொழுது அவர்களுக்கு உடனடியாகவேண்டியது அனுதாபச் செய்திகளும், தீர்மானங்களும் அல்ல. உணவு, ஆடை, இடம் ஆகிய மூலாதாரத் தேவைகளையே அவர்கள் நாடி நிற்கின்றனர். இந்திய சர்க்காரும், பிரதேச சர்க்காரும் சேர்ந்து புயல் பிரதேசங்களில் நிவாரண வேலைகளைத் துரிதமாய் தொடங்கியிருக்கின்றனர். இவர்கள் தவிர சில தனிப்பட்ட நபர்களும், ஸ்தாபனங்

களும் புயல் நிவாரண வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

நிவாரண வேலை சரிவர நடைபெற வேண்டுமானால், அதற்கு கோடிக் கணக்கான ரூபாய்கள் அவசியமாய் இருக்கிறது. இதற்காக சர்காரும், "தினமணி" காரியாலயத்தினரும் ஒரு நிதியை ஏற்படுத்தி பணம் வசூலித்து வருகின்றனர்.

இவ்விரு நிதிகளில் ஏதாவதொன்றிற்கு தமிழர்கள்ஒவ்வொருவரும் தங்களால் அதிகப்பட்சம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தொகையை அனுப்பித்தங்கள் கடமையை நிறைவேற்ற வேணடும். பணத்தோடுகூட பழைய புதிய ஆடைகள், உணவுப் பொருள்கள், வீடுகட்டும் சாமான்கள், எதுவானுலும் அனுப்பி வைக்கலாம்.

பிற மாகாணத்தவர்களும்—ஏன் நாட்டினரும்கூட புயலின் கோரத்தையும், புயல் துயராளர்களின் கொடும் கஷ்டங்களையும் பத்திரிகைகள் மூலம் உணர்ந்து, தாராளமாக நிதி முதலான உதவிகளை அளிக்க முற்பட் டிருக்கின்றனர். அவர்களை யெல்லாம்விட தமிழ்நாட்டவர்கள் தங்கள் சகோதரர்களுக்கு அதிகமாய் உதவக் கடமைப் பட்டவர்களன்ரே.

கஷ்டப்பட்டவனே கஷ்டக் கொடுமைகளை எளிதில் உணர முடியும். இந்த உண்மையை நம் சினிமா நாடகக் கலைஞர்கள் நிரூபித்து விட்டனர். அவர்களில் பெரும்பாலோர் ஒரு காலத்தில் புயல் இல்லாமலே "புயற் கொடுமைகளை" அனுபவித்து நக்ஷத்திரங்களானவர்கள் அல்லவா! என். எஸ். கிருஷ்ணனின் இல்லத்தில் இவர்கள் சமீபத்தில்கூடி, பிரபல நடிகர்களான வி. நாகய்யா, என். எஸ். கிருஷ்ணன், டி. கே. ஷண்முகம், எம். ஜி. ராமச்சந்திரன், சிவதாணு, சகஸ்ரநாமம், டி. ஏ. மதுரம் இவர்களடங்கிய ஒரு நிதி வசூல் கமிட்டியை அமைத்திருக்கிருர்கள். இவர்கள் பொது ஜனங்களிடமிருந்து நிதி வசூலிப்பதோடு, நாடகங்களை நடத்தியும் நிதி சேர்த்துக் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இச்செய்தி எமக்குப் பெருமிதமளிக்கிறது. முன்பே நம் நக்ஷத்திரங்கள், புயல் நிவாரணம், பஞ்ச நிவாரணம் இவைகளுக்கெல்லாம் ஏராளமாக நிதி வசூலித்துக் கொடுத்து மக்களின் நன்மதிப்பைக் கவர்ந்திருக்கின்றனர். இப்பொழுதும் அவர்கள் இந்தப் பொது நல ஊழியத்திற்கு விரைந்து முன் வந்தது மிகப் போற்றுதற்குரியது. சினிமா, நாடக, சங்கீத, நடனத் தொழிலில் உள்ள அனைவரும் நடிகர்கள் நிதி வசூலிப்புக் கமிட்டியினருடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்து, லக்ஷக்கணக்கில் வசூல் ஏற்படுவதற்கு உதவும்படி வேண்டிக்கொள்ளுகிறேம். மக்களின் நன் மதிப்பையும், ஆதரவையும் பெருவாரியாகப் பெறுவதற்கான இந்த அரிய வாய்ப்பை நம் நடிகவர்க்கத்தினர் நன்கு பயன்படுத்திக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேம்.

வருஷ சந்தா: இந்தியா, இலங்கை ரூ. 6; வெளிநாடுகள் ரூ. 9. தனிப் பிரதி: இந்தியா 8 அணு; இலங்கை 50 சதம்; வெளிநாடு 12 அணு.

குறிப்பு: "குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

பரஸ்பரம்

இந்த 'ஊசி'யில் நிச்சயம் "பரஸ்பரம்" வெளிவரும் என்று நீங்கள் எதிர்பார்த்தே இருப்பீர்கள். பரஸ்பரம் நாமிருவரும் சந்தோஷமாக இருக்கையில் இப்பகுதி தோன்றுவது நியாயந்தானே? எனக்கும் மனதிலுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு இது போன்றதுதானே சரியான சந்தர்ப்பம்!

இந்த வருஷ தீபாவளி மலரைப் பற்றி முதலில் நீங்கள் அறிந்து கொள்ள விரும்புவீர்கள். மலர் எங்களுக்கு வழக்கத்தைவிட அதி உன்னத வெற்றியை அளித்திருக்கிறது என்பது உண்மையே. "வெற்றி" என்று நான் குறிப்பிட்டது மலர் மூலம் எங்களுக்குக் கிடைத்த வருமானத்தைக் குறித்து அல்ல; நேயர்கள் அடைந்துள்ள சந்தோஷத்தையும், எங்களுக்குக் கிடைத்திருக்கும் புகழ் மாலைகளையுமே அது குறிப்பதாகும்.

வருமானம் சம்பந்தப்பட்ட மட்டில், இவ் வருஷ மலர் எங்களுக்கு பிரதி பலன் அற்ற உழைப்பு என்றே கூற வேண்டும். விலையை மிகக் குறைவாக நிர்ணயித்ததின் விளைவுதான் இது. நாங்கள் இதைத் தெரிந்தே செய்திருப்பதால் எங்களுக்கு லாபம் ஏற்படாததற்காக துளியும் வருந்தவில்லை.

சென்ற மூன்று வருஷங்களாக, மலரை உயரிய ஆர்ட் காகிதத்தில் அச்சிட்டு மூன்று ரூபாய் விலைக்கு நேயர்களுக்கு அளித்து வந்தோம். இதனால் பண வசதிக் குறைவான சில நேயர்களுக்கு மலர் வாங்குவது சாத்தியமில்லாமல் போய்க்கொண்டிருந்தது. ஆகவே, இவ் வருஷம் மலரை கூடியமட்டில் குறைந்த விலையில் வெளியிட்டு, நேயர்கள் அனைவரும் அதை வாங்கும்படிச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம். அதன்படியே நடந்தது.

மலர் விஷயத்தில் நாங்கள் எப்பொழுதும் "லாபம்" ஒன்றிலேயே குறியாக இருந்ததில்லை. நேயர்கள் கொடுக்கும் விலைக்கு—அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு அதிகமாகவே கொடுத்து அவர்களை மகிழச் செய்ய வேண்டும் என்பதையே கொள்கையாகக் கொண்டிருக்கிறோம். "குண்டூசி" தீபாவளி மலர் எப்பொழுதுமே சோடையில்லாமல் "பறந்து" போய்விடுவதன் 'மர்மம்' இதுதான்.

இவ் வருஷ மலர் மூலம் நேயர்களுக்கு இரட்டிப்புச் சந்தோஷம் ஏற்பட்டிருக்கிறது. மலர் நன்கமைந்திருப்பது ஒன்று; அது மிகக் குறைந்த விலையில் கிடைத்தது மற்றொன்று.

நேயர்கள் இரட்டிப்புச் சந்தோஷம் அடைந்திருப்பது எங்களுக்கு நான் மடங்கு சந்தோஷம் அளிக்கிறது.

இவ்வருஷம் ஆர்ட் பேப்பரின் விலை அபாரமாய் உயர்ந்திருக்கிறது. மலருக்கு வழக்கமான மூன்று ரூபாய் விலையையே வைத்து அதன் மூலம் அதிகமாய் கிடைக்கும் பணத்தைப் பூராவும் ஆர்ட் காகித வியாபாரிகளிடம் சமர்ப்பித்திருந்தால் நம்மிருவருக்கும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சந்தோஷம் ஒருக்காலும் ஏற்பட்டிருக்காதல்லவா?

"மலரின் விலையை மிகக் குறைத்து எங்களைத் திகைப்படையச் செய்து விட்டீர்களே!"; "ஒண்ணேகால் ரூபாயில் ஒண்ணாங் கிளாஸான மலர்"; "விலை குறைந்தாலும் விஷயம் துளியும் குறையவில்லை"—இது மாதிரியெல்லாம் எண்ணிறந்த நேயர்கள் பாராட்டுக் கடிதங்களை எழுதியிருக்கின்றனர்.

அதே சமயத்தில் ஒரு சில நேயர்களிடமிருந்து வருத்தம் தெரிவிக்கும் கடிதங்களும் வந்திருப்பதை கூறி விடுகிறேன்! மலரை ஆர்ட் பேப்பரிலேயே வெளியிடவில்லை என்பதுதான் அவர்கள் குறை.

'வருஷத்திற்கொரு முறை வெளியிடும் மலரையாவது ஆர்ட் பேப்பரிலேயே வெளியிடுங்கள். வருஷத்திற்கொருமுறைதானே நேயர்கள் அதிக விலை கொடுக்கப் போகிறார்கள்" என்ற ரீதியில் அவர்கள் வாதிக்கிறார்கள். இதுவும் ஓரளவு நியாயமாகத்தான் தோன்றுகிறது. இருந்த போதிலும், அடுத்த வருஷ காகித நிலைமை பற்றியோ, மலரின் விலை பற்றியோ நாம் இப்பொழுதே எதுவும் தீர்மானித்து விடுவதற்கில்லை.

தீபாவளி மலர் சம்பந்தமான தம் அபிப்பிராயங்களை அன்பு கூர்ந்து நமக்கு எழுதி அனுப்பியிருக்கும் நேயர்கள் அனைவருக்கும் என் நன்றி

“குணசுந்தரி” – மணியான படம்

பெண்மணிகள் பெரிதும் போற்றக்கூடிய கதை

“சினிமா வெறுமனே ஒரு பொழுது போக்கு சாதனம்தான். மக்களுக்கு அறிவூட்டுவதோ, அவர்களை ஒழுக்கத்தில் முன்னேறச் செய்வதோ சினிமாக்காரர்களின் வேலை அல்ல” என்று ஒருசாரார் வாதிக்கலாம். ஆனால் வெறுமனே பொழுது போக்கிற்காகவே தயாரிக்கப்பட்ட ஒருபடத்திற்குப்பதில், உன்னத லக்ஷியமும் பொழுதுபோக்கும் ஒருங்கே அமைந்த ஒரு படமே படம் பார்ப்பவர்களின் மனதில் ஆழ்ந்த லக்ஷிய உணர்ச்சியைத் தூண்டி விடுகின்றது. சாதாரண பொழுது போக்குப் படங்கள் சில மாதங்களில் மறக்கப்பட்டு விடும். ஆனால் உன்னத லக்ஷியப் படங்களைப் பற்றிய நினைவோ வருஷங்கள் பல கழிந்தாலும் மனதை விட்டு அகலவே அகலாது.

அந்த ரகஸியத்தை விஜயா புரடக்ஷன்ஸார் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் தயாரித்த ஒவ்வொரு படத்தின் மூலமும் ஒவ்வொரு உன்னத லக்ஷியத்தை — அதுவும் ஸ்திரீ - குழந்தை வர்க்கத்தினர் மனதில் நல்லுணர்ச்சிகளைக் கிளறி விடும் ஒரு லக்ஷியத்தைப் புகுத்திப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். டிஸம்பர் மாத வெளியீடான “குணசுந்தரி” படத்தில் அவர்களது இந்த நோக்கம் நூற்றுக்கு நூறு பயனளிக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

சிறந்த முறையில் பொழுது போக்கு அம்சங்களும், உன்னத லக்ஷியமும் கொண்ட சுவாரஸ்யமான கதையும், காதுக்கினிமையான சங்கீதமும், சினிமா டெக்னிஷியன்களின் பாராட்டுதற்குரிய உழைப்பும், கவனம் மிக்க டைரெக்ஷனும் ஒன்று சேர்ந்து “குணசுந்தரி”யை ஒரு உன்னதப் படமாக ஆக்கியிருக்கின்றன.

“குணசுந்தரி” ஒரு கற்புக்கரசியின் கதை. ‘கற்பின் மகிமையால் சாதிக்க முடியாதது இல்லை’ என்பதை விளக்கிக் காட்டும் படம்.

உக்கிரசேன மன்னன், தன் புத்திரிகளிடம் அவர்கள் தன் மீது கொண்டிருக்கும் அன்பை வெளியிடும்படி கூறுகிறான். முதல் இரண்டு பெண்களும் சாதுரியமாகப் பேசித் தகப்பனைச் சந்தோஷமடையச் செய்கின்றனர். கடைசிப் பெண்ணான குணசுந்தரியோ “விவாஹம் ஆகும் வரையில் தான் ஒரு பெண் தன் தகப்பனிடம் பூரணமான அன்பைச் செலுத்த முடியும். பிறகு, அவளது பூரண அன்பைப் பெறக்கூடியவன் அவளது கணவனே” என்ற உண்மையைக் கூறுகிறாள். இதைக் கேட்ட உக்ரசேனனுக்கு உக்கிரமான கோபம் ஏற்படுகிறது. குணசுந்தரிமீது பழி தீர்த்துக் கொள்ளுவதற்காக அவளுக்கு சர்வ அவலக்ஷணமும், குருடு, செவிடு, ஊமை, முடம் ஆகிய எல்லாம் பொருந்திய ஒருவனைத் தேடிப் பிடித்து மணம் செய்து வைக்கத் தீர்மானிக்கிறான். குணசுந்தரி முழுமனதுடன் இதற்கு சம்மதிக்கிறாள்.

வீரசேனன் என்ற ராஜகுமாரன் கூடு விட்டுக் கூடுபாயும் வித்தையில் தேர்ந்தவனாக இருக்கிறான். அவன் உக்ரசேனனின் தீர்மானத்தைக் கேள்வியுற்று சர்வ அவலக்ஷணம் உள்ள தெய்வாதீனமாக மாறி குணசுந்தரியை மணந்து கொள்கிறான். ஒரு நாள் தெய்வாதீனத்தை அடிக்க முயன்ற உக்கிரசேனன் மாடிப் படிகளில் உருண்டு காலை முறித்துக் கொள்ளுகிறான். குணசுந்தரியும் தெய்வாதீனமும் வெளியேற்றப்பட்டு குடிசை வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றனர்.

உக்கிரசேனன் கால் முறிந்தது முதல் படுத்த படுக்கையாகி விடுகிறான். மஹேந்திர பர்வதத்திலிருந்து மஹேந்திர மணியைக் கொண்டு வந்தால் அரசன் குணமடைய முடியும் என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். அந்த மணியைக் கொண்டு வருபவர்களுக்கு தன் ராஜ்யத்தையே கொடுத்து விடுவதாக அரசன் அறிவிக்கிறான். மனைவியரின் வற்புறுத்தல் தாங்க முடியாமல் அரசனின் மூத்த மாப்பிள்ளைகள் இருவரும் மணியைத் தேடிப் புறப்படுகின்றனர்.

தெய்வாதீனம் தன் சுயரூபத்தை குணசுந்தரிக்குக் காட்டி, அதன் உண்மையை அவள் வேறு யாரிடமாவது தெரிவித்தால் தான் கரடியாகிவிட நேரும் என்றும் தெரிவிக்கிறான். பிறகு, மணியைக் கொண்டு வருவதற்காக அவனும் புறப்படுகிறான்.

தெய்வாதீனத்துடன் மூத்த மாப்பிள்ளைகளும் சேர்ந்து கொள்ளுகிறார்கள். மிக சிரமப்பட்டு தெய்வாதீனம் மணி

யைப் பெறுகிறான். திரும்பி வருகையில் மூத்த மாப்பிள்ளைகள் தெய்வாதீனத்தை ஒரு கிணற்றில் தள்ளிவிட்டு மணியுடன் அரண்மனைக்கு வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு மணியைப் பிரகாசிக்கச் செய்யும் மந்திரம் மறந்து போய் விடுகிறது.

இதற்கிடையில், மூத்த சகோதரிகள் இருவரும் குணசுந்தரியின் கணவனை இழிவாகப் பேசியதால், ரோஸம் கொண்ட குணசுந்தரி, "உருமாறியிருக்கும் தெய்வாதீனம் உண்மையில் வீரசேன ராஜகுமாரன்" என்ற வெளியிடக் கூடாத ரகஸியத்தை வெளியிட்டு விடுகிறாள். உடனே கிணற்றிலிருந்து வெளி வந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த தெய்வாதீனம் கரடியாக மாறுகிறான்.

கரடி ரூபத்தில் தெய்வாதீனம் வீடு திரும்புகிறான். தன் தவறுக்காகக் கண்ணீர் உகுத்து கடவுளை வேண்டுகிறாள்.

அவள் பிரார்த்தனைக்கு இரங்கிய சிவனும் சக்தியும் குறவன் குறத்தியாக மாறி அரண்மனைக்குச் செல்கின்றனர். குணசுந்தரியையும், கரடியையும் அரண்மனைக்கு வரவழைத்து உண்மையை விளக்கி, அவர்கள் மூலம் மஹேந்திரமணியைப் பிரகாசிக்கச் செய்கின்றனர். அரசன் பூரண குணமடைகிறான். தெய்வாதீனம் கரடி ரூபத்திலிருந்து மீண்டும் சுயரூபத்தை அடைகிறான்.

இக்கதையின் அடிப்படைத் தத்துவமான "கற்பின் மஹிமை"யை தயாரிப்பாளர்கள் துளியும் விரஸம் ஏற்படாதபடியும், ஆரம்பம் முதல் கடைசிவரையில் விறுவிறுப்பாக இருக்கும்படியும் சித்தரித்திருக்கிறார்கள்.

பாதாள குகைகளில் மணியைத் தேடும் காட்சிகள் மட்டும் சிறிது சுவாரஸ்யத்தைக் குறைப்பதாக உள்ளன. அரச குமாரர்களின் கோமாளித்தனங்கள் கொஞ்சம் குறைந்திருந்தால் இக்காட்சிகளும் விறுவிறுப்பாக இருந்திருக்கக் கூடும்.

அணுஅணுவாய் படம் அழகான முறையில் முன்னேறுகையில் நமக்கு அபரிமிதமான ஆனந்தம் ஏற்படுகிறது. படத்தின் டைரெக்டரும் டெக்னிஷ்யன்களும் அபாரமான சிரத்தையுடன் உழைத்துப் பாடுபட்டிருக்கின்றனர்.

வசனங்கள் அர்த்த புஷ்டியுடன் பொருத்தமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. தெய்வாதீனம் பேசும் ஹாஸ்யப் பேச்சுகளின் பின்னால் வேதாந்தமான ஒரு அர்த்தமும் த்வனிப்பது குறிப்பிடத் தக்கது.

இப்படத்தில் நடிப்பு அம்சம் மிகப் புகழக் கூடியதாக இருக்கிறது. அநேகமாக எல்லோருமே தத்தம் பாத்திரத்திற்கேற்ற முறையில் நடித்துள்ளனர். குணசுந்தரியாகத் தோன்றும் சாவித்திரி சோகக் கட்டங்களில் கூட தமக்குப் பிரமாதமாக நடிக்க வரும் என்று நிரூபித்திருக்கிறார். வேஷமும் இவருக்கு நன்கு பொருந்தியிருக்கிறது. மற்ற கட்டங்களிலும் இவரது நடிப்பு நன்றாயிருக்கிறது.

ஜெமினி கணேசனுக்கு இப்படத்தில் அதிக வேலையில்லை. எனினும், உள்ளவரையில் அழகாக நடித்திருக்கிறார்.

எஸ். வி. ரங்கராவ் ராஜாவாகத் தோன்றுகிறார். கால் உபாதையுடன் இவர் அவஸ்தைப்படும் கட்டங்களில் இவரது நடிப்பு மிக தத்ரூபமாக இருக்கிறது. இவருடைய மூத்த புத்திரிகளின் பாத்திரத்திற்குக் கொஞ்சம் வயது குறைவானவர்களைப் போட்டிருக்கலாம். இவ்வேஷங்களை ஏற்றுக்கொண்டுள்ள முத்துலக்ஷ்மியும், லக்ஷ்மிப்ரபாவும் கூடிய வரையில் நடிக்க முயன்றிருக்கிறார்கள்.

அவர்களது கணவர்களாக வரும் நம்பியார், கருணாநிதி இவர்களது நடிப்பு கோமாளித்தனம் மிகுந்ததாகவும், மிகைப்பட்டதாகவும் இருக்கிறது. சாதாரண ரஸிகர்களைத் திருப்தி செய்வதற்காக இப்பாத்திரங்கள் இது மாதிரி சிருஷ்டிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இவர்களை கோமாளித்தனமற்ற வில்லன்களாகக் காட்டியிருந்தால் கதை மேலும் சுவாரஸ்யமாக இருந்திருக்கக் கூடும்.

குணசுந்தரியின் உருமாறிய கணவன் தெய்வாதீனமாக நடிக்கும் எம். ஈ. மாதவனின் நடிப்பு வெகு சரளமாக அமைந்திருக்கிறது. அவரது நடிப்பு படத்திற்கே ஜீவனளிக்கிறது என்றும் கூறவேண்டியிருக்கிறது. அவர் "நடிக்கிறார்" என்று கூறுவது தவறாகும்; அந்த பாத்திரமாகவே மாறி விட்டிருக்கிறார் என்று கூறுவதே மிகப் பொருத்தமாயிருக்கும்.

வைத்தியராக வரும் ஏழுமலை, மந்திரியாக வரும் துரைசாமி, ஆகியோ

ரது நடிப்பும் குறிப்பிடத் தக்கது. பார்வதியாகத் தோன்றும் ருஷ்யேந்திர மணியின் தோற்றம், நடிப்பு இரண்டுமே திருப்தியளிக்கவில்லை. குறத்தியாக வரும் கமலாதேவி வெளுத்துக் கட்டியிருக்கிறார். தாதி மீனாட்சியின் நடிப்பு பரவாயில்லை.

மற்றும் இப்படத்தில் சகாதேவன், நாகேஸ்வர ராவ், ராமசாமி, பந்துலு, பாலகிருஷ்ணன், ரஜனி, தனம், துளஸி, சீதா, பேபி சாரதா, பேபி ஜயா, பேபி நிர்மலா முதலியோரும் சுமாராக நடித்திருக்கின்றனர்.

இப்படத்தில் சங்கீதம் ஒரு விசேஷ அம்சமாக விளங்குகிறது. நல்ல மெட்டுகளில் காதுக்கினிய வாத்ய இசையுடன் பாட்டுகள் அதிமென்மையாய் பதிவு செய்யப் பட்டுள்ளன. கண்டசாலா, ராஜா, கோவிந்தராஜன், கிருஷ்ணன், லீலா, ஜிக்கி, ராணி, கமலா ஆகியோரின் பாட்டுகளைப் படத்தில் நீங்கள் கேட்கலாம். காட்சி ஜோடனைகள் தேவையான அளவில் நன்கு அமைந்திருக்கின்றன. பாதாள குகைக் காட்சிகளில் இன்னும் அதிக பயங்கரத்தையும் துடிப்பையும் ஓசைகள் மூலம் உண்டுபண்ணியிருக்கலாம்.

பெண்மணிகளும் குழந்தைகளும் அதிகமாக விரும்பக் கூடிய இப்படத்தில் ஆபாஸமான காட்சியின் சாயல் கூட இல்லை என்பது போற்றத்தக்கது.

ஒளிப்பதிவு மிக துல்யமாக உள்ளது. எடிட்டிங்கும் முதல்தரமாயிருக்கிறது. மொத்ததில், டெக்னிஷ்யன்களின் சிறந்த உழைப்பும், கே காமேஸ்வரராவின் கவனமிக்க டைரெக்ஷனும், நாகிரெட்டி-சக்ரபாணி இவர்களின் சிறந்த முயற்சியும், நக்ஷத்திரங்களின் ஒத்துழைப்பும் ஒன்று சேர்ந்து, "குணசுந்தரி" ஒரு அருமையான படமாக உருவாகியிருக்கிறது. இதுமாதிரி முயர்சிகள் சினிமா உலகில் அபூர்வமாகவே செய்யப்படுவதால், "குணசுந்தரி" போன்ற நல்ல படங்களுக்கு நம் ரஸிகர்கள் அதிக ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறேன். —"நிழல்"

"குணசுந்தரி" படத்தில் இவர்களைச் சந்திக்கலாம்.

இது செய்தி

நடிகர்களின் புயல் நிதி

தென்னிந்திய நடிகர்கள் சங்கத்தின் ஆதரவில் டிஸம்பர் 10ந்தேதி நடிப்புக் கலைஞர்களின் கூட்டமொன்று என். எஸ். கிருஷ்ணனின் இல்லத்தில் நடந்தது. சங்கத் தலைவர் வி. நாகய்யா தலைமை வகித்தார். பல நடிக நடிகையர்கள் வந்திருந்தனர்.

"தென்னிந்தியக் கலைஞர்கள் புயல் நிவாரண நிதிக் கமிட்டி" என்ற பெயருடன் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இக் கமிட்டிக்கு வி. நாகய்யா போஷகராகவும், என். எஸ். கிருஷ்ணன் தலைவராகவும், டி. கே. ஷண்முகம், எம். ஜி. ராமச்சந்திரன் துணைத் தலைவர்களாகவும், டி. என். சிவதாணு, டி. ஏ. மதுரம் செயலாளர்களாகவும், எஸ். வி. சகஸ்ரநாமம பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர செயற்குழுவுக்கு 20 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட நடிகர் நடிகையர்கள் அக்கூட்டத்திலேயே ரூ. 15,000 வாக்களித்திருப்பதாகத் தெரிகிறது.

எல்லா நடிக, நடிகையரும் கலந்து கொள்ளும் முறையில் கலை நிகழ்ச்சிகளை நடத்தியும், தனிப்பட்டவர்களிடம் நேரில் வசூல் செய்தும் உடனடியாக நிதி திரட்டுவதென்று முடிவுசெய்யப் பட்டது. வசூலாகும் தொகையை ஸ்ரீ. ராமகிருஷ்ண மடத்தின் மூலம் புயல் நிவாரணத்திற்கு அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

செய்திக் கதிரில் வெளி நாட்டுத் தலைவர்கள்

சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்த வெளி நாட்டுத் தலைவர்களின் சுற்றுப் பிரயாணக் காட்சிகள் இவ் வார செய்திக் கதிரில் சேர்க்கப்பட்டுள்ளன.

சோவியத் தலைவர்கள் பூனா, பெங்களூர், தென் இந்தியா ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்த போது திரளான மக்கள் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளித்த காட்சிகளும், சவூதி அரேபிய மன்னருக்கு டில்லியில் அளிக்கப்பட்ட வரவேற்புக் காட்சிகளும், நேபாள தேச மன்னரின் இந்திய சுற்றுப் பிரயாணக் காட்சிகளும் இச் செய்திக் கதிரில் இடம் பெற்றுள்ளன.

பிரதேச பரிசுத் திட்டத்திற்கான படங்கள்

பல்வேறு பாஷைகளிலும் தயாரிக்கப் பட்டுள்ள சினிமாப் படங்களுக்கு பிரதேச வாரியான பரிசுகளை வழங்குவதற்காக, சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ள பிரதேசக் கமிட்டிகள் (1954ம் வருஷத்திய பரிசுகளை வழங்குவதற்காக) படங்களைப் பரிசீலித்து, படங்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. பிரதேச வாரியான இந்த பரிசுத் திட்டம் இவ் வருஷத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சென்ற வருஷம் ஏற்படுத்தப் பட்ட அகில இந்திய சினிமாப் படப் பரிசுத் திட்டத்துக்குத் துணைத் திட்டமாக இது அமைந்துள்ளது. சிறந்த படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கம் அளிப்பதற்காகவே இத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஒவ்வொரு பாஷைப் படங்களிலும் மிகச் சிறந்த படத்துக்கு, ராஷ்டிரபதி வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும். இம் மாத பிற்பகுதியில் அவைகளை டில்லியில் ராஷ்டிரபதி வழங்குவார்.

மூன்று பிரதேச தலைமை ஸ்தானங்களிலுமாக 12 ஹிந்திப் படங்கள், 13 வங்காளிப் படங்கள், 5 தமிழ்ப் படங்கள், 9 தெலுங்குப் படங்கள், 2 மராத்திப் படங்கள், 2 மலையாளப் படங்கள், ஒரு கன்னடப் படம், ஒரு அஸ்ஸாமியப் படம் — ஆகியவை பரிசீலிக்கப் பட்டன.

சென்னை பிரதேசக் கமிட்டியில், அண்ணாமலை சர்வகலாசாலை உப அத்யட்சகர் ஸ்ரீ. டி. எம். நாராயணசாமி பிள்ளை

(அக்ராசனர்), ஸ்ரீமதி மஞ்சுபாஷிணி, பேராசிரியர் டாக்டர் எம். வரதராஜன், ஸ்ரீ. ஆர். சுப்பராவ், ஸ்ரீ. பி. ராமகிருஷ்ண ராஜு, டாக்டர் ஐயப்பன், ஸ்ரீ. கே. ராமய்யா, ஸ்ரீ. கே. ராம்னுத் ஆகியோர் இருந்தார்கள்.

அகில இந்திய பரிசுகளுக்கான படங்களைப் பிரதேச பரிசுகளுக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ள படங்களிலிருந்து மத்தியக் கமிட்டி தேர்ந்தெடுக்கும்.

அமெரிக்காவில் "நவ இந்தியா"

சாதாரண இந்தியர் ஒருவரின் வாழ்க்கையையும், நோக்கங்களையும் விளக்கிக் காட்டும் "நவ இந்தியா" என்ற வர்ணப் படம் அமெரிக்காவிலுள்ள மத்திய கிழக்கு ஸ்தாபனத்தில் திரையிடப்படும். சங்கீதத்துடன் எடுக்கப்பட்டுள்ள இப் படம் 80 நிமிஷ நேரம் ஓடக்கூடியது. இப் படத்தில் இந்திய சமய, நாட்டுப்புற வழக்கங்கள், இந்திய நடனம், மைசூர் தசரா ஊர்வலம், கல்கத்தா அருகே நடைபெற்ற ஒரு இந்திய விவாகம் முதலியவை அடங்கியுள்ளன.

டாக்குமென்டரி படத் தயாரிப்பு

தேசத்தின் பொருளாதார, சமூக, கலாச்சார வாழ்க்கை முறைகளைப்பற்றி வரலாற்றுப் படங்கள் (டாக்குமென்டரி பிலிம்) தயாரிப்பதில் இந்திய சர்க்கார் திரைப்படப் பகுதியினர் முயற்சிக்கு உதவியாக இருக்கும் பொருட்டு, தனிப்பட்ட படத் தயாரிப்பாளர்கள் 41 பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியை இந்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். சர்க்கார் சார்பாகப் படங்களைத் தயாரிப்பதற்கு கமிட்டியினர் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். படம் பிடிக்கும் பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்படுமாம்.

கௌரவித்தனர்

சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் தலைவர் ஏ. அருணாசலம், சென்னை சர்க்காரால் உதவி 'அபிஷியல் அஸய்னி' பதவிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார். தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க சங்கத்தார் தேனீர் விருந்து அளித்து அவரை கௌரவித்தனர். இம் மாதம் 3ம் தேதி நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அருணாசலத்தின் திறமையைப் பல பிரமுகர்கள் பாராட்டிப் பேசினார்கள்.

ரயில்வே சங்க விழா

போத்தனூர் ரயில்வே இன்ஸ்டிட்யூட்டின் வஸந்தா விழா சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தென் பிராந்திய ரயில்வே பிரதம வைத்திய அதிகாரியான டாக்டர் வி. டி. நாயுடு இவ் விழாவுக்குத் தலைமை வகித்தார். ஆசைத்தம்பி எழுதிய "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற நாடகம் ரயில்வே ஊழியர்களால் மெச்சத்தக்க முறையில் நடித்துக் காட்டப்பட்டது. அதில் சிதம்பரக் கவுண்டர் வேஷம் தாங்கிய ஆர். சுந்தரராகவனின் நடிப்பு தத்ரூபமாய் இருந்தது.

தீக்ஷிதர் தினம்

சென்னையில் ஆதரவு மிக்க மயிலை ரஸிக ரஞ்சனி சபையினர் சென்ற 6ம் தேதியன்று ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். இவ் வைபவத்திற்கு பிரபல அட்வொகேட் வி. வி. கோபாலரத்னம் தலைமை வகித்தார். சங்கீத வித்வான் முடிகொண்டான் வெங்கடராமய்யர் ஸ்ரீ. தீக்ஷிதரைப்பற்றி சொற்பொழிவாற்றினார். முடிவில் அரியக்குடி ராமாநுஜ ஐயங்கார் தீக்ஷிதர் கிருதிகள் சிலவற்றைப் பாடினார். டி. என். கிருஷ்ணன் பிடிலும், பழநி சுப்ரமண்ய பிள்ளை மிருதங்கமும் வாசித்தனர்.

மயிலாப்பூர் அகாடமி

மயிலாப்பூர் அகாடமியின் நான்காவது ஆண்டு விழா நவம்பர் 19ந் தேதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் விழாவுக்குத் தலைமை வகித்தார். ராஜாஜி அவர்களும் விழாவுக்கு விஜயம் செய்திருந்தார். அதுசமயம், தஞ்சை அம்புஜவல்லியின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

மேயருக்கு வரவேற்பு

கோடம்பாக்கம் வாசிகளின் க்ஷேம நலன்களைக் கவனிப்பதற்காக புதிதாய் தோன்றியிருக்கும் கோடம்பாக்கம் க்ஷேம நல சங்கத்தினர் மிக சுறுசுறுப்பாக உழைத்து வருகின்றனர். வி. ஆர். ராமநாதய்யர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக வரவேற்பளிப்பதில் இச் சங்கத்தினர் மற்றெல்லோரையும் முந்தி விட்டனர். அது மட்டுமல்ல; சென்னை சட்டசபைக்கு புதிதாய்

மாடர்ன் தியேட்டர்ஸாரின் உன்னத தயாரிப்பான ''அலிபாபாவும் நாற்பது திருடர்களும்'' தமிழ்ப் படத்தில் சாரங்கபாணி, பானுமதி, எம். ஜி. ராமச்சந்திரன் தோன்றும் காட்சி இது.

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்பீக்கர் கனம் ஸ்ரீ என் கோபால மேனன் இவ் விழாவுக்குத் தலைமை வகித்தார். புதிய உதவி மேயர் டாக்டர் கே. வி. ஸ்வாமியும், கார்பொரேஷன் கமிஷனரும் கூட இவ் விழாவில் கலந்து கொண்டு பேசினார்கள். பல ஸ்டுடியோக்கள் நிறைந்துள்ள இப் பிராந்தியத்தை ''சென்னையின் ஹாலிவுட்டாக'' ஆக்குவதற்கான முயற்சிகளைச் செய்வதாக மேயர் வாக்களித்தார். இவ் விழா இம்மாதம் 4ந் தேதி கோடம்பாக்கம் மாடர்ன் உயர்நிலைப் பள்ளி ஹாலில் நடைபெற்றது.

மிருதங்க வித்வான் காலமானார்

பிரபல மிருதங்கவித்வான் குத்தாலம் ஸ்ரீ. எஸ். சிவவடிவேல் பிள்ளை இம்மாதம் 5ந் தேதியன்று காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். அவர் நகர காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும், பஞ்சாயத்து போர்டின் அங்கத்தினராகவும், டவுன் கிளப் துணைத் தலைவராகவும் பதவி வகித்து வந்தார். அவரது பிரேத ஊர்வலத்தில் சங்கீத வித்வான்களும் பிரபலஸ்தர்களும் கலந்துகொண்டார்கள். பல பொது ஸ்தாபனங்களின் சார்பாக மாலைகள் அணிவிக்கப்பட்டன. அவருக்கு மனைவியும், மூன்று குமாரர்களும், சகோதரர்களும் உள்ளனர்.

மிருகக் காட்சி நூற்றுண்டு விழா

சென்னை நகரசபையினரால் நடத்தப்பட்டு வரும் மிருகக் காட்சி சாலையின் நூறுவது ஆண்டுவிழா வைபவம் சென்ற மாதம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அதை ஒட்டி கே.கே ரங்காச்சாரியின் பொறுப்பில் கலா நிகழ்ச்சிகளுடன் கூடிய ஒரு பொருட்காட்சி சிறப்பாக நடந்தது.

'வாய்ஸ் ஆப் அமெரிக்கா'வில் தேசிகர் பாட்டு

எம். எம். தண்டபாணி தேசிகரின் விசேஷ இசை விருந்துகளை இம்மாதம் வாய்ஸ் ஆப் அமெரிக்கா வானொலியில் புதன் கிழமை தோறும் கேட்கலாம். தண்டபாணி தேசிகர் வாய்ஸ் ஆப் அமெரிக்காவுக் கென்றே தனியே பல பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொடுத்திருக்கிறார். இவற்றை இம் மாதத்தில் ஒவ்வொரு புதன் கிழமையன்றும் (இந்தியக் கடிகாரப்படி) இரவு 7-30 மணி,

8 மணி இவற்றுக்கிடையே 25.26, 42.19 மீட்டர்களில் கேட்கலாம். புதன் கிழமை தோறும் 7-30 மணி முதல் 8 மணி வரையும் 9-45 மணி முதல 10-45 மணி வரையும் வாயஸ் ஆப் அமெரிக்கா ஒலிபரப்பும் தமிழ் ஒலிபரப்பில் செய்திகள், நேயர் தபால், விஞ்ஞான விமர்சனம், தமிழ்த் திரை கானம் முதலியவை உள்ளன.

வாழ்த்துகிறோம்

குவாலாலம்பூரிலிருந்து வெளியிடப்படும "சங்கமணி" பத்திரிகையின ஆசிரியரும், "தமிழ் நேசன்" பத்திரிகையின் உதவி ஆசிரியருமான ஸ்ரீ. பைரோஜி நாராயணனுச்கும், பம்பாய் ஸ்ரீ. என். கே. சாரி அவர்களின புச்திரி சௌ. வஸந்தாவுச்கும சென்ற 9ந் தேதியன்று பொன்மலையில் திருமணம் நடந்தேறியது. தம்பதிகளுக்கு எம் ஆசிகள்.

"நினைவும் முடிவும்"

சென்னை மயிலாப்பூரில் கலை ஆர்வம் மிக்க சில இளைஞர்களால் ஆரமபிக்கப்பட்டிருக்கிறது "ஸ்வதந்திரா அமெச்சூர்ஸ்" எனற நாடக சபை. இவர்கள் தங்களது முதல் நாடகமாக "நினைவும் முடிவும்" என்ற நாடகத்தை சென்ற மாதம் 19ம் தேதி மியூஸியம் தியேட்டரில் நடித்தனர். இது ஏ. கே. எம். சாமி என்பவரால் எழுதப்பட்ட நாடகமாகும். திருவல்லிசகேணி, ஸ்ரீ கிருஷ்ண சாரணர் சங்கத்தின் உதவிககென இந் நாடகம் நடிக்கப்பட்டது.

வஞ்சகி நாடகம்

சென்ற மாதம் 3ம் தேதி, "வஞ்சகி" என்ற நாடகம் மயிலை ஆர் ஆர். சபாவில் நடந்தது. ஏழை மாணவர்கள் நிதிக்கு உதவ நடைபெற்ற நாடகமாகும இது. இந்த நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் (ஸர்டிதோம் ஹைஸ்கூல்) மாணவர்களே எனினும் திறம்பட நடித்தார்கள்.

ஏசுநாதர்

அடுத்து வரும் கிருஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நவாப ராஜமாணிககம் தமது "ஏசுநாதர்" நாடகத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

அமெரிக்க நடி வருகிறார்

அமெரிக்காவில் நவீன நடனத்தில் தலை சிறந்து விளங்கும் மிஸ் மார்த்தா கிரஹாம் இம்மாதக் கடைசியில் 17 பேர் கொண்ட ஒரு நாட்டியக் குழுவுடன் இந்தியாவுக்கு வருகிறார். கல்கத்தா, சென்னை, பம்பாய், புது டில்லி ஆகிய இடங்களில் இவர்கள் நாட்டியமாடுவார்கள்.

இக்குழுவினரின் இந்திய விஜயம் இவர்கள் சுற்றுப்பிரயாணத்தின் ஒரு பகுதியாகும். இதுவரை ஜப்பான், தென் கிழக்கு ஆசியா முதலிய இடங்களுக்கு இவர்கள் விஜயம் செய்திருக்கிறார்கள். தற்பொழுதுள்ள நிலைக்கு அமெரிக்க நவீன நாட்டியக் கலை விருத்தியானதற்கு அதிகம் பாடுபட்டவர் மிஸ் கிரஹம் ஆவார். நாட்டியம் ஆடுதல், நாடகம் நடித்தல், "பாலே" நட்டியம் இவைகளில் இவர் பங்கு கொள்வார். பழங்காலத்து முறையான நாட்டியங்களை விட்டு, நாட்டியத்தில் புது முறையைப் புகுத்துவதில் அவர் முதலிலிருந்தே உழைத்தார்.

தமது நாட்டியங்களுக்கேற்ற நவீன சங்கீதத்தை அமைத்துக கொள்வதற்கு அவருடைய சங்கீத அறிவு அவருக்குப் பயன்பட்டது. பிரபல அமெரிக்க கவிஞர் ஆரான் கோப்லாண்டின் "அப்லாச்சியன் வஸந்தம்" என்னும் பாட்டு அவ்வாறு அமைந்ததாகும். இப் பாட்டின் இசைக்கும் அழகுக்கும் 1945ம் வருஷம் புலிட்ஸர் பரிசு வழங்கப்பட்டது.

இவர் சென்னையிலே தமது கோஷ்டியுடன் சென்னை தியேட்டர் சென்டர் ஆதரவில் நடனமாடுவார். இக்கோஷ்டியினரை வரவேற்று, உபசரித்து, கௌரவித்து, நடனமாடச் செய்து, கண்டு களிகக தியேட்டர் சென்டர் நிர்வாகிகள் விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். ஜனவரி 4, 5 தேதிகளில் அண்ணாமலை மன்றத்தில் நடககப் போகும் இவர்களது நடனங்களுக்கு முன் கூட்டியே டிக்கெட்டுகள் விற்கப் போகிறார்கள். எல்லோரும் எளிதில் பார்த்து மகிழவேண்டுமெனபதற்காக பிரவேசக் கட்டணத்தை மிகக் குறைத்து வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள ஜப்பானிய சிற்பியான இஸாமி நொகுசசி, இந்த நடனங்களுக்கென அரங்க மேடைக்கான நூதன உத்திகளைத் தயாரிக்கிறாராம்.



விஜயா புரடக்ஷன்ஸார் இம்மாதம்
வெளியிட்டுள்ள "குணசுந்தரி" தமிழ்ப்
படத்தில் நடிக்கும் லக்ஷ்மிபிரபா.

பிரம்மலோகம்

நரஸுவின் மூன்ருவது தயாரிப்பு அவர்களது ஸ்டுடியோவில் மும்மரமாகத் தயாராகி வருகிறது. பம்பாய் டாக்கீஸார் தயாரித்துத் திரையிட்ட பிரபலப் படமான "கிஸ்மத்" படத்தின் கதையைத் தழுவியிருக்கும் இப்படத்தின் கதை. இ படத்தின் வசனங்களையும் பாட்டுகளையும் தஞ்சை ராமய்யா தாஸ் எழுதியுள்ளார். சங்கீத டைரெக்ஷனை எஸ். ராஜேஸ்வர ராவும் டைரெக்ஷனை வேதாந்தம் ராகவய்யாவும் கவனித்து வருகின்றனர். ஜெமினி கணேசன், கே. சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, எம். ஜி. சக்ரபாணி, பீர் முகமது சாயிராம், சாவித்திரி, கிரிஜா, கே. வரலக்ஷ்மி, பேபி சரஸ்வதி ஆகியோர் படத்தில் நடித்து வருகின்றனர். இதே படம் தெலுங்கிலும் தயாராகி வருகிறது.

நல்ல வீடு

இம்மாதம திரைக்கு வரக்கூடிய படங்களில் "நல்ல வீடு" ஒன்ருக இருக்கும். ஜயசக்தி பிக்சர்ஸின் தயாரிப்பான இப்படத்தின் இறுதி வேலைகள் இப்பொழுது சியாமளா ஸ்டுடியோவில் நடைபெற்று வருகின்றன. எம். எல் பதியால் எழுதப்பட்டுள்ள கதையாகும் இது ஜே. ஸினுஹா டைரெக்ஷனில் தயாராகி முற்றுப்பெற்று வரும் இப்படத்தில் பிரதம பாத்திரங்களில் சிவாஜி கணேசன், மனோஹர், தங்கவேலு, பாலய்யா, நம்பியார், பண்டரிபாய், எம். என். ராஜம், ராஜகாந்தம் ஆகியோர் நடித்துள்ளனர்.

மதுரை வீரன்

அடுத்து பொங்கல் திருநாளில ரஸிகர்களுக்குக் கிடைக்கும் விருந்தாக இருக்கும் கிருஷ்ணா பிக்சர்ஸாரது "மதுரை வீரன்". மதுரை வீரனை எம். ஜி. ராமச்சந்திரன் நடித்து வருகிருர். இவர் தவிர பானுமதி, லலிதா, பத்மினி, ராகினி, டி. ஏ. மதுரம், டி. எஸ். பாலய்யா, என். எஸ் கிருஷ்ணன், ஆர் பாலசுப்பிரமணியம் இப்படியாகப் பல நட்சத்திரங்களும் இப்படத்தில் தமக்குத் தகுந்த பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். சங்கீத டைரெக்ஷனை ஜி. ராமநாதனும், டைரெக்ஷனை யோகாந்தாவும் கவனித்து வருகின்றனர். தயாரானவரை படத்தைப் பார்த்தவர்கள் படம் பிரமாதமாக அமையப் போகிறது என்று ஏகமனதாகக் கூறும்படி படம் அமைந்திருக்கிறது "மதுரை வீரன்" 1956 வருஷத்தின் வெற்றிப்படமாகத் திகழ வேண்டுமென 'லேனா'ச் செட்டியார் தம் மேற்பார்வையில் படத்தைத் தயாரித்து வருவதாகவும் தெரிகிறது. இப்படத்தில் சேர்க்கப்பட்டுள்ள திருவிளையாடற் புராண நடன நாடகம் ஒரு விசேஷ அம்சமாக இருக்குமெனத் தெரிகிறது.

கண்ணின் மணிகள்

மஹேஸ்வரி பிக்சர்ஸின் "கண்ணின் மணிகள்" படப் பிடிப்பு முக்கால் பாகத்திற்கு மேல் படமாகிவிட்டிருக்கிறது. தற்போது இதன் படப்பிடிப்பு வாஹினி ஸ்டுடியோவில் சுறு சுறுப்பாக நடைபெற்று வருகிறது. பத்மினி இப்படத்தில் முதல் முறையாக ஒரு குருட்டுப் பெண்ணாக வருகிருர். கதாநாயகனை சுந்தர் என்ற புதுமுகம் ரொம்பவும் சிறப்பாக நடித்திருக்கிருராம். சமீபத்தில் தயாரிக்கப்பட்ட நெருப்புப் பற்றிக்கொள்ளும் ஒரு காட்சியில மிகவும் தத்ரூபமாக அவர் நடித்தாராம். மற்றும் இப்படத்தில் எம். கே. ராதா, எம். வி. ராஜம்மா, முத்துலக்ஷ்மி, டி. ஏ. மதுரம், என். எஸ் கிருஷ்ணன், கருணாநிதி ஆகியோர் நடித்து வருகின்றனர். படத்தை டி. ஜானகிராமன் டைரெக்ட் செய்து வருகிருர். படத்தில் பிச்சைக்காரர்கள் பிரச்னை பற்றிய சில உருக்கமான கட்டங்களை என். எஸ். கிருஷ்ணன் கையாண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படத்தின் சில காட்சிகள் கேவா கலரில் தயாரிக்கப்படுமெனவும் தெரிகிறது.

சதாரம்

கஸ்தூரி பிக்சர்ஸின் "சதாரம்" சீக்கிரமே திரைக்கு வந்துவிடத்

கூடும். இப்படத்தில் கோமாளி ராஜாவாக கே. சாரங்கபாணி நடிக்கிறார். ரேவதி ஸ்டுடியோவில் வி. சி. சுப்பராமன் டைரெக்ஷனில் தயாராகி வரும் இப்படத்தில் மற்றும் ஜெமினி கணேசன், கே. ஆர் ராமசாமி, டி எஸ் பாலய்யா, பானுமதி, ஸி. கே. சரஸ்வதி ஆகியோர் நடித்து வருகின்றனர்.

அலிபாபாவும் 40 திருடர்களும்

அடுத்து வரும் பொங்கலுக்கு ரஸிகர்களைத் திக்குமுக்காட வைக்கும் முறையில் சில நல்ல படங்கள் வெளிவரவிருக்கின்றன. அவைகளில் தனி ரகத்ததாகவும், தனிப் பெருமையும் விசேஷ அம்சங்களும் வாய்ந்ததாகவும் இருக்கும் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் அளிக்கப் போகும் திரை ஓவியமான "அலிபாபாவும் நாற்பது திருடர்களும்" என்ற தமிழ்ப் படம். தமிழ் நாட்டில் வெளிவரப்போகும் முதல் முழு கலர்ப் படம் இதுவே ஆகும். திரைக் கதை புதிய மாதிரியில் கவர்ச்சிகரமாக அமைக்கப்பட்டிருக்கிறதாம். இப்படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, எம். என். ராஜம், வித்யாவதி, கே சாரங்கபாணி, தங்கவேலு, எம் ஜி. சக்ரபாணி பி. எஸ். வீரப்பா ஆகப் பல பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்கின்றனர். இப்படத்தில் பல பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளையும் காணலாமெனத் தெரிகிறது. ஹெலிதா — ரஹ்மான், ஸாயி-சுப்புலக்ஷ்மி ஆகியோரது கவர்ச்சிமிக்க நடனங்களும் விசேஷ அம்சமாக இருக்கும். டி. ஆர். சுந்தரம் இப்படத்தை டைரெக்ட் செய்திருக்கிறார்

புதையல்

கமால் புரொடக்ஷன்ஸ் என்ற புதிய படக் கம்பெனியின் "புதையல்" என்ற முதல் படத்தின் படப் பிடிப்பு வாஹினியில் சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. இப்படத்தின் கதை—வசனத்தை மு. கருணாநிதி எழுதியுள்ளார். இப்படத்தை ஏராளமான பொருட் செலவில் தயாரிக்க தயாரிப்பாளர்கள் திட்டம் போட்டிருக்கிறார்களாம். சிவாஜி கணேசன், எம். கே. ராதா, டி எஸ். பாலய்யா, சந்திரபாபு, பத்மினி ஆகியோர் படத்தின் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

நன்னம்பிக்கை

பிலிம் சென்டர் ஸ்டுடியோவில் அவர்களது "நன்னம்பிக்கை" அதிகப் படாடோபமின்றி, அதே சமயம் மிகச் சுறுசுறுப்பாகப் படமாகி வருகிறது. கே. வேம்பு டைரெக்ஷனில் உருவாகும் இப்படத்தில் பண்டரிபாய், மைனாவதி, டி. எஸ். பாலய்யா, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி கே பாலச்சந்தர் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.

நான் பெற்ற செல்வம்

அடுத்து வரும் பொங்கலுக்கு தமிழ் ரஸிகர்களுக்குக் கிடைக்கவிருக்கும் விருந்துகளில் ஒன்றாக இருக்கும் "நான் பெற்ற செல்வம்" பாரகன் பிக்சர்ஸாரின் இத்தயாரிப்பு கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில்—படப்பிடிப்பின் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டிருக்கிறது. இப்படத்தின் கதை வசனத்தை ஏ. பி நாகராஜன் எழுதியிருக்கிறார். சங்கீத டைரெக்ஷனை ஜி. ராமநாதனும், டைரெக்ஷனை கே. சோமுவும் கவனித்து வருகின்றனர். சிவாஜி கணேசன், ஜி. வரலக்ஷ்மி வி. கே ராமசாமி, ஏழுமலை, கருணாநிதி, பி டி. சம்பந்தம் முதலியோர் இப்படத்தில் நடித்து வருகின்றனர்.

இரு புதுப் படங்கள்

விஜயா பிலிம்ஸார் இம்மாதம் 10ந் தேதியன்று சென்னை வாஹினி ஸ்டுடியோவில் இரு புதுப் படங்களின் ஷூட்டிங்கை ஆரம்பித்திருக்கிறார்கள். "யார் பையன்!" என்பது தமிழ் படத்தின் பெயர். "அண்ணா தம்முலு" என்பது தெலுங்குப் படத்தின் பெயர்.

மற்றொரு படம்

ஸ்ரீ ராஜலக்ஷ்மி பிக்சர்ஸார் தங்கள் புதுப்படமொன்றின் ஷூட்டிங்கை இம்மாதம் பிரசாத் ஸ்டுடியோவில் ஆரம்பித்திருக்கின்றனர். இதன் தயாரிப்பாளர் ராஜகோபால். எம். திருவேங்கடம் இதை டைரெக்ட் செய்கிறார். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாட்டுகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார். சங்கீத டைரெக்ஷனை கவனித்து வருகிறார். மனோஹர், பாலய்யா, ராஜசுலோசனா, எம். என் ராஜம், பாண்டியன், வி

விஜயாவின் ''குணசுந்தரி''யில் துளசி.

கே. ராமசாமி, புதுமுகம் ஜயந்தி ஆகியோர் இப் படத்தில் நடிக்கின்றனர். நடிகர் பாலய்யா கேமி ராவை ஓடச்செய்துபடத் தின் ஷூட்டிங்கை ஆரம் பித்து வைத்தார்.

நல்ல தீர்ப்பு

ரேவதி ஸ்டுடியோவில் ''நல்ல தீர்ப்பு'' என்ற பெயரில் ஒரு படம் தமி ழாக்கப்பட்டு வருகிறது. கைலாஸ் பிக்சர்ஸார் தயாரித்த ''லோக நீதி'' என்ற மலையாளப் படமே பாரதி பிக்சர்ஸாரால் மேற்படிப் பெயரில் தமி ழாக்கப்பட்டு வருகிறது. பி. எஸ். சரோஜா, குமாரி தங்கம், ஸ்ரீதரன் நாயர், பங்கஜம், எஸ்.பி. பிள்ளை ஆகியோர் படத்தில் நடித்திருக்கின்றனர். தமி ழில் வசனங்களையும் பாட்டுகளையும் எழுதியி ருப்பதுடன் டப்பிங் பொ றுப்பையும் ஏற்றுருக்கி ருர் கு. சா. கிருஷ்ண மூர் த்தி. சங்கீதடைரெக்ஷனை தக்ஷிணமூர்த்தி கவனி த்து வருகிருர்.

புதுமைப் பித்தன்

சிவகாமி பிக்சர்ஸின் ''புதுமைப் பித்தன்'' வா ஹினி ஸ்டுடியோவில் விறுவிறுப்பாக வளர்ந்து வருகிறது இப் படத்தின் கதை ''மார்க் ஆப் ஸா ரோ'' என்ற ஆங்கிலக் கதையைத் தழுவி யிருக் கும் எனத் தெரிகிறது. திரைக் கதை வசனத்தை மு. கருணநிதி எழுதியிரு க்கிருர். இப் படத்தில் பி. எஸ். சரோஜாவும், எம். ஜி. ராமச்சந்திரனும் கா தல் ஜோடியாக நடித்து வருகின்றனர். மற்றும், டி. ஆர். ராஜகுமாரி, சந் திரபாபு ஆகியோரும் முக் கிய பாத்திரங்களில் நடி த்து வரும் இப்படத்தின் டைரெக்டர் ராமண்ணு.

ஜயஸிம்ஹன்

ஸ்வராஜ் பிக்சர்ஸின் ''ஜெயஸிம்ஹன்'' (தெலு ங்குப் படம்) தமிழாக்கப் பட்டு வருகிறது. தமிழ்ப் படத்தின் வசனங்களை தஞ்சை கே. கோவிந்த னும், பாட்டுகளை தஞ்சை ராமய்யா தாஸும் எழுதி யுள்ளனர். யோகானந்த் டைரெக்ஷனில் தயாரா கும் இப் படத்தில் என். டி. ராமராவ், அஞ்சலி, ரங்கராவ், ரேலங்கி, குசல குமாரி ஆகியோர் நடித்து வருகின்றனர். இப் படத் தின் பூரண உரிமைகளை யும் வீராசாமி பிக்சர்ஸார் பெற்றுள்ளனர்.

''ஸி. ஐ. டி.''

மலையாளத்திலே பிர மாதமான வெற்றியை அளித்துள்ள ''ஸி.ஐ.டி.'' என்ற தங்கள் படத்தைத் தமிழில் தயாரித்து வருகி ருர்கள். அதன் தயாரிப்பா ளர்களான நீலா புரொட க்ஷன்ஸார். திருவனந்த புரம் மெரிலண்ட் ஸ்டுடி யோவில் நடக்கிறது இத் தத் தமிழாக்கும் வேலை. தமிழ் தவிர ஹிந்தி, கன் னடம், தெலுங்கு ஆகிய பாஷைகளிலும் டப் செய் யப்பட்டு வருகிறது. மலை யாளப் படத்தில் பிரேம் நஸீர், குமாரி, குமாரி தங் கம் நடித்துள்ளனர்.

15. அலைகள்

கழுதையும் பிறந்த உடனே அழகாக இருக்கும். அழகற்ற பெண்களும் பருவ காலத்தில் அழகாகத் தோற்றுவார்கள். இயற்கையில் சௌந்தரியம் நிறைந்த பெண்கள் பருவப்போதில் எத்தகைய அழகோடு மிளிர்வார்கள் என்பதை விவரித்தல் சாத்தியமா?

கல்யாணியின் தாய் சிறந்த அழகி. தகப்பனார் சுந்தரரூபன். அத்தகைய தம்பதிக்குக் காலத்தில் பிறந்தவள் கல்யாணி. எழில் அரசி என்றால் அவளுக்கே தகும் எனும்படி விளங்கினாள். மங்கைப் பருவம் அவளிடம் புது அழகைக்கொண்டு குவித்தது. நாளுக்கு நாள் மெருகேறி வந்த அவளது அவயவங்கள் காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் கிடைத்தற்கரிய பெரிய விருந்தாயின. அசப்பிலே நிலைக்கண்ணாடியிலே தன் உருவைக் கண்டுதானே பிரமித்து நின்றுவிடுவாள் அவள். அவள் அப்படி நிற்கும் சில சமயங்களில் தற்செயலாக நோக்கும் தாய் பெருமூச்செறிவாள்.

'காட்டிலே மலர்ந்த கடிமலர் என்பார்கள். அத்தகையதுதானே என் அழகு? யாருக்கும் உதவாத இந்த அழகு என்னிடம் சேர்வானேன்?' எனப் பலமுறை அலுத்துக் கொள்வாள் கல்யாணி. எட்டு ஆண்டுகளுக்கு முன் தான் இருந்த இருப்பையும் இப்போது இருக்கிற இருப்பையும் ஒப்பிட்டு ஒப்பிட்டு உளம் நொந்து போவாள்.

பெற்றோர் எளிய நிலையிலே இருந்தாலும் ஒரே அருமை மகளுக்கு ஒரு குறைவும் வைக்கவில்லை அவர்கள். சக்திக்கு மீறிய நிலையிலே உடைகளும், அணிகளும் அளித்தார்கள். காலத்தில் பள்ளியில் சேர்த்தார்கள். வீட்டிலும் படிப்புச் சொல்லித் தந்தார்கள். சங்கீத சிட்சையும் செய்து வைத்தார்கள். எல்லாம் செய்கிற பெற்றோராயினும் அவற்றைப் பரிமளிக்கச் செய்யாத மக்கள் எவ்வளவு பேர்! கல்யாணி அப்படி இருக்கவில்லை. பெற்றோர் செய்வித்த அலங்காரத்திற்குப் பொருத்தம் உடையவளாக இருந்தாள். ஆடை அணிகளைக் கருத்தோடு காப்பாற்றி வந்தாள். படிப்பிலே சூட்டிகையாக விளங்கினாள். நல்ல சாரீரமும் இயற்கை ஞானமும் இருந்ததால் இசையிலும் விரைவாகத் தேர்ச்சி பெற்றாள். வீட்டுக் காரியங்களில் பம்பரமாய்ச் சுழன்றாள். இவ்வளவும் பத்துப் பிராயத்திற்குள். அவளுடைய தோற்றத்தையும் படிப்பையும் புத்தி சக்திகளையும் கண்டவர்கள் எல்லாரும் ஒரு முகமாக, 'இவள் பெரிய இடத்திலே, சிறந்த கணவனுக்கு வாழ்க்கைப் பட்டு அமோகமாக வாழ்வாள்' என்றார்கள்.

ஆனால்—

ஹேஷ்யமும் ஜோஸ்யமும் காற்றிலே பறக்கலாயின, கல்யாணியின் பதினோராவது பிராயத்தின் தொடக்கத்திலே. விஷ ஜுரம் ஒன்று வந்தது. ஜன்னி கண்டது. நாக்கை இழுத்து விட்டது. பெண்ணை வளர்க்கப் பத்து வருஷங்களில் எவ்வளவு செலவாயிற்றோ அவ்வளவை ஆறு மாசங்களிலே வாரி இறைத்து வைத்தியம் பார்த்தார் தந்தை. பலன் இல்லை. இனிச் செலவு செய்ய வகை இல்லை என்ற நிலை ஏற்பட்டபோது தந்தையே நோய்வாய்ப் பட்டுப் படுத்து விட்டார். படுத்தவர் மீண்டும் எழுந்திராமலே கண் மூடி விட்டார்.

மனோஹரனின் பெற்றோர், கல்யாணி, அவள் தாய இருவருக்கும் புகல் அளித்தனர். வைத்தியத் துறையில் தகப்பன் விட்ட இடத்தை மாமன் தொட்டுக்கொண்டார். பொருள் விரயந்தான் மிச்சம். கல்யாணியின் ஊமைத் தன்மை மாறவில்லை. அவளைப் பிடித்த துரதிருஷ்டம் அத்துடன் விடவில்லை. செல்வம், தகப்பன், நாக்கு இவை போனது போதாதென்று அவள்மீது உயிரையே வைத்திருந்த மாமன் மனைவியையும் விழுங்கி ஏப்பம் விட்டு விட்டது.

"மனோஹரா, தாயும் பெண்ணும் கண் கலங்கி நிற்கும்படி விட்டு விடாதே. கல்யாணிக்கு மலர்ச்சி அளிப்பது உன் பொறுப்பு; உன் கடமை. அவளைக் கைவிட மாட்டாயே?" என்று கேட்டு, "கைவிட மாட்டேன் அம்மா; கண் கலங்கி நிற்கும்படி விட்டு விட மாட்டேன் அம்மா" என்று மகன் உறுதி கூறின பிறகே தாய் கண் மூடினாள்.

அன்றிலிருந்து மனோஹரனுக்குக் கல்யாணியின் பால் அளவு கடந்த அநுதாப உணர்ச்சி தலையெடுத்தது. அதற்கு முன் அவனுக்கு அவளிடமும் அவளுக்கு அவனிடமும் கரை காணாத அன்பு உண்டு. பல நாட்கள் அவர்கள் சேர்ந்து விளையாடியிருக்கிறார்கள். அவர்களுக்குள் வளர்ந்த அன்பைச் சகோதர பாசம் போலவே அவர்கள் உள்ளங்கள் உணர்ந்திருந்தன.

திடீரென்று ஒரு திருப்பம். தாயின் அன்பு ஆணை அவர்களிடையே வேறு ஒரு நூதன உறவைக் கற்பித்தது. சந்தர்ப்ப வசத்தால் உணர்ச்சி வசப்பட்டு தாய்க்கு வாக்குறுதி கொடுத்து விட்டானே தவிர அதன் பிறகு ஆற அமர எண்ணிப் பார்த்தபோது, 'கல்யாணியோடு தாம்பத்திய உறவை மேற்கொள்வதாவது?' என்ற கேள்வி உள்ளத்தில் எழுந்தது. குழம்பலானான். வீட்டிலே அவள் எதிரே புது உறவை மனத்தில் தாங்கி வளைய வருவது கஷ்டமாக இருந்தது. நிறுத்தியிருந்த படிப்பைத் தொடருகிறேன் என்று சென்னை சென்றான்.

மனதிற்குள் ஒன்றைப் புதைத்துக் கொண்டு எங்கே சென்றால் என்ன, என்ன செய்தால் என்ன? அமைதி இல்லை. கல்யாணம், மாலதி ஆகியோரின் நட்பு ஓரளவு அவன் மனக் குழப்பத்திற்கு மாற்றாக இருந்தது. ஆனால்—

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக அங்கே மாலதி அவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தாள். இனி இங்கிருந்தால் ஆபத்தென்று படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டுக் கிராமத்திற்குத் திரும்பினான். 'கல்யாணி சாதாரண நிலையில் இருந்தால் சற்று ஏனோ 'தானோ என்றிருந்து விடலாம். பணத்தை நிரம்பச் செலவு செய்து யாருக்காவது கல்யாணம் செய்து கொடுத்து விடலாம். இப்போது அவளை யார் மணந்து கொள்வர்? தாயின் ஆணை வேறு இருக்கிறது. நாம் தான் மணந்து கொள்ள வேண்டும்' என்றெல்லாம் எண்ணிக்கொண்டு தான் வந்தான். வந்த உடனே, கல்யாணியைப் பார்த்த உடனே அவன் மனம் பழையபடி குழம்ப ஆரம்பித்து விட்டது. தெய்வலோகத்து அரம்பையைப் போல் எதிரே நின்று புன்முறுவல் பூக்கும் கல்யாணியைக் கண்டு காமுறுவதற்குப் பதிலாக அவன் உள்ளம் விவரிக்க முடியாத குழப்பத்திற்கு உள்ளாயிற்று. அவள் ஊமை என்றதனலா? இல்லை. மனசை எவ்வளவு பக்குவப் படுத்தியும் காலத்தை எத்தனை ஓட்டியும் அவன் உள்ளத்திலே அவளிடமாகக் காதல் ஜனிக்கவில்லை. தகப்பனார் முகூர்த்த நாள் குறிப்பிட்டதும் திணறித் தத்தளித்தான். அபயமளிப்பதே போன்று வந்து சேர்ந்தார் சினிமாக் கம்பெனிக்காரர். அதை வியாஜமாகக் கொண்டு இன்னும் சிறிது காலத்தை ஓட்டினால் அதற்குள் மனம் பக்குவம் அடையாதா என்று பம்பாய் சென்றான்.

அவனுடைய நிலைமையை முற்றும் கல்யாணி அறியவில்லை; அறியும் வாய்ப்பு இல்லை. பொதுவாக அம்மானுக்குத் தன்னை மணந்து கொள்ள விருப்பம் இல்லை என்று மட்டும் கண்டு கொண்டாள். அதனால் அவள் மனம் ஏக்கம் அடையவில்லை. ஏன்? அவள் உள்ளத்திலும் மனோஹரனிடம் காதல் இல்லாததே அதற்குக் காரணம். உடன்பிறந்த அண்ணன்போல அவனிடம் குழந்தை முதல் பழகிய அவள் திடீரென்று தன்னை மாற்றிக்கொள்ள



முடியாமல் தத்தளித்தாள். மேலும் தான் ஊமை ஆகிவிட்டதற்காகப் பிறர் தன்னிடம் அநுதாபம் காட்டுவதை அவள் உள்ளம் ஏற்கத் தயாராக இல்லை. சர்வ சாதாரணமான விஷயங்களிலேயே அப்படி என்றால் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வரக்கூடிய பெரிய விஷயத்திலே கேட்கவா வேண்டும்? கதியில்லை, விதியில்லை என்பதற்காக அம்மாஞ்சி தன்னை மணந்தால்... அது எந்த அளவில் சோபிக்கும்? எனக்கு அவரிடம் காதல் இல்லாதது போலவே அவருக்கும் என்னிடம் காதல் இல்லை. அது தெரியாமல் பெரியவர்கள் காரியத்தை நிறைவேற்ற முனைகிறார்கள். தாயின் ஆணைக்காகவும், தந்தையின் கட்டளைக்காகவும், அத்தையின் பரிதாபத்திற்காகவும், அத்தை பெண்ணின் நிர்க்கதிக்காகவும் விதியே என்று சம்மதிக்கிறார்— இவ்வளவையும் அவள் அறிந்து வைத்திருந்தாள். ஆனாலும் தனக்கு ஒரு பாதுகாப்புத் தேவை என்பதையும் நன்கு உணர்ந்திருந்ததால் மாமா முகூர்த்தம் நிச்சயித்ததும் பழைய குழப்பங்களை மறந்து அம்மாஞ்சிக்கு மாலையிடத் தன்னைத் தயாராக்கிக் கொண்டாள். அந்த அம்மாஞ்சி பம்பாயைப் பார்க்கக் கம்பி நீட்டினதும் அவள் உள்ளம் உடையவில்லை; சிரித்தது. 'சரிசரி, நடப்பது நடக்கட்டும்' என்றிருந்தாள்.

இந்த நிலையில் மாலதியின் கடிதம் வந்து பெரும் புயலைக் கிளப்பிவிட்டு விட்டது. பைத்தியக்காரியான மாலதி கடிதத்தில் இன்னதுதான் எழுதலாம் என்ற வரையறையை மறந்து என்ன என்னவோ பிதற்றித் தள்ளியிருந்தாள். அதைப் படிககும் யாரும் மாலதிக்கும் மனோஹரனுக்கும் உள்ளத் தொடர்போடு, உடல் தொடர்பும் உண்டு என்றுதான் நிச்சயிக்க முடியும்.

அதைக் கண்டு தாயும் பெண்ணும், இருந்த ஒரே ஆதரவும் போயிற்று என்று எண்ணி மனமாழ்கினதில் வியப் பென்ன?

'நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?... ஏன் பிறந்தேன்?...ஏன் பிறந் தேன்?...' திரும்பத் திரும்ப இப்படி மனசோடு கேட்டுக் கொண்டாள் கல் யாணி. அவள் கண்களிலிருந்து முத்து முத்தாய் நீர்த்துளிகள் சிந்திக்கொண் டே இருந்தன, முற்றத்திலே சொட் டிக் கொண்டிருந்த வாரி ஜலம்போல.

"என்ன அம்மா இது? மிகவும் அழ காய் இருக்கிறது போ!"

கல்யாணி சட்டென்று திரும்பிப் பார்த்தாள். ரேழியில் மாமா நின்று கொண்டிருந்தார். எப்போது வந்தா ரோ, எவ்வளவு நேரமாக நின்று கவ னித்துக் கொண்டிருக்கிறாரோ!

சட்டென்று எழுந்தாள் கல்யாணி. முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு, முறத்தை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள். "அம்மா எங்கே கல்யாணி?" என்று கேட்டுக்கொண் டே பின்னோடு சென்றார் மாமா. 'அம்மா ஜோஸ்யர் வீட்டுக்குப் போயிருக்கிறாள்' என்கிற பாவனையில் கைரேகையை விரித்து ஜாடை செய்தாள் அவள்.

கூடத்தை அடைந்த அவர் கண் ணிலே அலமாரித் தட்டிலே கிடந்த கடிதம் தென்பட்டது. "ஏது இது?" என்று கேட்டபடி அதை எடுத்துக் கொண்டு ஊஞ்சலில் உட்கார்ந்த அவர், தாம் குடிக்க ஜலம் கேட்டதை யும், கல்யாணி கொண்டு வைத்திருப்ப தையும் மறந்து கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் முகம்...!

எல்லை சுற்றின பிடாரி மாதிரி உள்ளே வந்து நுழைந்தாள் கல்யாணி யின் தாய். ஊஞ்சலில் உட்கார்ந்து கடிதம் படித்துக் கொண்டிருந்த தமை யனைக் கண்டதும் துக்கம் பீறிக் கொண்டு வந்தது. அன்றுதான் தனக் குத் துயர எழுத்து ஏற்பட்டு விட்டவள் போல, "அண்ணா, பார்த்தாயா அண்ணா, அநியாயமாக மனோஹரன் மோசம் செய்து விட்டானே அண்ணா? நாமெல்லாம் மலையாய் நம்பிக் கொண் டிருந்தோமே அண்ணா. இனி நான் என்ன செய்வேன் அண்ணா!" என்று கோகோவென வாய் விட்டுக் கதறலா னாள். "சு" என்று உதட்டிலே விரல் வைத்து அவளை விழித்துப் பார்த்தார் தமையன். அவர் முகம் ரௌத்திரா காரமாக இருந்தது. ஆயினும் தம்மை அடக்கிக்கொண்டு, "உனக்குக் கொஞ் சங் கூடப் புத்தியே இல்லையே! எதற் காக இப்படிச் சத்தமிட்டு ஊரைக் கூட்டுகிறாய்? நாலு பேர் கண்டும் கேட்டும் சிரிக்கவா? என்ன ஆகி விட் டது இப்போது, இப்படிப் பதறுகிறாய் நீ?" என்றார் அழுத்தமாக.

தங்கை பெருங் குரலை மாற்றித் தணி வாக, "இன்னும் என்ன அண்ணா ஆக வேண்டும்? காரியம் மிஞ்சி யிருக்கும் போல் இருக்கே!" என்றாள். தமையன் சொன்னார்:

"சரி சரி, வாயை மூடு. இந்தக் கழு தையோடேயே உலகம் முடிந்து விட வில்லை. வழிக்கு வந்தால் ஆயிற்று. இல்லையென்றால் வேறு தக்க வரனைத் தேடிச் சொத்தை யெல்லாம் எழுதி வைத்துக் கல்யாணியைக் கல்யாணம் செய்து கொடுக்கிறேன், கவலைப் படாதே. நெறி கெட்ட பயலைத் தெரு விலே ஓட்டுகிறேன் பார்."

மாமாவின் உக்கிரகத்தைக் கண்டு மருமகள் நடு நடுங்கினாள்.

16. கர்மவீரன்

படப் பிடிப்பு முடிந்து தன் இருப்பி டத்தை அடைந்த மனோஹரன், "அப்பாடா! இன்றையக் கந்தாயம் தீர் ந்தது. இன்னும் நான்கே காட்சிகள்; அப்புறம் விடுதலை!" என்றபடி சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

விடுதலை!.........மனோஹரன் இப்படி நினைத்திருக்கவேண்டாம். 'எந்தச் சினி மாக் கம்பெனியாவது நம் கதையை ஏற் றுக் கொள்ள முன்வராதா?' என்று ஏங் குகிற கதாசிரியர் எத்தனையோ பேர். 'எந்தப் படத்திற்காவது வசனம் எழு தும் வாய்ப்புக் கிட்டாதா; பாடல்கள் இயற்றும் சந்தர்ப்பம் வாய்க்காதா?' என்று ஏங்குகிற வசனகர்த்தா, சாகித் திய கர்த்தாக்கள் எவ்வளவோ பேர். ஒரு படத்தில், ஒரு சிறு பாகத்தில் நடிக்கும் பேறு கிடைத்தால் நம் திற மை அனைத்தையும் வெளிப்படுத்தி அடு

[தொடர்ச்சி 84-ம் பக்கத்தில்]

திறவுகோல் எது?

பண்டிட் முக்ராம் ஷர்மா

[தமிழாக்கம் : ஏயெஸ்]

ஒரு படத்தின் வெற்றிக்குத் திறவுகோல் எது? பாட்டு, நடனம், நடிப்பு, ஹாஸ்யம், டைரெக்‌ஷன், ஸெட்டிங்ஸ், டெக்னிக் மேம்பாடு, கதை, ஆகிய இவைகளில் எதைத் திறவுகோல் என்று சொல்லலாம்?

மிகவும் முக்கியமான இந்தக் கேள்விக்கு பட முதலாளிகள் வெகு காலமாகப் பதில் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இது அவர்களுக்கு நிரந்தரமாகவே தலைவேதனை அளிக்கும் பிரச்னையாகவும் இருந்து கொண்டிருக்கிறது. திறவுகோல் இல்லாத ஒரு பூட்டுப் போன்று இருக்கிறது இந்தப் பிரச்னை!

சில வருஷங்களுக்கு முன்பு, இரண்டு மூன்று படங்கள் அவைகளின் பாட்டுக்கள், நடனங்கள்—இவைகளின் பலத்தினால் உயர்ந்த 'பாக்ஸ்-ஆபீஸ்' படங்களாக ஆயின. பட முதலாளிகளுக்கு மேலும் குழப்பம் ஏற்பட்டு விட்டது. அதனால், ஒவ்வொரு படமுதலாளியும் பாட்டும், நடனமும் தான் படத்தின் வெற்றிக்குத் திறவுகோல் என்று கருத ஆரம்பித்தனர். அதன் விளைவு, எல்லாப் படங்களும் அதே மாதிரி தயாரிக்கப் பட்டன.

ஆனால், அப்படித் தயாரிக்கப் பட்டவைகளில் பெரும்பாலான படங்கள் தோல்வி யடைந்ததால், தாங்கள் கொண்டிருந்த அபிப்பிராயம் தவறு என்று பட முதலாளிகள் முடிவுக்கு வர வேண்டி யிருந்தது. அதன் பின், இன்று வரையிலும் திறவுகோல் கண்டுபிடிக்கப் படவில்லை என்பது தெளிவான விஷயம்.

ஹாஸ்யப் படங்களுக்கும் அதே கதி தான் நேர்ந்திருக்கின்றது. எனது அபிப்ராயத்தில், உண்மையிலேயே ஜனங்களின் புகழுக்குப் பாத்திரமான ஹாஸ்யப் படம் அநேகமாக எதுவுமே வெளி வந்ததாகத் தெரியவில்லை.

எத்தனையோ முதல் வரிசை நக்ஷத்திரங்கள், தாங்கள் நடித்த படங்களும் தோல்வியடைந்து விட்டனவே என்று மனக் குழப்பமும் வருத்தமும் அடைந்ததை நான் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய நடிப்பு சம்பந்தப்பட்ட வரையில் யாரும் குறை சொல்ல முடியாத படி உயர்தரமாகத் தான் இருக்கிறது. ஆனால், அவர்களுடைய உன்னத நடிப்பினாலும் கூட, அந்தப் படம் படுதோல்வியடைந்துவிடாமல் காப்பாற்ற முடியவில்லையே.

திறமை மிக்க டைரெக்டர்களினாலும் இந்தப் பிரச்னைக்கு வழி கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களால் எதுவுமே பேச முடியாமலிருக்கிறது. ஏனென்றால் அவர்களும் எத்தனையோ தடவைகள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்.

பிரம்மாண்டமான ஸெட்டிங்குகளும் டெக்னிக் உயர்வுகளும் நிறைந்த எத்தனையோ படங்கள், சாதாரணப் படங்களை விடவும் மோசமான வசூலைக் கொடுத்திருக்கின்றன. இனி, கதை ஒன்று தான் பாக்கி. கதை தான் உண்மையில் ஒரு படத்தை உருவாக்குகிறது. கதை இல்லாமல் படம் எடுக்க முடியாது. ஆனால், இந்தக் கதையும் பாக்ஸ்-ஆபீஸ் போராட்டத்தில் மண்ணைக் கவ்வி விட்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம்,

அப்படியானால், வேறு என்ன தான் வழி? சில பட முதலாளிகள் 'பொழுது போக்கு' என்ற பெயரால், 'தத்ருப'க் கொள்கையையே கைவிட்டு விடுகிறார்கள். மேல் நாட்டு சங்கீதம், காமத்தை கிளறும் நடனங்கள், மட்ட ரகமான ஹாஸ்யம், கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டி விடும் காதல் லீலைகள் ஆகியவைகளைப் புகுத்தி, வெற்றியின் நிழலைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், வெகு விரைவிலேயே அத்தகைய படங்கள் மிகவும் 'மட்ட ரகம்' என்று எல்லோராலும் இகழப்பட்டு விட்டன. ஆகவே, 'வெற்றிப் பாதையைக் கண்டு பிடித்து விட்டோம்' என்று இறுமாப்படைவதற்கு இடமளித்த அதே விஷயங்கள், 'தொழிலுக்கே நாசத்தை விளைவித்து விடுமோ' என்று பயப்படும் படியாகச் செய்துவிட்டன.

கடுமையான விமர்சனங்களுக்கும் தாக்குதல்களுக்கும் அந்தப் படங்கள்

இலக்காயின. பேசும் படங்களின் தரம் என்றுமில்லாத அளவிற்குத் தாழ்ந்து விட்டது என்று ஒருமுகமாகக் கண்டிக்கப்பட்டன. இத்தகைய மட்டரகமான பொழுதுபோக்கு, உள்ள பிரச்னைகளை இன்னும் சிக்கலாக்கி விட்டது. இவ்விதமாக 'புதிய முறை' என்று தாற்காலிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டதும் வெற்றிக்குத் திறவுகோலை அளிக்காமற் போய்விட்டது. மீண்டும் அதே கேள்வி; அதே தலைவலி, அதே பிரச்னை சினிமாத் தொழிலை எதிர் நோக்கி நிற்கின்றன.

இந்தப் பிரச்னையைத் தீர்க்க நான் ஒரு வழி சொல்ல ஆசைப்படுகிறேன். "அடேயப்பா, இதுதானா? இது தான் எங்களுக்கு முன்பே தெரியுமே; இதில் புதுமை எதுவும் இல்லையே?" என்று தயவு செய்து யாரும் என்னைத் திருப்பிக் கேட்டு விடாதீர்கள்.

உங்களுடைய கருத்திலிருப்பவைகளை நான் வெளியே சொல்கிறேன், அவ்வளவுதான். ஒரு படத்தின் வெற்றிக்கு சங்கீதம், டெக்னிக் மேம்பாடு முதலிய, நாம் மேற்கூறியுள்ளவைகள் யாவும் அவசியமான அம்சங்கள் தான். ஒவ்வொரு அம்சமும் பட உற்பத்திக்கு இன்றியமையாத முக்கியத்வம் வாய்ந்தவைகளே. இவைகள் எல்லாவற்றையும் ஒன்றோடொன்று சமமான அளவில், இடத்திற்குத் தக்கபடி ஒன்றாக இணைப்பதில்தான், பாக்ஸ்-ஆபீஸ் பூட்டின் திறவுகோல் இருக்கிறது. ஒவ்வொரு அம்சமும் அந்தத் திறவுகோலில் சம்பந்தப்பட்ட பல பாகங்களே ஆகும்.

ஆனால், திறவுகோலில் சம்பந்தப்பட்ட பல பாகங்களிலும், நல்ல, கருத்தமைந்த கதைதான் மிகவும் கேந்திரமான பாகம். அதில்லாமல் பூட்டைத் திறக்கவும் முடியாது; பிரச்னையைத் தீர்க்கவும் முடியாது; வெற்றியடைவதும் சாத்தியமில்லை—என்பதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும்; சொல்லியே தீருவேன்.

நான் இவ்வளவு திடமாகச் சொல்லுவதற்கு சாட்சியங்கள் வேண்டுமானால், சினிமாத் தொழிலின் கடந்த காலத்திலும், தற்காலத்திலும் ஏற்பட்டுள்ள, ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வெற்றி தோல்விப் படங்களைப் பரிசீலனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்.

சமீப காலத்தில் பிரபாத், நியூ தியேட்டர்ஸ்காரர்கள் தயாரித்த படங்களின் வெற்றி எனது அபிப்பிராயத்தின் தெளிவை உணர்த்துகின்றன. அந்தப் படங்களின் கதைகள், படம் பார்ப்பவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்து போயிருக்கின்றன என்பதே, பேசும் படத்திற்கு ஜீவனை விளங்குவது கதை தான் என்ற உண்மைக்கு ஆதாரமாக விளங்குகிறது.

பட முதலாளிகள் நல்ல கதைகளுக்காகப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய மிகவும் உற்சாகம் ஏற்படுகிறது. இவ்வழியில் படங்களின் தரத்தை உயர்த்துவதற்கு அவர்கள் முயற்சி செய்து கொண்டிருப்பது வரவேற்கத் தக்கதே. பட முதலாளிகளின் முயற்சியைப் படம் பார்ப்பவர்கள் எல்லோருமே வரவேற்பார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். இம் முயற்சியினால், படம் பார்ப்பவர்களின் ரஸிகத் தன்மையையும் நிச்சயம் உயர்த்த முடியும். இதன் பலன், பட முதலாளிகளும், படம் பார்ப்பவர்களும் மாத்திரம் பயன் அடைவதோடு அல்லாமல் இந்தியா தேசம் முழுவதுமே பயன் அடையும்.

பேபி சாந்தி சுக்கல்

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் சம்பந்தமாக உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை "குண்டூசி"யாரிடம் கேளுங்கள்.

எஸ். எம். எஸ் ராஜன் (கொழும்பு)

எனக்குள்ள நடிப்புத் திறமையை நான் சினிமா உலகில் புகுந்து விருத்தி செய்து கொள்ள விரும்புகிறேன். திடீரென்று சினிமா உலகில் புக முடியாததாலால் நாடகங்களில் முதலில் நடிக்கலாமா?

தெரிந்தோ தெரியாமலோ நீர் கூறியது சரியே. சினிமா உலகில் திடீரென்று யாரும் புகுந்து விடாமல் பார்த்துக் கொள்ளுவதற்கு குறுக்கே கோடம்பாக்கம் ரயில்வே கேட் இருக்கிறது! ஒரு முறை சாத்தப் பட்டால் அரை மணியாகும் திறப்பதற்கு! அதன் அருகில் பொறுமையாக ஒற்றைக்கால் தவம் செய்யப் பழகிக் கொள்ளவேண்டும். அந்த நேரத்திலேயே கேட் மணி ஓசையை ஆதாரமாகக் கொண்டு சோற்றுக்குத் தாளம் போடவும் கற்றுக் கொண்டு விடவேண்டும்! நாடகத்திலானுலும், சினிமாவிலானுலும்சேருவதென்பது வெறுமனே தபால் மூலம் முடிந்துவிடக் கூடிய காரியமேயல்ல.

வி. ஊம்மினி (குறிச்சி)

சாவித்திரியின் விலாஸத்தைத் தயவு செய்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

தெ. 9 கிருஷ்ணராவ் நாயுடு தெரு, தியாகராய நகர், சென்னை—17.

ஜே. அப்பாஸ் (வழுத்தூர்)

"கொலம்பியா". "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ஆகிய இரு இசைத் தட்டுக் கம்பெனிகளும் ஒன்றேதானு? இசைத் தட்டுகள் எவ்வாறு தயாரிக்கப் படுகின்றன?

இரண்டும் தனித் தனிக் கம்பெனிகளே. ஆனல், இந்தியாவில் தயாரிக்கப்படும் இசைத் தட்டுகள் எல்லாமே டம்டம் நகரில் உள்ள "மாஸ்டர்ஸ் வாய்ஸ்" பாக்டரியில்தான் தயாரிக்கப்படுகின்றன. ஆங்காங்குள்ள கம்பெனிகள் சங்கீத மணிகளை வைத்துப் பாட்டுகளை ஒலிப்பதிவு செய்து, அனுப்பும் ஒலி வரிகளடங்கிய தட்டிலிருந்து டம் டம் பாக்டரி தேவையான இசைத் தட்டுகளைத் தயாரித்துக் கொடுக்கிறது.

கே. என். ஆறுமுகம் (கடயம்)

ராஜ சுலோசன ஏ. பி. நாகராஜனின் தங்கையா? கிருஷ்ணகுமாரி சௌகார் ஜானகியின் தங்கையா?

கிருஷ்ணகுமாரியும் ஜானகியும் சகோதரிகளே. ஆனல், நாகராஜனும் சுலோசனவும் உடன் பிறந்தவர்களல்ல.

ஏ. எம். ஜெயராமன் (திருவண்ணமலை)

கே. சாரங்கபாணி இசை வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர் என்று என் நண்பர் கூறுகிறர். நான் இல்லை என்று மறுத்தேன். எது சரி?

உம் நண்பர் கூறியதுதான் சரி.

ஏ. ஜி. சௌந்தர ராஜன் (அவிசாவெல்ல)

வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப் பட்ட காமிராவுக்கு தமிழ்ப் பட முதலாளிகள் பூஜை நடத்துவது சரியா?

தமிழ் நாட்டு அரசியல் வட்டாரங்களில் குறுகிய மனப் பான்மைகள் பரவி வந்த போதிலும் நம் பட முதலாளிகளென்னவோ 'பரந்த நோக்கம்' உடையவர்களே. மேல் நாட்டுக் கதை, வெளிநாட்டுச் சங்கீதம், அன்னிய பாஷை நடிக நடிகைகள், இப்படி

30-ம் பக்கத்திலுள்ள
வர்ணப் படம்
சாவித்திரி

யாக தமிழ்ப் படங்களில் 80 சத விகிதம் அன்னியச் சரக்காய்த் தானே இருந்து வருகிறது!

எஸ். எஸ். பொன்னுத்துரை (மருதானே, இலங்கை)

பிரபல நக்ஷத்திரம் சாவித்திரி நாளுக்கு நாள் இளைத்து வருவதன் மர்மமென்ன? அவர் என்ன உணவு உட்கொள்ளுகிருர்?

அசாத்தியமாகப் பெருத்து வரும் வேறு சில நடிகைகளுக்கு இந்த ரகஸியத்தை வெளியிடவாம் என்ற எண்ணமோ?

கே. ஏ. ஏகாம்பரம் (குண்ணகம்பூண்டி)

வீரபாண்டிய கட்டபொம்மன் படம் வெளி வருவதாகச் சொன்னுர்களே அப்படம் எப்பொழுது வெளிவரும்? இதில் யார் யார் நடித்திருக்கிருர்கள்?

இதைத் தயாரிக்க ஜெமினி திட்டம் போட்டிருக்கிறது. ஆனல், வேலையொன்றும் தொடங்கியிருப்பதாகத் தெரியவில்லை.

ராஜரத்தினம் (சாலிகிராமம்)

டி. எம். சௌந்தரராஜன், திருச்சி லோகநாதன், ஏ. எம். ராஜா இம்மூவருள் யாருடைய குரல் இனிமை மிக்கது?

முதற் கூறப்பட்டவரின் குரல்தான் என்பது என் அபிப்பிராயம்.

எஸ். சாரு-சரோ (காத்தான்குடி)

ஜெமினி கணேஷ், என். டி. ராமராவ், நாகேஸ்வர ராவ், மனேஹர் இவர்களில் நடிப்பிலும் அழகிலும் சிறந்தவர் யார்?

நடிப்பில் நாகேஸ்வர ராவ்; அழகில் ஜெமினி கணேஷ்.

என். பி. கருப்பையன் (சாம்பல்பூர்)

வைஜயந்திமாலாவுக்கு இப்பொழுது வயதென்னகிறது? அவருக்கு ஏன் இன்னும் விவாஹம் ஆகவில்லை? அவருக்கு ஹிந்திப் படங்களில் அதிக கிராக்கியா? தமிழ்ப் படங்களில் அதிக கிராக்கியா?

மாலாவுக்கு தற்போது தமிழ் நாட்டை விட வடநாட்டிலேயே அதிகப் புகழ் ஓங்கியிருக்கிறது. இருபத்திரண்டு வயது முடிவுற்ற வைஜயந்தி இன்னும் விவாஹம் ஆகாமல் இருப்பதற்காக நீர் மிகக் கவலைப்படுவதன் காரணத்தை நான் ஊகித்துக்கொள்ளுகிறேன்! உமக்கு வயது என்ன ஆகிறது?

ஏ. ராமலிங்கம் (மல்லாகம்)

சிங்களப் படங்களில் தோன்றியுள்ள சில தமிழ் நடிகைகள் ஆபாசமாகக் காட்சியளித்து தமிழர்களுக்கு மானக்கேட்டை உண்டு பண்ணுகிருர்களே? ஏன்?

தமிழ்ப் படங்களில் ஆந்திர நடிகை களவ்வளவு நம் தமிழ் நடிகைகளால் ஆபாசமாய் காட்சியளிக்க முடிவதில்லை என்பது உமக்குத் தெரியுமா?

கே. சுப்பையா (உரும்புராய், இலங்கை)

நான் ஒரு கதையையும் அதற்கு வசனங்களையும் எழுதி வைத்திருக்கிறேன். அதை யாருக்கு அனுப்பலாம்?

கொஞ்ச காலத்திற்கு உம் கதையை நீர் யாருக்குமே அனுப்பாமல் இருப்பதே நலம். தற்போது சினிமா உலகில் காப்பியடிக்கப் படாத கதையேயில்லை; கள்வாடிச் சேர்க்கப்படாத சம்பவமே இல்லை! இந்த நிலையில், நீர் கதையை அனுப்பினல், அதில் உள்ள முக்கிய அம்சங்கள் மட்டும் களவாடப்பட்டு விடக்கூடும்!

ஜி. சுந்தரமூர்த்தி (வடக்கு வடகால்)

''மங்கையர் திலகம்'' படத் தயாரிப்பின் போது...''கதை வசனம் 'கண்ணதாசன்'' என்று விளம்பரப்படுத்தினர்கள், இப்பொழுதோ மூலக்கதை ஒருவர்......வசனம் பலபேர்! இது எதனல்?

ஏதாவது கதைத் திருட்டு நடந்திருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறதோ உமக்கு! அப்படியொன்றும் இல்லை!

ஆர். ராமஸ்வாமி (ஹைதராபாத்)

34 வயதாகியும் கலியாணம் செய்துகொள்ளாமல் இருக்கும் டி. ஆர். ராஜகுமாரியைப் பற்றி நேயர்கள் என்ன நினைப்பார்கள்?

இந்த சொந்த விஷயத்தில் நேயர்கள் என்ன நினைக்கிருர்கள் என்பதைப் பற்றி ராஜகுமாரி கவலைப்படவில்லை.

டி. பி. ராஜூ (ஹோலாலூர்)

இப்போழுது காட்டப்படும் படங்கள் எல்லாவற்றிலும் ''35 எம். எம்.'' என்று காட்டப் படுகிறது. இது எதைக் குறிக்கிறது?

தரத்தில் நிகரற்ற பிளாக்குகள்

தயாரிப்பவர்கள்

கிளீன் அண்ட் பெயரல்



அச்சுவேலைக்கு அவசியமான லைன், ஹாப்டோன்,
இருவர்ண, மூவர்ண பிளாக் தயாரிப்பாளர்கள்.

30, மௌன்ட் ரோடு :: மதருஸ்–2 :: போன்: 84167



எம். ஆர். எஸ். பிக்சர்ஸார் தயாரித்துவரும் "சந்திப்பு" தமிழ்ப் படத்தில் ஜமுனா.

சாதாரணமாக, இப்பொழுது தியேட்டர்களில் நீங்கள் பார்க்கும் படங்களின் பிலிம் 35 மில்லி மீட்டர் அகலம் உள்ளவையே. அதற்குக் குறைந்த அகலமுள்ள—அதாவது 16 மில்லி மீட்டர் அகலமுள்ள பிலிம்களில் கூட படம் பதிவாக்கப்படுகிறது. அவைகளை அதற்கான பிரத்தியேக புரொஜக்டர்களில்தான் போட்டுக் காட்ட முடியும்.

வே. பா. ஸ்ரீனிவாஸன் (திருவல்லிக்கேணி)

"திவான் பகதூர்" சுசீலா, "மஹாத்மா உதங்கர்" விஜயகுமாரி, "விசித்திரவனிதா" குமார்—இவர்கள் தற்போது எந்தப் படங்களில் நடிக்கிறார்கள்?

பேஷ், இவர்கள் பெயரை யெல்லாம் இன்னும் நீர் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீரே!

எம். சுப்ரமண்யம் (சேலம் டவுன்)

மாடர்ன் தியேட்டர்ஸாரின் "மஹேஸ்வரி"யில் சிவாஜி கணேசன் நடிப்பதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். படத்தில் ஜெமினி கணேஷ் அல்லவோ நடித்திருக்கிறார்?

நீர் கூறுவது உண்மைதான். நமது தீபாவளி மலர் வேலை இரவு பகலாக நடந்த சமயத்தில் இத் தவறு கவனக் குறைவாக ஏற்பட்டுவிட்டதற்கு மிக வருந்துகிறேன்.

கே. குமார் (கோபி)

"குலேபகாவலி"யில் எம். ஜி. ராமச்சந்திரன் புலியுடன் சண்டை போடுவது உண்மைப் புலியுடனா?

அது பொம்மைப் புலிதான் என்பதைக் கண்டு கொண்டு பல அன்பர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்களே!

துரை முருகேசன் (காரமடை)

சினிமா நக்ஷத்திரங்கள் எதில் கஞ்சத்தனத்தை அதிகமாய் காட்டுவார்கள்?

பத்திரிகைகளுக்காகப் போட்டோ எடுத்துக் கொடுப்பதில்தான்!

ஆர். விரசாமி (வால்பாரை)

"மருதநாட்டு இளவரசி"யில் நடித்த வி. என். ஜானகி தற்போது ஏன் படங்களில் நடிப்பதில்லை?

அட, ராமச்சந்திரா! அதை ஏன் கேட்கிறீர்! இரண்டு மூன்று படங்களில் அவருக்கு அருமையான சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டன. ஆனால் அவர் எதிர்பார்த்த அளவு முன்னேற வில்லை. இதர விவகாரங்களோ கொஞ்ச நஞ்சப் புகழையும் ஒடுக்கி விட்டன.

எஸ். வி. லக்ஷ்மி (திருவையாறு)

பல வருஷங்களுக்கு முன்பு வெளிவந்த "காமதேனு" படத்தில் நடித்த கே. வத்ஸல், அவரது மனைவி வத்ஸலா, புத்திரி (பேபி) சரோஜா இவர்கள் ஏன் திரையுலகிலிருந்து விலகிவிட்டார்கள்?

இவர்கள் 'நடிப்பைத் தொழிலாகக் கொள்ள வேண்டும்; நக்ஷத்திரப் பதவி

1956-ம் வருஷ காலண்டர்

பிரபல சினிமா நக்ஷத்திரங்களின்
ஆறு மூவர்ணப் படங்கள் கொண்ட

குண்டூசி காலண்டர்

ஆறு தாள்களில்
12 மாத தேதிகள்

★

விலை 12 அணுதான்
[தபால் சார்ஜ் : 7 அணு]

★

"குண்டூசி" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

சொற்ப காலண்டர்களே
தயாராகியுள்ளன. உங்கள்
காலண்டருக்கு முந்துங்கள்

ஏஜண்டுகள் முன்பணத்துடன் ஆர்டர் செய்யவும்

'குண்டூசி' காரியாலயம், 26, கிடங்கு தெரு, சென்னை

பெற வேண்டும்'—என்ற நோக்கத்துடன் சினிமா உலகில் பிரவேசித்தவர்கள் அல்ல. ஆதலால்தான் ஓரிரண்டு படங்களுக்குப் பிறகு அவர்கள் தாங்களாகவே மறைந்து விட்டனர்.

பசுபதியப்பா (காரமடை)

திரை உலகில் உமது முதல் எதிரியார் ?

கலைத்திறன் கடுகளவும் இல்லாத நபர்தான் !

*   *   *

சாவித்திரி, பத்மினி இருவருள் யார் சிறந்த அழகி ?

பத்மினிதான் என்பதை நான் கூற வேண்டுமா என்ன ?

ந. கிருஷ்ணன் (குரும்பலூர்)

"என் வீடு'' படத்தைத் தயாரித்த நாகய்யா தற்போது எந்தப் படத்தைத் தயாரித்து வருகிறார் ?

அவர் தற்போது எந்தப் படத்தையும் தயாரிக்கவில்லை.

ஆர். ராதா (செகந்தராபாத்)

சாவித்திரிக்கு கலியாணம் ஆகிவிட்டதா?

இல்லை. கலியாண விஷயத்தை அவர் தம் சினிமா வாழ்க்கையின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கி யிருக்கிறார் !

கே. பாஷா மொய்தீன் (ஆத்தூர்)

பெண்மை சீறுவதும், ஆண்மை அஞ்சுவதும் எப்பொழுது ?

போட்ட 'புள்ளி' தவறிவிடும்போது!

சு. ரு. சா. மணி (கோயமுத்தூர்)

எம். ஏ. வி. பிக்சர்ஸார் ''பாணபுரத்து வீரன்'', ''ராஜ பக்தி'', ''சம்பூர்ண ராமாயணம்'' இம் மூன்று படங்களை அறிவித்திருக்கிறார்கள். இதில் எதை முதலில் தயாரிக்கப் போகிறார்கள்?

''சம்பூர்ண ராமாயண''த்தையே முதலில் அவர்கள் தயாரிக்கப் போவதாக அறிகிறேன்.



எஸ். வரலக்ஷ்மி

"விதி வலிது", "நாடகமே உலகம்—நாளை நடப்பதை யாரே அறிவார்?", "எல்லாம் அவன் செயல்"—இப்படியெல்லாம் இந்தக் காலத்தில் ஒருவர் சொன்னால் அவரை மற்றவர் உற்றுக் கவனிக்கத் தொடங்கிவிடுவர். "இவன் யாரடா பத்தாம் பசலி!" என்று கேலி செய்யவும் துணிவார்கள்.

நம் முன்னோர்கள் தங்கள் முதிர்ந்த அநுபவத்தின் பேரில் சொல்லிப்போன இதுபோன்ற பல உண்மைகள் என்னவோ உண்மைகளாகவேதான் இருக்கின்றன. வெளிப்படையாக அவற்றை அங்கீகரிப்பது தற்கால நாகரீகத்திற்கு உகந்தது அல்ல என்று வேண்டுமானால் கருதப்படலாம். ஆனால், தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரின் உள்ளமும் இந்த உண்மைகளை உணரவே செய்கிறது. சினிமா உலகில் திடீர் திடீரென்று—எதிர்பாராத வகையில்—பலர் நக்ஷத்திரங்களாவதற்கும், மங்கி மறைவதற்கும் "விதி", "அதிர்ஷ்டம்" இவைகளைத் தவிர வேறு என்னதான் காரணம் கூற முடியும்?

நக்ஷத்திரங்களின் வாழ்க்கையில்தான்—கற்பனைக் கதைகளில் படிப்பது போன்ற—எவ்வளவு அற்புத சம்பவங்கள்? இன்று சினிமாவில் பிரபல நக்ஷத்

லக்ஷ்மிகாந்தா ★ ★

வாழ்க்கை வர்ணனை



திரங்களாகப் பிரகாசிக்கும் ஒரு சிலர் ஒரு காலத்தில் வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்து கொள்ளவும் முயன்றிருக்கிறார்கள். ஏதோ ஒரு சக்தி குறுக்கிட்டு அவர்களை மரணத்தினின்றும் மீட்டிருக்கிறது. அந்த நிலையில் அவர்கள் "தாங்கள் பிற்காலத்தில் சினிமாவில் நடிப்போம்" என்று வெறும் கனவாவது கண்டிருக்க முடியுமா?

உதாரணமாக, "எங்கோ தெருக்களில் அனாதையாய் பிச்சை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்; அல்லது ஒரு அனாதை விடுதியில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இந்த சினிமா வாழ்வெல்லாம் எனக்கு வாய்க்கும் என்று நான் கனவிலும் நினைத்ததில்லை!" என்று தமிழ் தெலுங்குப் படங்களில் நடன—நடிகையாய் விளங்கும் லக்ஷ்மி காந்தா கூறியதைக் கேட்டதும், என் வாய் லேசாக, "எல்லாம் ஈசன் செயல்" என்று முணுமுணுத்தது!

பெல்லாரி, கடப்பை, கர்நூல் முதலிய ஜில்லாக்கள் வெய்யில் அதி உக்கிரமாய் காயும் பிரதேசங்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும், அந்த பெல்லாரியில் பல வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு அபூர்வ சம்பவத்தை நான் இப்பொழுது விவரித்துக் கூறப் போகிறேன்.

கோடையிலும் கொடுங் கோடை! கடும் பகல்! சூரிய வெப்பம் தாங்க முடியாமல் ஜனங்கள் தவியாய் தவிக்கிறார்கள். துணியை நனைத்து உடம்பிலும் தலையிலும் போட்டுக் கொள்ளுவதற்குள் காய்ந்துவிடுகிறது. வெப்பத்தைத் தணிப்பதற்காகக் கூரை மீது வீசிக் கொட்டப்படும் குளிர்ந்த தண்ணீர் கீழே வருவதற்குள் வெந்நீராக மாறிவிடுகிறது! பனை ஓலை விசிறியிலிருந்தோ அனல் காற்றே வீசுகிறது. வெளியே



தகிக்கும் வெய்யிலை வெறுமனே பார்த்தாலே கண் பொசுங்கிவிடும் போலிருக்கிறது! இந்த நிலையில் யாராவது வெளியே புறப்படத் துணிவரா? ஒரு வயதான கிழவி காலில் துணியைச் சுற்றிக்கொண்டு புறப்படத் தான் செய்தாள்! பாவம், அவளுக்குத் தவிர்க்க முடியாத ஏதோ அவசர வேலை இருந்தது.

அவள் கொஞ்சதூரம் நடுத்தெருவில் சென்றதும், இரண்டு மூன்று வயதுக்குட்பட்ட ஒரு பெண் குழந்தை 'குய்யோ முறையோ' என்று கதறிக்கொண்டு எங்கிருந்தோ ஓடிவந்து அவள் காலில் விழுந்தது. கிழவி குழந்தையை வாறி எடுத்தாள்; ஒரு மர நிழலுக்குச் சென்று, அதன் அழுகையை ஓயவைத்தாள். சாயங்காலம் வரையில் கிழவி அங்கேயே குழந்தையுடன் இருந்தாள். குழந்தையைத் தேடிக்கொண்டு யாருமே வாவில்லை. பிறகு குழந்தையுடன் வீட்டுக்குச் சென்றாள். இரவு கழிந்தது; மறு நாளும் வந்தது. அப்பொழுதும் குழந்தையைத் தேடிக் கொண்டு எவருமே வரவில்லை. அது மட்டுமா: குழந்தை காணாமற்போய்விட்டதாக ஊரில் பேச்சுக்கூட இல்லை! ஒரு நாள்; பத்துநாள்: ஒரு மாதம் கூட ஆகிவிட்டது. குழந்தையின் உரிமையாளர்கள் தேடிக்கொண்டு வரவே யில்லை.

இதற்காக கிழவி வருத்தப்படுவதற்குப் பதில் சந்தோஷமே அடைந்தாள். வெகு நாட்களாக குழந்தை இல்லாத குறையைத் தீர்ப்பதற்கு இக் குழந்தை வரப் பிரசாதம் போலல்லவா கிடைத்திருக்கிறது அவளுக்கு! அது பிறர் குழந்தையாயிற்றே என்ற எண்ணம் கிழவிக்குத் துளிக்கூடத் தோன்றவில்லை. தன் சொந்தப் பேத்திபோலவே வெகு வாஞ்சையுடன் அதை வளர்க்க

முற்பட்டாள். தன் மனதைக் காந்தமெனக் கவர்ந்துவிட்ட அக்குழந்தையின் முகத்தில் லக்ஷ்மி கடாக்ஷம் ததும்புவதாகத் தோன்றியது கிழவிக்கு. "லக்ஷ்மி காந்தம்" என்று ஒரு முறை—இருமுறை—பன்முறை கூப்பிட்டாள்! அதுவேக் குழந்தையின் பெயர் ஆகிவிட்டது!

உரிய வயதில் லக்ஷ்மிகாந்தா பள்ளியில் சேர்க்கப்பட்டார். பெல்லாரியில் உள்ள சர்க்கார் செகண்டரி பெண் பாடசாலையில் அவர் மூன்றும் பாரம் வரையில் படித்துத் தேறினர். பள்ளியில் படித்தபடியே அவர் சத்தியநாராயண மூர்த்தி என்பவரிடம் நடனம் ஆடவும் பயிற்சி பெற்றார். பள்ளிக்கூட நாடகங்கள் சிலவற்றில் அவர் நடிக்கவும் முற்பட்டார். எதிர்கால வாழ்வின் முதல் வித்து அது முதல் முளைவிடத் தொடங்கியது.

லக்ஷ்மிகாந்தா பள்ளியை விட்ட சமயத்தில் இரண்டாவது மகாயுத்தம் நடந்து கொண்டிருந்தது. பிரபல நடிகர் பெல்லாரி ராகவாச்சாரியார் இராணுவத்தினரின் பொழுது போக்கிற்காகப் பல நாடகங்களைத் தயாரித்து நடிக்க முற்பட்டார். அந்த நடிக கோஷ்டியில் லக்ஷ்மிகாந்தாவும் சேர்ந்து கொண்டு பல நாடகங்களில் நடித்துவிட்டு வந்தார்.

லக்ஷ்மி காந்தா கன்னிப் பருவம் அடைந்ததும் கிழவியின் உண்மை சொரூபம் வெளிப்படலாயிற்று. 'காந்தா தன் இஷ்டம்போல் நடந்தாக வேண்டும்' என்று அவள் வற்புறுத்த ஆரம்பித்தாள்! காந்தாவுக்குக் கிழவியின் 'இஷ்டம்போல்' நடக்க மனமில்லை. "கிழவி என்னை மிக அன்பாக வளர்த்ததெல்லாம் இந்த நோக்கத்துடன் தானா?" என்று அவர் அவளை வெறுக்கத் தொடங்கினர். "கூடிய விரைவில் வீட்டை விட்டே வெளியேறி விட வேண்டும்" என்று அவர் தீர்மானித்துக் கொண்டார்.

இப்படி அவர் மனம் வருந்திக் கொண்டிருந்த சமயத்தில் — உலகப் பிரசித்தி பெற்ற நடன மேதை உதய சங்கர் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்த ஒரு "தேவை" விளம்பரம் அவர் கண்களில் பட்டது. உதய சங்கர்" தாம் இமயமலைச் சாரலில் உள்ள அல்மோராவில் ஒரு நடனப் பள்ளியை ஆரம்பித்துள்ளதாகவும் அதில் எல்லாவித நடனங்களையும் பயில விருப்பமுடையவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம்" என்று அவ்விளம்பரம் கூறியது.

அதைப் பார்த்த லக்ஷ்மி காந்தா பேரானந்தம் அடைந்தார். கிழவியின் பிடியிலிருந்து தப்புவதற்கு—உதய சங்கரின் பள்ளியில் சேர்ந்து விடுவதே சிறந்த வழி என்று அவருக்குத் தோன்றியது. அதன்படியே, தம் குருவான நாராயண மூர்த்தியையே ஒரு விண்ணப்பம் எழுதித் தரச் சொல்லி அதை உதய சங்கருக்கு அனுப்பி விட்டார். இது நடந்தது 1944-ம் வருஷத்தில்.

உதயசங்கர் "கல்பனா" என்ற ஒரு நடனப் படத்தைத் தயாரித்து வெளியிட்டதும், அது ஜெமினி ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்ட படம் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

[தொடர்ச்சி 87ம் பக்கம்]

புதுப் படங்கள்

ஏற்கெனவே தமிழ் நாட்டில் ஐம்பதுக்கும் மேற்பட்ட படங்கள் தயாராகி வருகின்றன! அவைகளில் பெரும் பகுதியானவை ஒன்றிரண்டு தின ஷூட்டிங் மட்டுமே நடைபெற்ற அளவிலேயே இருந்து வருகின்றன. அவைகளைத் தவிர இப்பொழுது மேலும் பல படங்கள் தயாரிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த விஜயதசமி தினத்தன்று கூட பல படங்களுக்கு பூஜை போடப்பட்டுள்ளது

சேகர் ஆர்ட் பில்ம் எண்டர்பிரைஸர்ஸ் என்ற புதிய படத் தயாரிப்புக் கம்பெனி அன்று "மணிமேகலை" என்ற படத்திற்கான பூஜை நடத்திற்று. ரேவதி ஸ்டுடியோவில் தயாராக விருக்கும் இப்படத்தை வி. எஸ். ராகவனும், முருகதாஸாவும் கூட்டாக டைரெக்ட் செய்வார்கள். படத்தில் உதயகுமாராக சிவாஜி கணேசனும், மணிமேகலையாக பத்மினியும் நடிக்கக் கூடுமெனத் தெரிகிறது.

ஏற்கெனவே "தொழிலாளி" என்ற படத்தைத் தயாரிப்பாக இருந்த எவரெஸ்ட் பிக்சர்ஸார் "கவி காளிதாஸை"ப் படமாக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். காளிதாஸாக இப்படத்தில் சிவாஜி கணேசன் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். இப்படத்தின் கதை வசனத்தை அரு ராமநாதன் எழுதுகிறார். படத்தை ராமண்ணா டைரெக்ட் செய்வார்.

ஏவி. எம்.—எஸ். கே. பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பாக ஒரு படம் உருவாகி வருகிறது. பண்டரிபாய், ஸஹஸ்ரநாமம் நடித்து வருகின்றனர்.

மினர்வா பிக்சர்ஸார் "சாரங்கதரா"வைப் படமாக்க ஆரம்பித்து விட்டனர். இப்படத்தில் சித்திராங்கியாக பானுமதியும் சாரங்கதரனாக சிவாஜி கணேசனும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர். மற்றும் இப்படத்தில் 'வில்லி'யாக நடிக்க ராஜசுலோசனா ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்டார். இப்படத்தின் கதை வசனத்தை எஸ். டி. சுந்தரம், எழுதுகிறார். ரேவதி ஸ்டுடியோவில் தயாராகும் இப்படத்தை வி. எஸ். ராகவன் டைரெக்ட் செய்கிறார்.

"நானே ராஜா" படத்தைத் தயாரித்து வரும் கல்பனா பிக்சர்ஸார் அடுத்தபடி "ரம்பையின் காதலை"ப் படமாக்குவதற்கான முயற்சிகளை முடித்து வருகின்றனர். படத்தின் கதை வசனத்தை தஞ்சை ராமய்யாதாஸ் எழுதியிருக்கிறார். அஞ்சலி தேவி, எம். என். ராஜம், ஸி. கே. சரஸ்வதி, பாலய்யா, சந்திரபாபு, ஸஹஸ்ரநாமம், நம்பியார் எஸ். வி. சுப்பய்யா ஆகியோர் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளனர்.

நடிகர் எம். ஆர். ராதா சொந்தத்தில் ஒரு படத் தயாரிப்புக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். எம். ஆர். புரொடக்ஷன்ஸ் என்ற அக்கம்பெனியின் முதல் தயாரிப்பாக இருக்கும் "நடிகன்". இப்படத்தின் கதை-வசனத்தை பி. ஏ. குமார் என்பவர் எழுதியிருக்கிறார். ஆர்ட் டைரெக்ஷன் பொறுப்பு ஆர். மாதவனிடமும், டைரெக்ஷன் பொறுப்பு வி. கிருஷ்ணனிடமும் விடப்பட்டிருக்கின்றன. தயாராக விருக்கும் இப்படத்தில் எம். ஆர். ராதா, என். எஸ். கிருஷ்ணன், ஜி. வரலக்ஷ்மி, டி. ஏ. மதுரம், பி. எஸ். ஞானம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிப்பார்கள்,

ஏவி. எம். ஸ்டுடியோஸார் அடுத்து பிரம்மாண்டமான முறையில் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிக்கத் தீர்மானித்து அதற்கான வேலைகளில் முனைந்திருக்கின்றனர். சிலப்பதிகாரத்தை "பூம்புகார்" என்ற பெயரில் வேறு ஒரு படாதிபதியுடன் கூட்டாகத் தயாரிக்கப் போகிறார்கள். இப்படத்தின் கதையைத் திரைக்கு ஏற்ற முறையில் அமை

த்து வசனங்களையும் எழுதியிருக்கிறார் மு. கருணாநிதி. கோவலனை சிவாஜி கணேசன் நடிக்கும் இப்படத்தில் நடிக்க மற்றும் பல நக்ஷத்திரங்கள் ஒப்பந்தம் ஆகலாமெனத் தெரிகிறது. படத்தை கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ட் செய்கிறார்கள்.

இது நாள் வரை விநியோகத் துறையிலேயே கவனம் செலுத்தி வந்த பெல் பிக்சர்ஸார் படத் தயாரிப்பிலும் இறங்கத் தீர்மானித்துள்ளனர். இவர்கள் "துர்க்கா" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். "மார்க் ஆப் ஜாரோ" என்ற ஆங்கிலக் கதையைத் தழுவி திரைக் கதையை அமைத்து வசனங்களை எழுதியுள்ளாராம். ஏ.கே. வேலன். படத்தை கே. ராம்னாத் டைரெக்ட் செய்யக் கூடுமெனத் தெரிகிறது.

டைரெக்டர் கே. எஸ். மணியின் முயற்சியில் ஜனித்திருக்கிறது வேல் புரடக்ஷன்ஸ் என்ற படக் கம்பெனி, இக்கம்பெனியார் "கண் திறந்து பார்" என்ற படத்தைத் தயாரிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் முனைந்திருக்கின்றனர். இப்படத்தின் வசனத்தை ஏ. கே. வேலன் எழுதுவாரென்றும் சங்கித டைரெக்ஷன் ஜி. ராமனாதனிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிகிறது. கே. எஸ். மணி டைரெக்ஷனில் வளரவிருக்கும் இப்படத்தில் நடிக்க கே. ஆர். ராமசாமி ஒப்பந்தமாகி விட்டதாகவும் தெரிகிறது.

பரணி பிக்சர்ஸார் அடுத்தபடி இரு தமிழ்ப் படங்களைத் தயாரிக்கும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அவைகளில் ஒன்று "ரத்னமாலா" ஆகும். ஏற்கெனவே இப் படத்தை அவர்கள் தெலுங்கில் தயாரித்துள்ளார்கள். மற்றொன்றுக்கு இன்னும் பெயரைத் தீர்மானிக்கவில்லை. அப்படத்தின் கதை "பிரிஸினர் ஆப் செண்டா" என்ற ஆங்கிலப் படக் கதையைத் தழுவியதாக இருக்குமாம். மேற்படி இரு படங்களின் வசனத்தையும் ஏ. கே. வேலவன் எழுதுவார். இரு படங்களையும் ராமகிருஷ்ணாவே டைரெக்ட் செய்வார்.

கணேசன் பிக்சர்ஸ் என்ற புதிதாகத் தோன்றியுள்ள படக் கம்பெனி தனது முதல் தயாரிப்பாக "மலைராணி"யைத் தயாரிக்குமாம். "மலைராணி"யின் கதை வசனத்தை பி. ஏ. குமார் என்பவர் எழுதியிருக்கிறாராம். இப் படத்தின் பாடல்களை கு. மா. பாலசுப்பிரமணியம் எழுதுவாராம். இப் படத்தை ஒய். வி. ராவ் டைரெக்ட் செய்யக் கூடுமென்றும், படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், வீரப்பா, என். எஸ். கிருஷ்ணன், பானுமதி, மதுரம் ஆகியோர் நடிக்கக்கூடும்.

நடிகை பண்டரிபாய் தம் சொந்தத்தில் தயாரித்த "சக்குபாயை" தமிழாக்க திட்டமிட்டு அதற்கான வேலையையும் ஆரம்பித்திருக்கிறார்.

கணேஷ் மூவிடோன் கம்பெனியார் அடுத்து "ராணி பவானி" என்ற படத்தைத் தயாரிப்பார்களெனத் தெரிகிறது.

நடிகை எஸ். ஆர். லக்ஷ்மியின் முயற்சியில் தோன்றியிருக்கிறது எஸ். ஆர். எல். பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனி. இக்கம்பெனியார் "தர்ம பத்தினி"யைப் படமாகத் தயாரிக்கப் போகிறார்கள். "தாசி மகளானாலும் சந்தர்ப்பம் கிடைத்தால் அவள் குலமகளாக வாழ முடியும்" என்பதை அடிப்படைக் கருத்தாகக் கொண்டு கதையை அமைத்து வசனங்களையும் எழுதியிருக்கிறார். ஏ. எல். நாராயணன். சிவாஜி கணேசன், பத்மினி, பண்டரி பாய் ஆகியோர் நடிக்கவிருக்கும் இப் படம் வாஹினிஸ்டுடியோவில் தயாராகுமாம். படத்தை டைரெக்ட் செய்ய ரகுநாத் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்.

விளம்பரத் துறையிலே பிரபலமான பாரத் ஸ்டுடியோவின் அதிபரும், பக்திமானுமான வி. நமசிவாயம் புத்தபிரானின் வாழ்க்கையைப் படமாக்கத் தீர்மானித்திருக்கிறார். அவர் படத்தை நல்ல முறையிலே, தகுந்த ஆதரங்களுடன் தயாரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்-புத்த மதம் பற்றி ஆராய்ச்சிகளைச் செய்துள்ள அறிஞர்களை யெல்லாம் அழைத்து யோசனைகளைக் கேட்டு வருகிறார்—இப்படத்தை டைரெக்ட செய்ய பிரஸாத் ஒப்பந்தம் செய்யப்பட்டு விட்டார். அதற்குமுன் வேறு ஒரு சமூகப் படத்தையும் தயாரிக்க அவர் திட்டமிட்டிருக்கிறார்.

உமா பிக்சர்ஸார் "சக்ரவர்த்தித் திருமகள்" என்ற தமிழ்ப் படத்தைத் தயா

விஜயா புரடக்ஷன்ஸாரின் தயாரிப்பான "குணசுந்தரி" தமிழ்ப் படத்தில் ஜெமினி கணேசனும், சாவித்திரியும் தோன்றும் ஒரு காட்சி.

ரிக்கத்தொடங்கியுள்ளனர். இதன்கதை பி. ஏ. குமார் என்பவரால் எழுதப்பட்டுள்ளது. வசனங்களை "இளங்கோவ"னும், பாடல்களை, கு. சா. கிருஷ்ண மூர்த்தி, கு. ம. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் எழுதுகிறார்கள். படத்தின் சங்கீத டைரெக்ஷனை ஜி. ராமனாதனும், டைரெக்ஷனை ப. நீலகண்டனும் கவனிக்கிறார்கள். படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், என். எஸ். கிருஷ்ணன், எஸ். வரலக்ஷ்மி, அஞ்சலி, மதுரம் ஆகப் பல நட்சத்திரங்கள் நடிக்க படம் வாஹினி ஸ்டுடியோவில் தயாரிக்கப்படுகிறது.

சாரதி பிலிம்ஸார் தயாரித்துள்ள "ரோஜுலுமாராயி" என்ற தெலுங்குப் படம் பிரமாத வெற்றியை அடைந்துள்ளது. இப்படத்தை "காலம் மாறிப் போச்சு" என்ற பெயரில் தமிழ்ப் படமாகத் தயாரிக்கிறார்கள். கவர்னர் ஸ்ரீ பிரகாசா தலைமையில் இப் படத்தின வெள்ளி விழா சென்னையில் சென்ற மாதம் கொண்டாடியபோது அதன் தயாரிப்பாளர்கள்—இந்த விஷயத்தை அறிவித்தனர்— இப்படத்தில் சிவாஜி கணேசன், அஞ்சலி, தங்கவேலு, பாலய்யா ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

சேலம், அசோகா பிக்சர்ஸார் அடுத்த படி "பூலோக ரம்பை"யைப் படமாக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இப் படத்தில் பத்மினி, சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் மற்றும் சில நக்ஷத்திரங்கள் நடிக்கக் கூடுமெனத் தெரிகிறது.

தற்போது 'சதாரம்' தமிழ்ப் படத்தைத் தயாரித்து வரும் கஸ்தூரி பிலிம்ஸார் தங்களது அடுத்த படமான "சத்தியவான் சாவித்திரி"க்கு பூஜை போட்டுள்ளனர். இப் படத்தில் ஜெமினி கணேசன், பத்மினி, கிருஷ்ணன், மதுரம் ஆகப் பலர் நடிக்கக்கூடுமெனத் தெரிகிறது. வி. ஸி. சுப்பராமன் படத்தை டைரெக்ட் செய்வார்.

சிவகாமி பிக்சர்ஸார் "புதுமை பித்தன்" என்ற படத்தைத் தயாரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஆங்கிலப் படமாக வந்துள்ள "மார்க் ஆப் ஸாரோ" என்ற படக் கதையைத் தழுவியிருக்கும் இப்படக் கதை திரைக் கதையையும் வசனத்தையும் மு. கருணாநிதி எழுதுகிறார். பாட்டுகளை ராமய்யா தாஸ் எழுதுகிறார். எம். ஜி. ராமச்சந்திரன் பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்தை ராமண்ணா டைரெக்ட் செய்கிறார் சந்திரபாபுவும் இப் படத்தில் நடித்து வருகிறார். படம் பிரகாஷ் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

"ஜெனோவா" என்ற படத்தை மலையாளம், தமிழ் இரு மொழிகளிலும் தயாரித்த சந்தரா பிக்சர்ஸில் சம்பந்தப்பட்டிருந்த எஸ். எம். ராஜாவின் முயற்சியில் கலா பிலிம்ஸ் என்ற படத் தயாரிப்பு ஸ்தாபனம் ஆரம்பமாகியுள்ளது. இக்கம்பெனியின் முதல் தயாரிப்பாக இருக்குமாம் "ஞானோதயம்". பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்க விருக்கும் இப்படத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இக்கதை சரித்திர சம்பந்தமான கதை எனத் தெரிகிறது.

"வைரமாலை", "மங்கையர் திலகம்" ஆகிய படங்களைத் தயாரித்த ஏ. வி. பிள்ளை, அடுத்தபடி 'பாக்யவதி" என்ற படத்தைத் தயாரிப்பதில் முனைந்திருக்கிறார். இப்படத்தின் கதை வசனத்தை (ராவே) ரா. வெங்கடாசலம் எழுதியிருக்கிறார். வாஹினி ஸ்டுடியோவில் தயாராக விருக்கும் இப்படத்தை பிரஸாத் டைரெக்ட் செய்வார், சிவாஜி கணேசன், கே. சாரங்கபாணி, தங்கவேலு, அஞ்சலி தேவி, எம். என். ராஜம், ராஹினி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிப்பார்கள்.

"மாமன் மகள்" படத்தைத் தயாரித்துத் திரையிட்டுள்ள டைரெக்டர் ஆர். எஸ். மணி அடுத்து "பெண் தெய்வம்" என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

'வைஜயந்திமாலா தமிழ்ப் பட உலகையே மறந்து விட்டாரோ' என்ற ரஸிகர்களின் ஏக்கம் தீரும் காலம் வந்து விட்டது. அவர் மூன்று தமிழ்ப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். ஜூபிலி பிக்சர்ஸார், அவரைக் கதாநாயகியாகக் கொண்டு "மர்ம வீரன்" என்ற படத்தைத் தயாரிக்கிறார்கள். "மார்க் ஆப் ஸாரோ" என்ற பிரபல ஆங்கில படக் கதையைத் தழுவியதாக இருக்குமாம் இப்படத்தின் கதை. படத்தின் வசனங்களை ஏ. எல். நாராயணன் எழுதுகிறார். பாடல்களை பாபநாசம் சிவன் மருதகாசி ஆகிய இருவரும் எழுதுகின்றனர். சங்கித டைரெக்ஷனை எஸ் வி வெங்கட்ராமன் வேதாசலம் ஆகிய இருவரும் கவனிப்பார்கள். இப்படத்தில் வைஜயந்தி தவிர, மற்றும் ஸ்ரீராம், வீரப்பா, தங்கவேலு, சுதர்ஸன், ஜி. வரலக்ஷ்மி, குசலகுமாரி ஆகியோரும் நடிப்பார்கள். ஸ்டன்ட் சோமுவுக்கும் அவர் கோஷ்டியாருக்கும் இப்படத்தில் நிறைய வேலையிருக்குமாம். படத்தை ரெஹ்மான் டைரெக்ட் செய்கிறார்.

சாமுண்டீஸ்வரி பிக்சர்ஸார் வைஜயந்திமாலா-சிவாஜி கணேசன் ஜோடியைக்கொண்டு "ராஜ நர்த்தகி" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இப்படத்தை டைரெக்ட் செய்ய வி. எச். நாராயண மூர்த்தி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்.

கோவை எம். ஏ. வி. பிக்சர்ஸார் தங்கள் மாபெரும் படமான "ராமாயணத்"தின் படப் பிடிப்பு வேலையை ஆரம்பிக்கும் முன் ஒரு குட்டிப் படத்தைத் தயாரித்துத் திரையிட முயற்சி செய்து வருகிறார்கள். ஏ. பி. நாகராஜன் எழுதியுள்ள வறுந்தர வாழ்க்கையை சூழ்நிலையாகக் கொண்ட கதையை "செங்கமலத் தீவு" என்ற பெயரில் அவர்கள் படமாக்கப் போகிறார்களாம். கே. சோமு டைரெக்ஷனில் இப் படம் தயாராகும்.

ஆர். ஆர். பிக்சர்ஸார் "காத்தவராயன் கதை" என்ற பெயரில் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். இப்

படத்தை ராமண்ணா டைரெக்ட் செய்வார்.

"டாக்டர் சாவித்திரி'யைத் தயாரித்துத் திரையிட்டுள்ள அருணா பிலிம்ஸார் அடுத்து "தசாவதாரம்" தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இப்படத்தை அவர்கள் தமிழ் தவிர, தெலுங்கு கன்னடம் ஆகிய இரு பாஷைகளிலும் கூடத் தயாரிக்கப் போகிறார்கள்.

"கற்கோட்டை"யைத் தயாரித்த கெம்ப்ராஜ் தமது அடுத்த தயாரிப்பாக "பூகைலாஸ்" கதையை உருவாக்கப் போகிறார். இக்கதையை அவர் தமிழ்-தெலுங்கு-கன்னடம் ஆகிய மூன்று பாஷைகளிலும் தயாரிக்கப் போகிறார். சிவாஜி கணேசன், பானுமதி, ரேலங்கி, கெம்ப்ராஜ் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படங்களை அவரே டைரெக்ட் செய்வார்.

ஜூபிடர் பிக்சர்ஸார் நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் தமிழ்ப் படத் தயாரிப்பில் கவனம் செலுத்தப் போகின்றனர். அவர்கள் அடுத்து ஜூபிடர்-ஏ. எல். எஸ். கூட்டுத் தயாரிப்பாக "கன்னியின் சபதம்" என்ற படத்தைத் தயாரிக்கப் போகின்றனர். படத்தின் கதையை ஜாவர் சீதாராமன் எழுதுவாரென்றும் வசனங்களை ஏ. கே. வேலன் எழுதுவாரென்றும் தெரிகிறது. எஸ். பாலச்சந்தர் டைரெக்ஷனில் இப்படத்தில் பல நக்ஷத்திரங்கள் நடிக்கக் கூடும்.

டைரெக்டர் பி. எஸ். ரங்கா தற்போது தயாரித்துவரும் "தெனாலிராமனை"த் தயாரித்துத் திரையிட்டதும், உடனடியாக "சத்ரபதி சிவாஜி"யைப் படமாக்கத் தீர்மானித்திருக்கிறார். அப்படத்தில் சிவாஜியாக சிவாஜி கணேசன் நடிப்பார்.

கதாசிரியர்-வசன கர்த்தாவான எஸ். டி. சுந்தரம் சில நண்பர்களுடன் கூட்டாகச் சேர்ந்து 'ஆண்டவன் புரொடக்ஷன்ஸ்' என்ற படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்.

தாம்பூலப் பிரியர்களுக்கு ஆனந்தம் அளிப்பது

ராமு புகையிலை

புது மணத்துடன் புகழ் பெற்று வருகிறது

எல்லாக் கடைகளிலும் கேட்டு வாங்குங்கள்

தயாரிப்பவர்கள்:

ராமு புகையிலை கம்பெனி

புதுப்பாளைத் தெரு :: :: கும்பகோணம்

கமலாவின் கடிதம்

எஸ். கல்பனா

அன்புள்ள...........

நீங்கள் இப்போது பெயரை மாற்றிக் கொண்டு சினிமாவில் சேர்ந்து கொட்ட மடித்தாலும் எனக்கு நீங்கள் புழைய தியாகு தானே? 'டில்லிக்கு ராஜாவானாலும் பள்ளிக்குப் பிள்ளை தானே' என்ற பழமொழி போல் உங்கள் பெயர் இப்போது மணிவண்ணனாக மாறியிருந்த போதிலும், உங்களுக்குத் தாய் இட்ட பெயர் தியாகு தானே!

நான் தங்கள் பெயரை மனத்தினாலும் வாயாலும் உருப்போட்டுக் கொண்டிருந்த போது என் தாயார் என்னைப் பார்த்து, "அசட்டுப் பெண்ணே, கணவன் பெயரை இப்படித்தான் வாயால் சொல்லிக்கொண்டு திரிவாளா? நாங்கள் சொல்லி அறியோம். அதனால் அன்பில்லாமல் போய் விட்டதா?" என்று கேட்டாள். அன்றையில் இருந்து என் வாய் மௌனமாகி விட்டது. ஆனால் என் மனம் மட்டும் உங்கள் பெயரை லக்ஷோப லக்ஷம் தரம் உருப்போட்டுக் கொண்டிருந்தது அப்படிப்பட்ட தியாகு என்ற அந்த அழகான பெயரை விட எனக்கு மணிவண்ணன் என்ற பெயர் பிடிக்கவில்லை. அதிலும் என் பெயர் கமலம். கமலாம்பாள் — தியாகராஜன் என்ற பெயர் தான் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. அதை விட்டுவிட்டு மணிவண்ணனாவது மைக் கண்ணனாவது?

உங்களுக்கு திரைப்பட உலகத்தில் ஆயிரம் காதலிகள் இருக்கலாம். ஆனால் அவர்களெல்லாம் பணம் வாங்கிக் கொண்டு உங்களிடம சில மணி நேரம் நாயகி பாவத்தில் தோன்றி நடிக்கிறார்கள். ஆனால் நான் அப்படியில்லை என்ற விஷயம் உங்களுக்குத் தெரிந்தது தான். அக்னி சாக்ஷியாக, அடம் பிடித்து உங்கள் அருமையான கரங்களைப் பற்றிய பாக்கியசாலி நான். இருந்தபோதிலும் உங்களுக்கும் எனக்கும் தான் எவ்வளவு ஏற்றத் தாழ்வு? பழைய ஞாபகங்களை மூட்டி உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் இந்த பாக்கியசாலியை மன்னித்து விடுங்கள்.

என் சித்தப்பா பெண் கல்யாணத்துக்காக நான் அந்த கிராமத்துக்கு வரும் போது எனக்கு வயது பதினெட்டு. இன்டர் பரீட்சையில் தேறி, படிப்புக்கு ஒரு முட்டை கட்டிவிட்டு, அப்போது தான் வெளி உலகத்தில் என் சிந்தனையைத் திருப்பிய நான் அந்த கிராமத்தைக் கண்டு ஆச்சர்யமடைந்தேன். எல்லோரும் என்னைக் கல்யாணத்துக்காக வந்ததாகத் தான் நினைத்துக் கொண்டிருப்பார்கள். அது பெரும் தவறு.

ஏன்? நீங்கள் கூட அப்படித் தான் எண்ணிக் கொண்டிருந்திருப்பீர்கள். சதா பட்டணத்து வாசத்திலும், படிப்ப படிப்பு என்ற சிந்தனையிலும் மூழ்கியிருந்த நான், கிராமத்தைக் கண்டதும் அதன் ரமணியமான இயற்கை எழிலில் என் மனதைப் பறி கொடுத்தேன்.

வந்த இடத்தில் கல்யாண சந்தடியும், சம்பந்திமார்கள் சண்டையும் சேர்ந்து என் மனதைக் குழப்பி ஒன்றையும் கவனிக்க முடியாமல் செய்து விட்டன. கல்யாணம் ஆன மூன்றும நாள் ஊரைச் சுற்றிப் பார்க்கும் நிமித்தம் என் அத்தைப் பெண் பார்வதியுடன் கிளம்பினேன்.

தெருக் கோடி அடைந்ததும் அந்த ஊர்க் குழந்தைகளின் பள்ளிக்கூடம் என் கண்களில் பட்டது. அது சிறு கட்டிடம் தான். ஆனால் மிகவும் அழகாக இருந்தது நகரமனமில்லாமல்அதையே

சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த போது தான் நீங்கள் அந்த அழகான கட்டிடத்திலிருந்து உங்கள் நண்பர் ஒருவருடன் வெளியில் வந்தீர்கள்.

அதுதான் நம்மிருவரின் முதற் சந்திப்பு. அந்த சந்திபபு தான் எப்பேர்ப்பட்டது. நீங்கள் என்னைக் கூர்ந்து நோக்கவே என் தலை நாணத்தால குனிந்தது. என் கால்கள் என்னையும் அறியாமல் நகர ஆரம்பித்து விட்டன. அப்போது "இது யார்?" என்று பார்வதியை நீங்கள் கேட்டதும், உங்கள் துணிச்சலையும், அக்கறையையும் கண்டு எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவளும் சிரித்தாள். தாங்களும் குறும்பாக என்னைப் பார்த்து சிரித்ததாய்த தான் ஞாபகம்.

அன்றிரவு தூக்கத்தில் கூட வாரி விட்டும் படியாத கிராப்புத் தலையுடன் வெண்மையான பல் வரிசை தெரிய நீங்கள் சிரித்துக்கொண்டிருப்பதாகத்தான் எனக்குத் தெரிந்தது.

மறு நாள் ஏதோ காரியமாய் நீங்கள் என் இருப்பிடத்துக்கு வந்தீர்கள். வந்ததும்வராததுமாய் ஏதாவது படிக்க புத்தகம் கேட்டு வாங்கிவர ஒரு 'அரை டிக்கெட்'டை அனுப்பி வைத்தீர்கள். புதிதாக வந்த இடத்தில் எந்தப புத்தகத்தைக் கண்டேன் நான். ஏதோ ஒரு பழைய புத்தகத்தை எடுத்துக் கொடுத்தனுப்பினேன் நான். சற்று நேரம் கழித்து வாசலில் குரல் ஒன்றும் கேட்காதிருக்கவே நீங்கள் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய் விட்டீர்களாக்கும் என்று எண்ணிக்கொண்டு வாசற்புறம் வந்தேன். நீங்கள் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு கதையைப் படிக்கும் பாவனையில் தலையைக் குனிந்து கொண்டிருந்தீர்கள். அப்போது நிஜமாகவே நீங்கள் புத்தகம் படித்துக் கொண்டிருந்தீர்களா என்பது அந்தப் பரமனுக்குத் தான் வெளிச்சம். கடைசியில் என்னை நிமிர்ந்து பார்த்து விட்டு "ஒரு சின்ன விஷயம்" என்றீர்கள். உள்ளே செல்ல காலடி யெடுத்து வைத்த நான் உங்களைத் திரும்பிப் பார்த்தேன்.

"தலைவலிக்கு ஏதாவது மருந்து இருக்குமா?" என்று கேள்வி கேட்டு விட்டு, கஷ்டத்துடன் ஒரு அசட்டுப் புன்னகையை வரவழைத்துக் கொண்டீர்கள். நீங்கள் உண்மையாகத் தலைவலியு

கேசவர்த்தினி

கொண்டு கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்

சுண்டைத் தீருங்கள். இனி தலை அரிப்பானேன்? இளநரையை நிறுத்துங்கள். நரையையும் தள்ளி வையுங்கள்.

கேசவர்த்தினியின் உதவியால் கூந்தல் புத்துயிர் பெற்று அழகுடன் விளங்கட்டும்

ஷாம்பூவினல் தலை சுத்தமாகவும், பரிமளமுள்ளதாகவும் ஆகட்டும்.

கேசவர்த்தினி அணா 14; ஷாம்பூ அணா 14; தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்,
கோயமுத்தூர்.

டன் இருந்து தலைவலி மருந்து கேட்டீர்களோ அல்லது என்னுடன் ஏதாவது பேசவேண்டும் என்பதற்காகத்தான் அப்படிக் கேட்டீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால், எனக்குத் தெரிந்த ஒரு உண்மையைக் கூறுகிறேன். ஒரு வேளை நான் கொடுத்த புத்தகத்தின் காரணமாகவும் தலைவலி வந்திருக்கலாம் அல்லவா? இது எப்படியிருக்கிறது தெரியுமா? கேளுங்கள் அதையும்.

"ஒரு ஊரில் ஒரு அரசன் மகள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றாளாம். வேட்டையின் போது அவள் காலில் முள் தைக்கவே, ஒரு அழகான வேடன் உதவியை நாடினாள். வேடன் முள்ளையெடுத்து அவளைக் காப்பாற்றினானாம். பிறகு அவளுடன் அவள் அரண்மனைவரை துணைக்கு வேறு சென்றானாம். வழித்துணை முடிந்தபிறகு அவ் வேடன் என்ன கேட்டானாம் தெரியுமா? 'அரசிளம் குமரியே உன் காலுக்கு பதில் சொன்னேன். என் நொந்த கால்களுக்கும் ஆறுதல் கூறி இதுவரை நடந்து வந்தேன். இனிமேல் நம் கால் போகட்டும். காதலுக்கு என்ன வழி சொல்கிறாய்?' என்று கேட்டானாம். அதைப் போல் இருந்தது உங்கள் கதையும், நீங்கள் என்னைப் புத்தகமும், தலைவலி மருந்தும் கேட்ட லட்சணம்?

அதோடு போயிற்றா? தினமும் ஏதேனும் ஒரு சாக்கை வைத்துக் கொண்டு என் வீட்டிற்கு வந்தீர்கள். முதலில் புத்தகம் கேட்டு வாங்கிப் போனீர்கள். மறுநாள் அதைத் திருப்பிக் கொடுக்க வந்தீர்கள். அதற்கும் மறு நாள் புத்தகத்திலிருந்த ஒரு பக்கம் கிழிந்து என் மேஜையில் கிடந்தது; அஜாக்கிரதைக்கு மன்னிக்கவேண்டும் என்று கூறி, மறுபடியும் அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு போய் பயிண்டு செய்து மறுபடியும் அதைத் திருப்பித் தர மறுநாள் வந்தீர்கள். நீங்கள் அடிக்கடி வந்ததாலோ, அல்லது உங்களுக்கும் எனக்கும் அடிக்கடி சந்திப்பு ஏற்பட்டதாலோ என்னை உங்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்ள ஆவல் தூண்டியது. விஷயத்தை யெல்லாம் பார்வதியைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அவள் கூறிய விஷயங்கள் என்ன தெரியுமா? 'நீங்கள் ஒரு வாயாடி; வம்பன்; திண்ணைத் தூங்கி; அப்பா சேர்த்து வைத்து விட்டுப் போன சொத்தை வெற்றிலை பாக்குப் போட்டும், புஸ்தகங்கள் படித்தும் அழிப்பவன்' என்னும் இத்யாதிப் பட்டங்களைச் சூட்டினாள். தாங்கள் படிப்பில் எட்டாவது வரை எட்டிப் பார்த்து அதற்குமேல் படிப்பு நமக்குக் கிட்டாது என்று படிப்பை நிறுத்திக்

கொண்டு விட்டீர்களாம். ஆனால் உலகத்தையே முன்னுக்குக் கொண்டு வருபவன்போல் சமூக சீர்திருத்தம், கிராம விவசாய சீர்திருத்தங்கள், முதியோர் கல்வி, விதவா விவாகம், பெண்கள் முன்னேற்றம் இவைகளிலெல்லாம் பற்றுக் கொண்டு பேசி நடிப்பதில் உங்களுக்கு இணை நீங்களே தான் என்று கூடக் கூறினாள். ஆனால் நான் அவளுக்கு என்ன பதில் கூறினேன் தெரியுமா? "பாரு, படிப்புக்கும் உலக அனுபவத்திற்கும் வெகு தூரம். ஒருவனுக்குப் படிப்புச்சொல்லிக்கொடுக்கும் அறிவைவிட உலக அனுபவம் இருக்கிறதே, அது பதின் மடங்கு அறிவை விசாலப் படுத்தும்" என்று கூறினேன். சொல்லிவிட்டு ஏண்டா இப்படிச் சொன்னோம்! ஒரு வேளை அவள் தப்பாக ஏதாவது நினைத்துக்கொண்டு அத்தையிடம் கோள் முடிந்தால் என்ன செய்வது? என்று கஷ்டப்பட்டேன்.

மறு நாள் அப்பா என்னைப் பார்த்து "கமலா கிளம்புகிறாயா?" என்றார். அன்றுதான் நானும் அப்பாவும் ஊருக்குக் கிளம்புவதாக ஏற்பாடு.

எனக்கு ஏனோ இஷ்டமில்லை. 'என்னை யாராவது இருக்கச் சொல்ல மாட்டார்களா?' என்று சுற்றுமுற்றும் பார்த்தேன். அத்தை ஓடிவந்தாள். 'அண்ணா' குழந்தைகளுடன் குழந்தையாய் கமலா இன்னும் ஒரு வாரத்துக்காவது இருக்கட்டும். மன்னியுடன் அவளையும் சேர்த்து அனுப்பிச்சுடறேன்" என்று கெஞ்சவே அப்பா ஒருவாறு சம்மதித்தார். அப்பா மட்டும் அன்று தனியே பயணமானார். அத்தை செய்த உதவிக்கு அவளை நன்றி ததும்பும் கண்களால் பார்த்தேன்.

அப்படி எனக்கு அங்கிருந்து கிளம்புவதற்கு அவ்வளவு கஷ்டமாயிருந்ததற்குக் காரணம், அந்த கிராமத்தின் அழகு என்னை ஆட்கொண்டதா? அல்லது வேறு ஏதாவது காரணமும் இருக்குமா?

அன்று மாலை. கோயிலுக்கு பாருவுடன் கிளம்பினேன். அம்மா கிண்ணம் நிறைய எண்ணெய் எடுத்துக்கொடுத்து,

போய் விட்டு வா; இன்னிக்கி பிரதோஷம் வேறே; ஆஹா! இன்னிக்கு பார்க்கணும் அந்த தியாகராஜனை! என்ன அலங்காரம் என்ன அழகு?" என்று அடுக்கிக் கொண்டே போனாள். எனக்கு உண்மையிலேயே தூக்கிவாரிப் போட்டது. காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாய் என் உள்ளம் 'படபட' என்று அடித்துக் கொண்டது.

புத்தம் புதுப் புடவை சலசலக்க, சாட்டை போன்ற பின்னல் மல்லிகையைச் சுமந்து நிற்க, கோவிலுக்குள் புகுந்த என் கண்களை உங்கள் கண்கள் எங்கிருந்தோ வந்து கவ்வின. உங்களை அங்கு கண்டதும் என் நெஞ்சம் அடைந்த இன்பத்தை என்னவென்று சொல்லுவது! அம்மா கூறினது மிகப் பொருத்தம் தான். அம்மா அந்த தியாகராஜனைக் கூறினாள். ஆனால் என் கண்கள் சந்தித்ததோ "அழகான கிரீம் கலர் ஜிப்பாவுடன், எட்டு முழ வேஷ்டி தரையில் விழுந்து புரள, நெற்றியில் வியர்வைக் கிடையில் திட்டு திட்டாகத் தெரிந்த விபூதியும், முன்னெற்றியில் விழுந்து தவழ்ந்துகொண்டிருந்த சுருட்டை சுருட்டையான தலை மயிர்களுடன் கூடிய உங்களைக் கண்டு ஆனந்தித்தது.

கர்ப்பக் கிரஹத்தின் வாயிலில், ஆண்கள் வரிசையில் முன்னணியில் நின்று கொண்டிருந்த தாங்கள், பக்திக் கடலில் மூழ்கி திணறிக் கொண்டிருந்தீர்கள்.

பாரு சொன்னாள்; "ஏது தியாகுவுக்கு இவ்வளவு பக்தி"? அவள் கூறியது உங்கள் காதில் விழுந்து விட்டதோ என்னவோ? நீங்கள் சட்டென்று வெளியில் போய் விட்டீர்கள். என் மனம் மிக்க வேதனை அடைந்தது. உங்களுக்காகப் பரிந்து நான் ஒரு மூச்சு சண்டை போட்டதைப் பற்றி வியப்படைந்த பார்வதி தன் அம்மாவிடம் வந்து வைத்துவிட்டாள் போலிருக்கிறது.

மறு நாள் என் அத்தை தன் பிள்ளை சந்தானத்தின் ஜாதகத்தையும் என் ஜாதகத்தையும் எடுத்துக் கொண்டு எங்கேயோ சென்றாள், இரண்டு மணி நேரங்கள் கழித்து, என் அம்மாவிடம் வந்து "ஜாதகம் திவ்யமாய் பொருந்து கிறதாம். கல்யாணத்தை உடனே முடிச்சுட்டா என்ன?" என்று கூறினாள்.

அப்பப்பா......... இதைக் கேட்டதும் என் நெஞ்சு அடைந்த வேதனை...... யாரிடம் கூறுவது?......என் தந்தையிடம்தான் எனக்கு செல்லம் அதிகம். அப்பா இதுவரை நான் சொன்னதற்கு எதற்கும் குறுக்கு சொன்னதில்லை. ஆனால், இன்டர் படித்துப் பாஸ் பண்ணுவதற்குள் அவள் தான் என்ன பாடு படுத்துவிட்டாள்.

ஒரு வாரம் ஓடிவிட்டது. அன்று அம்மா தனியாக இருந்தாள். அவளிடம் விஷயத்தை மெதுவாகப் பிரஸ்தாபித்தேன். "அம்மா......அம்மா...... நான் சொல்றதை தயவு செய்து கேளு. என்னை அத்தான் காலிலே கட்டி விடாதே." என்று இழுத்தேன் நான்.

அம்மா பாம்பு உருவானாள். "ஏனாம்" கேள்வி சீறிக்கொண்டு வந்தது என் அம்மாவிடமிருந்து.

"எனக்குப் பிடிக்கவில்லை" என்றேன் நான் எங்கேயோ பார்த்த வண்ணமாக.

"ராணிக்குப் பிடித்த சக்கரவர்த்தி தான் யாராம்?"

நான் பதில் ஒன்றும் கூறவில்லை, அதற்குள் அவளே பேச ஆரம்பித்து விட்டாள்.

"உனக் கென்னடி கேடு வந்தது. இதுக்குதான் பொம்மனாட்டிகளை படிக்கவைக்கக் கூடாது என்பது. என்ன திமிர் இருந்தால் இப்படிச் சொல்லுவாய்?" வயதுவந்த பெண் என்றுகூடப் பாராமல் அம்மா நறுக்கென்று என் தலையில் ஒரு குட்டுக் குட்டினாள்.

என் உச்சந்தலையை அமுத்திக் கொண்டேன். ஏனோ எனக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. அது என் தாயார் குட்டியதால் ஏற்பட்ட வலியினால் அல்ல. பின்பு எதனால்?

நான் விசும்ப ஆரம்பித்தேன். என் குரலைக் கேட்டு அத்தை ஓடிவந்தாள். "மன்னி, ஏண்டி அவளை வையறே! நான் எல்லாம் கேட்டுண்டுதான் இருந்தேன். அவனுக்குன்னு யார் பிறந்திருக்காளோ அவளுக்குத்தானே அவன் தாலி கட்டுவான்." அத்தையின் குரலில் ஓரளவு குறையிருந்தாலும் அதை எவ்வளவு சாமர்த்தியமாய் மறைத்து விட்டாள். 'நம் அம்மாவும் இருக

காலே' என்று நொந்துக் கொண்டேன் நான்.

அதற்குமேல் அம்மாவுக்கு அந்த ஊரில் இருக்கப் பிடிக்கவில்லை. மாலை நேரத்தில் மனோகரமான மஞ்சள் வெயிலில் ஊர் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. அந்த நேரத்தில் என் மனம் மட்டும் ஏனோ அதையெல்லாம் ரஸிக்க முடியாத நிலையில் இருந்தது.

வண்டி பள்ளிக்கூடத்தைத் தாண்டிற்று. உங்களைச் சந்திக்க முடியுமா என்ற ஆவல மேலிட்டு பள்ளிக் கட்டடத்தின்மீது எனது பார்வையைச் செலுத்தினேன், நீங்கள் பள்ளிக்கூட வாசலில் அதே பழைய நண்பருடன் பேசிக் கொண்டிருந்தீர்கள். என் கண்கள் உங்களிடம் விடைப்பெற்றுக் கொண்டதை நீங்கள் தெரிந்து கொண்டீர்களோ இல்லையோ. தங்களை பார்த்ததும் என் மனம் ஏனோ சந்தோஷமடைந்தது. ஆனால் சில நிமிடங்கள்தான். அடுத்த நிமிஷமே என் கண்கள் நீரைச் சொரிய ஆரம்பித்தன. அப்பப்பா நான் விட்ட கண்ணீர் இருக்கிறதே, அதற்கு மட்டும் ஒரு உருப் பெற்று பேசும் சக்தி யிருந்தால் அது உங்களுக்கு இந்த அடியாளின் அன்பை வெளிப்படுத்தி யிருக்குமே!

பிலிம் ஸெண்டர் ஸ்டுடியோவில் தயாராகிவரும் "நன்னம்பிக்கை" தமிழ்ப் படத்தில் டி. எஸ். பாலய்யாவும், எம். என். கண்ணப்பாவும் தோன்றும் கட்டம்.

அப்பா சமாசாரத்தைக் கேட்டுப் பதற மாட்டார் என்பது எனக்குத் தெரிந்த விஷயம்தான். அப்பா விஷயத்தைக் கேட்டுப் பதறவில்லை, குதிக்கவில்லை. "ஏன் அம்மா இதில் உனக்கு இஷ்டமில்லையா?" நிதானமாகத்தான் அப்பா கேட்டார். ஆனால் எனக்கு ஏன் கண்ணீர் வந்தது.

"ஆமாம்:" என்ற பாவனையில் தலையை அசைத்தேன் நான். "சரி விட்டுத் தள்ளு; பின்பு வேறு யாரைத்தான் பண்ணிக் கொள்ளப் போகிறாய்?" அப்பாவின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரியவில்லை. அப்போது என் அம்மா தன் முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு அப்பால் நகர்ந்தது ஜன்னலின் வழியாக நன்றாகத் தெரிந்தது.

எத்தனையோ விஷயங்களில் என் அபிப்பிராயத்தைக் கூறிவிடும் எனக்கு இன்று நாக்குப் புரள மறுத்தது. தட்டுத் தடுமாறி விம்மிய குரலில் தலை கவிழ, நாக்குழற உங்களைத்தான் பண்ணிக் கொள்வேன் என்று சொல்லுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

அப்பா என் மனமாற்றத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டார். "ஓகோ, பெண்ணுக்கு காதல் கல்யாணமோ?" அம்மா சீறி விழுந்தாள். நல்ல வேளையாக அப்பா அவளைச் சமாதானப் படுத்தி விட்டார்.

திடீரென்று அப்பா ஆபீஸில் லீவு எடுத்துக் கொண்டு கிராமத்திற்குச் சென்றார். வரும்போது மலர்ந்த முகத்துடன் வரவில்லை.

"கமலா; உன் இஷ்டத்துக்காகத்தான் இந்த ஏற்பாடு. எனக்கும் உன் அம்மாவைப் போல் திருப்தியில்லை."

"பையன் கண்ணுக்கு நன்றாகத்தான் இருக்கிறான். தகப்பனார் சொத்து நிறைய இருக்கிறது. மூன்று தலை முறைக்குக் காணும்; ஆனால் படிப்பு தான் பூஜ்யம். சம்பாத்யமுமில்லை. நீயோ இன்டர் வகுப்பு வரை படித்தவள். அவனோ எட்டாம் வகுப்பு; ஜோடி எப்படியிருக்கிறது பார்த்தாயா?" என்று கூறி நிறுத்தினார் என் தகப்பனார்.

அப்பாவின் குரலில் ஒலித்தது,

கேலியா அல்லது அனுதாபமா ? ஒன்றும் புரியவில்லை.

அம்மாவின் கோபம் அழுகையாக மாறியது. "அசட்டுப் பெண்ணே. உன் புத்தி இந்த மாதிரியா போகவேண்டும்." அம்மா கண்ணீர் பெருக்கினள்.

அத்தான் நன்கு படித்தவர். பணம், பதவி இவைகளுக்கும் குறைவில்லைதான் இருந்தாலும் இந்த விசித்திரமான மனம் இருக்கிறதே அதை என்னவென்று சொல்வது. நான் ஒன்றுக்கும் மசிந்து கொடுக்கவில்லை.

பிறகு கேட்பானேன்: அம்மாவின் ஏக்கம் ; அப்பாவின் அதிருப்தி ; அத்தானின் கோபம் ; அத்தையின் மனத்தாங்கல் ; பாருவின் பரிகாசம் ; இத்தனைக்கும் மத்தியில் உங்களுக்கும் எனக்கும் விவாகம் விமரிசையாக நடந்தேறியது. நடிகர் திலகமே! நான் சொல்ல வேண்டிய விஷயங்கள் இனிமேல் தான் இருக்கிறது.

ஒரு நன்னாளில் உங்களுடன் உங்கள் கிராமத்தை அடைந்தேன். நீங்கள் என்னை ஒரு பெரிய வீட்டின் முன்பாகக் கொண்டு நிறுத்தி 'தேவியார் அரசாட்சி செய்யப்போகும் குடிசை இதுதான்' என்றீர்கள்.

சுற்றுமுற்றும் பார்த்தேன். பல ஆட்கள், ஆண்களும் பெண்களுமாக நின்றுகொண்டு என்னைப் பரிவும் பணிவும் ததும்பப் பார்த்தனர். என்ன இருந்தாலும் மிராசுதார் பட்டம் பெற்றவர்ல்லவா ? ஆட்களுக்குக் குறைவேது ?

அந்தப் பெரிய வீட்டில் உங்களையும் என்னையும் தவிர ஒரு கிழவியிருந்தாள் முனியம்மா என்ற அந்தக் கிழவி உங்களைச் சிறு வயது முதல் வளர்த்தவள் என்று உங்கள் வாயினல் தெரிந்து கொண்டேன். கண் தெரியாத அந்தக் கிழவியும் தன் பல்லில்லாத வாயினல் புன்னகை செய்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாள்.

எனக்கு அந்த வீட்டில் தனியாய் இருக்க ஒரு புறம் பயமாக இருந்தது. ஒரு புறம் சந்தோஷமாகவும் இருந்தது. நல்ல நிலவு காலத்தில் கிணற்றுக்கு அருகில், சிமெண்ட் மேடையில் அமர்ந்தால், மனதுக்கு நகரத்தில் இருக்கவில்லையே என்ற என் சிறு குறை கூட நீங்கி விடும். வாசற்புறத்தில் வெண்ணிலாவின் வெளிச்சத்தில் முல்லைப் பந்தலின்கீழ் அமர்ந்துவிட்டால் நகரத்தின் பூங்காவெல்லாம் எந்த மூலைக்கு ?

உங்கள் வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருளும் என் மனதுக்கு நிறைவையளித்தன.

ஒரு நாள் ; எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. நிலவொளியில் கிணற்று மேடையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். நீங்களும் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டீர்கள். என்னென்னவோ சொன்னீர்கள். 'படித்த பெண்களுக்கெல்லாம் நான் ஒரு எடுத்துக்காட்டு என்றும், என்னை மணந்துக் கொண்டதனல் நீங்கள் உங்களை பாக்கியசாலி யென்றும்'' கூறிக்கொண்டீர்கள். ஆம்! உண்மையிலேயே எனக்கு அப்போதிருந்த மன நிலையை இப்போது விவரித்து எழுத சக்தியில்லை.

நான் வந்த இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு உங்கள் அறையை நீங்கள் இல்லாத சமயம் பார்க்கும்படி நேரிட்டது. உங்கள் அறையில் எல்லாம் அலங்கோலமாகக் கிடந்தன. எல்லாவற்றையும் சீர்ப்படுத்த ஆரம்பித்தேன். அழுக்குத் துணிகள், சலவைத் துணிகள், நடுவில் புத்தகங்கள் தாறுமாருகப் பிரித்தும் மூடியும் இருந்தன.

பிரபல ஷேக்ஸ்பியர் நடிகரான, தஞ்சை தண்டபாணி பி. ஏ, எல். டி. அவர்களின் குமாரர் ஸ்ரீ. த. வெங்கடாசலம் எல். ஸிக்கும் சென்னை ஈஸன் இன்சினியரிங் கம்பெனி ஜூனியர் இன்ஜினியர் ஸ்ரீ. டி. வி. ஸ்ரீனிவாஸனின் சகோதரி சௌ. டி. வி. சீதாலக்ஷ்மிக்கும் சென்னையில் சம்பத்தில் விவாஹம் விமரிசையாக நடைபெற்றது.

இன்னும் என்ன அதிசயம் காத்திருக்கிறதோ என்றெண்ணி மேஜை டிராயரைத் திறந்தேன்.—"அம்மாடியோவ்.... அதில் பல கையால் எழுதப் பட்ட கதைகள். உருப்பெருமல் கிடந்தன. அதோடு போயிற்ரு. ஒரு நோட்டுப் புத்தகத்தில், பல இராகங்களின் பெயரைப் போட்டு பாட்டுகள் எழுதியிருந்தது. மற்ருெரு நோட் புத்தகத்தில் ஒரு கிருஷ்ண உருவம் ஆந்தை வடிவம் பெற்று வர்ணம் தீட்டிக் காட்சியளித்தது. இன்னும் பலவித சித்திரங்கள். அந்தச் சித்திரங்களிலிருந்து காணப்பட்ட பெயரிலிருந்து அவைகளுக்கு நீங்கள்தான் சிருஷ்டிகர்த்தா என்றும் தெரிந்து கொண்டேன். ஆக மொத்தத்தில் நீங்கள் ஒரு பலவிதக் கலைஞர் என்றும் தெரிந்து கொண்டு விட்டேன்.

நீங்களும் நானும் மூன்று மாத காலம் ஆனந்தமாக வாழ்க்கை நடத்திேைம். இந்தக் குறுகிய காலத்துக்குள், நீங்கள் என்னிடம் மிகவும் ஒன்றிவிட்டீர்கள்.

நான் பாடினல் அற்புதம் என்றும், பேசினல் பணிவு என்றும், சிரித்தால் அழகு என்றும், சமைத்தால் மிகவும் நன்ருக இருக்கிறது என்றும் புகழ்ந்து கூறினீர்கள்.

நானும் உங்களைப்பற்றி மேலும் உயர்வாக நினைக்கும்படி பல சம்பவங்கள் நடந்தன.

உங்களைப் பற்றிச் சொன்னலே ஏழைகள் ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். 'ஆண்டவன் அவருக்கு ஆயுசை நிறையக் கொடுக்கட்டும்' என்று வாழ்த்தினர்கள்.

தருமப்பிரபு இலக்கிய பித்தன்; ஏழைப் பங்காளன் போன்ற பலவித பெயர்களைக் கேட்டுவிட்டு என் மனதில் பாரு உங்களைப் பற்றிக் கூறியது யாவும் பொருமையினல் ஏற்பட்ட அவதூறு என்று தெளிவாயிற்று.

நீங்கள் கொஞ்சம் கூட ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் உழைத்தீர்கள். அதாவது வாசகசாலை ஏற்படுத்தினீர்கள். முதியோர் கல்வித் திட்டம் என்றீர்கள். இரண்டு நாளைக்கு பல கிழங்கள் உங்களிடம் பாடம் சொல்லிக் கொள்ள வந்தன. மூன்ரும் நாள் "என் ஒருவரையும் காணேமே" என்றதற்கு, "கிழங்கள் பாடம் கேட்க வந்து எனக்கே பாடம் சொல்லிக் கொடுத்து விட்டுப் போயின" என்று கூறிச் சிரித்தீர்கள். வாசகசாலையும் ஒரு மாதத்திற்குப் பிறகு இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. அதெல்லாம் என் கவனத்தை அவ்வளவாகக் கவரவில்லை.

மினர்வா பிக்சர்ஸின் "சாரங்கதரா" தமிழ்ப் படத்தில் சிவாஜி கணேசன் இவ் விதமாகக் காட்சியளிக்கிருர்.

அன்று ஒரு நாள் நீங்கள் உங்கள் நண்பன் சென்னையிலிருந்து வருவதாகவும், "என் கல்யாணத்திற்குக் கூட அவன் வரவில்லை" என்று கூறிவிட்டு ஸ்டேஷனுக்குச் சென்றீர்கள். உங்களுடன் பள்ளிக்கூடத்து வாசலில் பேசிக் கொண்டிருந்த அதே பேர்வழிதான்.

உங்கள் நண்பர் வினயமாகத்தான் பழகினர். அன்பாகப் பேசினர். ஆனல் அவர் போகும்போது எனக்கு ஒரு பெரிய தீங்கு இழைத்துவிட்டு போனர்.

"அதாவது, படித்த பெண்களே அடக்கமற்றவர்கள். அதிலும் நீ படிக்காதவன். அவள் படித்தவள். உங்கள் இருவருக்கும் எப்படிப் பொருந்துகிறது?" இந்தக் கேள்விகளை அவர்

உங்களிடம் கேட்டுவிட்டார். மறைவாகத்தான் என்று அவர் எண்ணிக் கொண்டார். ஆனால் நான் அவர் உங்களிடம் கூறினதைக் கேட்கும்படியாயிற்று. அவர் உங்களிடம் கேட்ட கேள்விகள் என் நெஞ்சை வாள்கொண்டறுத்தன.

அச்சமயம் நீங்கள் நம் ஒற்றுமையைப் பற்றிப் புகழ்ந்துதான் அவனிடமும் கூறினீர்கள். அவர் போய்விட்டார். அவர் போனதோடு மட்டுமல்ல; உங்கள் களங்கமற்ற குணத்தையும் களவாடிக் கொண்டு போய்விட்டார் என்றே கூறவேண்டும்.

என்னிடம் பிடிக்காத ஒரு வழக்கம் உங்களுக்கு உண்டென்றால், அது என் வாயிலிருந்து உதிரும் ஆங்கிலச் சொற்கள்தான். நான் என்ன செய்வது? பேசிப் பேசி அதே வழக்கம் ஆனதால் தமிழில் பேசும்போது கூட இடையே பல ஆங்கிலச் சொற்கள் எட்டிப்பார்த்துவிடும். உங்களுக்கு இது பிடிக்காது. நீங்கள் முகத்தைச் சுருக்கிக் கொள்வீர்கள். நான் அதைப் பொருட்படுத்தாததைக் கண்டு நீங்கள் தவறாக எண்ணிக் கொள்ளவும் இல்லை.

உங்கள் அருமை சிநேகிதன் வந்து போன பிறகு, என்னிடம் என்னையும் அறியாமல் வந்துவிட்ட ஆங்கில சொற்களை, நீங்கள் 'படித்த பெருமை என்று குறிப்பிட்டீர்கள்'. நான் அதற்காக வெல்லாம் வருந்தவில்லை.

ஒரு நாள் இரு வேலைக்காரிகளுக்குள் எழுந்த சச்சரவுக்கு நான் சமாதானம் செய்யவேண்டி நடுநிலையாய்ப்பேசினேன். நீங்கள் என்னை அழைத்து "நீ மிகவும் படித்தவள்; அவர்களோ படிக்காதவர்கள். உன் நியாயமெல்லாம் உன்னுடன் தான்—அது அவர்களுக்குப் புரியாது" என்று கேலி செய்தீர்கள்.

உங்கள் அனுமதியின்றி பல காரியங்கள் நான் முன்பு செய்திருக்கிறேன். அதற்கெல்லாம் ஆதியிலிருந்து என்னிடம் கோபித்ததில்லை, ஆனால் இப்போது அவை யெல்லாம் குற்றமாகவே பட்டன.

கிராம சேவை, ஏழை வைத்தியம் என்று நீங்கள் செய்யும் காரியங்களில் நான் துணை புரிந்தது உங்களுக்குப் படித்த பெருமை என்றே தோன்றியது.

டைரெக்டர் நாகூர் தயாரித்து வரும் "குடும்ப விளக்கு" தமிழ்ப் படத்தில் இந்த பேபி பத்மினி நடித்து வருகிறார்.

உதாரணமாக என் அத்தான் ஒரு சமயம் நம் அகத்திற்கு வந்தபோது கிராம சேவையும், கிராமத்தில் அவன் வைத்திய தொழிலை ஆரம்பித்தால், எல்லோருக்கும் பயனாகவும் இருக்கும் என்று அவனை வற்புறுத்தி ஏழைகளின் கஷ்டத்திற்காக அவனை சம்மதிக்க வைத்தேன். ஆனால் அவன் போன பிறகுதான் நான் செய்த பெருந் தவறு எனக்குத் தெரிந்தது.

"அத்தான் ஆஸ்பத்திரி வச்சுட்டா அங்கே அம்மாவுக்குக் கூட நர்ஸ் போஸ்ட் கிடைச்சாலும் கிடைக்கும்" என்று என்னை நிந்தனை செய்தீர்கள்.

உங்கள் மனதில் 'நாம் படிக்காதவன் மனைவி படித்தவள்' என்ற குரூர எண்ணத்தின் விதை செடியாகி, செடி மரமாகி, அந்த விஷ விருக்ஷம் விஷமாய் உங்கள் உள்ளத்தில் விஸ்வரூபம் எடுத்து உங்களை அணு அணுவாய் சித்ரவதை செய்துகொண்டிருந்தது.

நான் அதையெல்லாம் ஊகித்து உங்கள் மனம் கோணாதபடி நடக்க ஆரம்பித்தேன்.

உங்களிடம் அதிகம் பேசுவதில்லை. அப்படியே பேசினாலும் தவறிக் கூட

ஆங்கிலச் சொற்கள் புகுந்து விடாத படி உங்களிடம் பேசினேன்.

உங்கள் சிநேகிதர்கள் யாராவது வந்தால் கூட அவர்கள் முன்பு, முன் போல் பேசுவதில்லை. இதெல்லாவற்றையும்விட சேரி என்றும் ஏழை மக்கள் என்றும் இரங்கி பணியாற்ற அடிக்கடி வெளியில் போவதில்லை.

இதெல்லாம் கிராம மக்களுக்கு என் மேல் பொருமை உண்டாக இடம் கொடுத்தன. 'படித்தவள், கர்வம் பிடித்தவள், ராங்கிக்காரி' என்றும் மறைவில் பேசத் துடங்கினார்கள்.

நான் உலகத்தின் ஏச்சு பேச்சுக்கு செவி சாய்க்கவில்லை. ஆனால் நீங்கள் அவர்கள் கூற்றை ஆமோதிப்பதுபோல் நடந்து கொண்டீர்கள். நான் வீட்டில் அதிகம் பேசாததைக் கண்டு கணவனை அலட்சியம் செய்வதாக நீங்கள் முனியம்மாவிடம் வருத்தப்பட்டுக் கொண்டீர்கள்.

உங்களை அரித்துக் கொண்டிருந்த அந்தத் தொத்து நோயிலிருந்து உங்களை விடுவிப்பது எப்படி? என்ற கவலை உண்டாயிற்று. ஆனால் நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வீணாயின.

நீங்கள் அடிக்கடி பெருமூச்சு விட்டீர்கள். ஏதோ சிந்தனை வயப்பட்டீர்கள். என்னைக் கண்டதும் பாராமுகமாக இருந்தீர்கள்.

நடிகமணியே! அப்போதெல்லாம் என் உள்ளம் என்னமாய் துடித்திருக்கும் என்று சற்றாவது கற்பனையில் நினைத்துப் பாருங்கள் தெரியும்!

உங்களுக்கு புழுங்கரிசி மாவினால் செய்த கைமுறுக்கு மிகவும் பிடிக்கும் என்று ஊகித்துக் கொண்ட எனக்கு அதை யென் கையாலேயே உங்களுக்குச் செய்து தரவேண்டும் என்று தோன்றியது.

கோடி வீட்டு ஜயமும், அவள் தாயாரும் முறுக்கு சுற்றுவதில் கைதேர்ந்தவர்கள். ஊரில் எங்கு கல்யாணம் என்றாலும் அவர்களைத்தான் சீர் முறுக்கு சுற்றுவதற்கு அழைப்பார்கள்.

முறுக்கு சுற்றுவதும் கோலமிடுவதும் பெண்களின் கலை அம்சங்களின் தனி அம்சம். அது எல்லாப் பெண்களுக்கும் தெரிவதில்லை. நீளமான விரல்கள் வீணை வாசிக்கும்போது எப்படி அழகு பெறுகின்றனவோ அதேபோல் முறுக்கு சுற்றும்போதும் விரல்கள் தனி அழகு பெற்று விடுகின்றன.

எனக்கு முறுக்கு சுற்றக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவா. அதனால் நான் அடிக்கடி ஜயத்தைத்தேடிக் கொண்டு போனேன். ஆனால் நான் அங்கு போவதை நீங்கள் விரும்பவில்லை. காரணம் ஜயமும், அவள் தாயாரும் மிகவும் வம்புக்காரிகள் என்பது உங்கள் எண்ணம். நான் ஓர் கலைக்காக வேண்டி அவர்களை அண்ட வேண்டியிருந்தது.

அன்று நீங்கள் வெளியே போயிருந்த சமயம், கையில் மாவை யெடுத்துக் கொண்டு ஜயத்தின் வீட்டுக்குப் போய், முறுக்கு சுற்றி எடுத்துக் கொண்டு வந்தேன்.

நான் வரும்போது நீங்கள் வாசல் வராந்தாவில் கூண்டில் அகப்பட்ட



புலிபோல் உலவிக் கொண்டிருந்தீர்கள். உங்கள் முகம் நெருப்பெனச்சிவந்திருந்தது.

வீட்டினுள் நுழைந்த என்னைத் தொடர்ந்து வந்த நீங்கள் "எங்கே போயிருந்தாய்?" என்று கர்ஜிக்கவே என் உடல் பயத்தால் நடுங்கியது.

"எங்கும் போகவில்லை. ஜயத்தின்...." என்று ஆரம்பிப்பதற்குள் என் கையில் இருந்த முறுக்குப் பாத்திரத்தைப் பிடுங்கி வீசி எறிந்தீர்கள். முறுக்குகள் பாத்திரத்திலிருந்து நான்கு பக்கமும் சிதறி ஓடின.

கண்ணீர் மல்கும் கண்களுடன் நின்று கொண்டிருந்த என் காதில் "நான் அவர்கள் வீட்டுக்கு போகவேண்டாம் என்று எத்தனை தடவைகள் கூறியிருக்கிறேன்? என்னைக் கேட்காமல் ஏன் போனாய்! என்னைக் கண்டால் அவ்வளவு அலட்சியமா? நான் படித்தவன் இல்லை யென்ற அலட்சியம் தானே உனக்கு? உன்னால் என் மன அமைதியே குலைந்து விட்டது" என்ற உங்களுடைய சீற்ற மொழிகள் பாய்ந்தன.

எதற்கும் ஒரு பொறுமையுண்டு. என்னால் முடிந்த வரையில் உங்கள் பேச்சிற்கும் செய்கைகளுக்கும் பொறுத்துக் கொண்டு விட்டேன். ஆனால் அது வரம்பு மீறி விட்டது.

ஆற்றில் வெள்ளம் வரும் முன்தான் அணைபோட வேண்டும். வெள்ளம் வந்த பிறகு முடியாது. அதேபோல் உங்கள் வாயிலிருந்து வெள்ளம்போல் வெளிவந்த அந்தச் சொற்கள் என் பொறுமை என்னும் அணையைத் தகர்த்தெறிந்து விட்டன.

"ஏன்? இது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியதுதானே? படித்த பெண் என்று என்னைப் புறக்கணித்திருக்கலாமே! வாழ்வில் பல வசதிகள் இருந்தும் படிக்காமல் உங்கள் வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டது மல்லாமல், உங்களுக்கு நான் படித்ததில் பொறுமையா? தேவலையே?" என்றேன் நான்.

நீங்கள் ஒன்றும் பதில் கூறவில்லை. அதற்கு பதிலாக உங்கள் அறையில் நுழைந்து விட்டு வெளியே வந்த நீங்கள் உங்கள் அழகான சூட் கேஸுடன் காட்சியளித்தீர்கள்.

உங்களை அந்த நிலையில் கண்டதும் எனக்கு திக்கென்றது. "என் மேல் உள்ள கோபம் உங்களை வீட்டை விட்டுக் கிளம்பச் செய்ய வேண்டுமா? உயிருடன் இப்படி சித்ரவதை செய்கிறீர்களே" என்று விம்மி அழ ஆரம்பித்தேன் நான்.

நீங்கள் என் அருகில் வந்தீர்கள். என் தலையை வருடியவாறே "கமலா! வாழ்வில் நான் படிக்காமல் இருந்தது பெரும் தவறு. நான் இனிப் படிப்பதும் முடியாது. நான் ஒரு கலையை நாடிப் போகிறேன். மறுபடியும் உன்னிடம் திரும்பும் போது கலைஞனாகத்தான் வருவேன். என்னைத் தடுக்காதே. நீ படித்தவள்—நான் படிக்காத அறிவிலி என்ற குறை என்னைக் கொல்லாமல் கொல்லுகிறது" என்று தணிவான குரலில் கூறினீர்கள்.

[தொடர்ச்சி 90-ம் பக்கத்தில்]

தனிப்புல்

ஜூலை மாத ஊசியில், "மழை பெய்ததும் நாய்க் குடைகள் கிளம்புவது போல தற்போது நட்டுவனுர்கள் கிளம்பி யிருக்கிருர்கள்" என்று குறிப்பிட்டிருந்தேன். இப்பொழுது அதையே நான் நாடகாசிரியர்கள் விஷயத்திலும்கூடச் சொல்ல விரும்புகிறேன். அடேயப்பா! சமீப காலமாகத்தான் எவ்வளவு நாடகாசிரியர்கள் முளைத்து விட்டார்கள். பேனுப் பிடித்தவன் எல்லாம் தம்மை பெர்னுட் ஷாவாகவும் காளிதாஸனுகவும் அதற்கு மேலும் உயர்வாக எண்ணிக் கொண்டு, எழுதத் தொடங்கி விட்ட விநோதத்தை இப்பொழுது காணவேண்டியதாகி விட்டது. நாடகம் எழுதுவதுடன் நின்று விடுகிருர்கள் என்கிறீர்களா? அது தானே கிடையாது. ஒரு நாடகம் எழுதி விட்டதுமே அவர்கள் நிமிர்ந்து தான் நடக்கிருர்கள். பிரபல நாடகாசிரியர்களது சிருஷ்டிகளையெல்லாம் கூட 'மட்டம்' தட்டிப் பேசக் கிளம்பி விடுகிருர்கள். தமது நாடகத்தை நான்கு படாதிபதிகள் போட்டி போட்டுக் கொண்டு படம் பிடிக்கக் கேட்டிருப்பதாகவும், பல படங்களுக்கு வசனம் எழுதத் தமக்கு அழைப்புகளுக்கு மேல் அழைப்புகள் வந்து குவிவதாகவும் 'புருடா' விடவும் அவர்கள் தயங்குவதில்லே. ஆனல், இதெல்லாம் அரைகுறை நாடகாசிரியர்கள் செய்கிற ஆர்ப்பாட்டம்தான்!

ஒருவனுக்கு நாடகாசிரியனுக ஆகி விட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு விட்டால் அவன் எப்படியெல்லாம் நடந்து கொண்டு விடுகிருன் என்பதையும் நான் சமீபத்தில் அறிய நேர்ந்தது. ஆசை மட்டும் இருந்துவிட்டால் போதுமா? தனக்கு அதற்கு வேண்டிய ஆற்றல் இருக்கிறதா என்பதையும் யாரும் யோசித்து ஆசைப்பட வேண்டும். பிரபல வாரப் பத்திரிகை ஒன்றின் பொறுப்பாசிரியர் சில சிறந்த நாடகங்களே எழுதி அத்துறையிலும் பிரசித்தமாகி யிருக்கிருர். அதைக் கண்ட, அதே பத்திரிகையிலேயே உதவி ஆசிரியராக இருந்து வரும் ஒருவருக்கு, 'நாமும் ஏன் நாடகாசிரியராக ஆகிவிடக் கூடாது' என்று சபலம் தட்டி விட்டது. அவ்வளவுதான்! உடனே எடுத்தார் தம் பேனுக்களில் ஒன்றை; எழுதித் தள்ளி விட்டார் ஒரு நாடகத்தை. நாடகம் உருவாகி விட்டது. ஆனல், அதை நடத்துவது—நடிப்பது யார்? எங்கெங்கோ 'ஓடி ஓடி'ப் பார்த்தார் அந்த ஷர்வாணிப் பேர்வழி. ஒரு 'தோட்டக்காரனே'த் தேடிப் போய்த் தம் நாடகத்தை நடிக்கும்படி கேட்டார். அந்த ஆசாமியோ அவரது நாடகத்திலுள்ள ஓட்டைகளே எடுத்துக்கூறி அது "நடிக்கலாயக்கற்றது" என்று அப்பட்டமாகச் சொல்லி விட்டார். அவ்வளவுதான், ஒரேயடியாகக் கோபம் வந்து விட்டது அந்த 'ஓடி'ப் பேர்வழிக்கு. அடுத்த வாரமே தாம் வேலே பார்க்கும் பத்திரிகையில் தோட்டக்காரரைத் தாக்கும் ரீதியிலே ஒரு காரசாரமான கட்டுரையை எழுதி விட்டு, பழி தீர்த்துக் கொண்டுவிட்டதாகத் திருப்தி அடைந்தார்.

நாடகாசிரியராகும் தமது ஆசையை அவர் அந்த முதல் தோல்வியுடன் நிறுத்திக் கொண்டிருந்தால் எவ்வளவோ நன்ருயிருந்திருக்கும். ஆனல், வாசகர்களுக்கு அவரைப் பற்றி மேலும் பல ரஸமான விஷயங்களே நான் கூற வேண்டும் என்று இருக்கிறதே! பொறுப்பாசிரியரது நாடகங்களேத் தொடர்ந்து

பல வருஷங்களாக நடத்தி நற்பெயர் பெற்றுள்ள ஒரு அமெச்சூர் நாடக சங்கத்தாரிடம் போய், தம் நாடகத்தைப் பற்றி வானளாவப் புகழ்ந்து பேசினர். அத்துடன்கூட, மறக்காமல் பொறுப்பாசிரியரையும் அவரது நாடகங்களையும் மட்டம் தட்டிவிட்டு, தம் நாடகத்தை நடிக்கும்படி கேட்டார். ஒரு பிரபல சபாக் காரியதரிசியின் வீட்டுக்கு நடையாக நடந்து தம் நாடகத்தைப் போட அந்த அமெச்சூர் சபைக்கு ஒரு "சான்ஸ்" கொடுக்கவும் ஏற்பாடு செய்தார். அமெச்சூர் சபையும் முதலில் ஒப்புக் கொண்டு விட்டது. ஆனல், அவரது நாடகத்தை வாங்கிப் பார்த்த பின்னர் அமெச்சூர் சபை தனக்கிருந்து வரும் நற்பெயரைக் கெடுத்துக் கொள்ள மனமில்லாததால் உதட்டைப் பிதுக்கிவிட்டது.

அன்னபூர்ணாவின் 'தொங்க ராமுடு' தெலுங்குப் படத்தில் குசல குமாரி நடனம் ஆடுகிறார்

நாடகாசிரியர் ஏமாந்து அயர்ந்து போய் விடவில்லை. ஓடினர் மற்றொரு சபாக் காரியதரிசியிடம். வேண்டினர் தமது நாடகத்தைப் போடும்படி. அவர்களும் நாடகத்தை வாங்கிப் படித்துப் பார்த்தார்கள். கதையை மாற்றவேண்டும் என்ருர்கள். வசனங்களைத் திருத்த வேண்டும் என்ருர்கள். "என்ன வேண்டுமானுலும் செய்து கொள்ளுங்கள், என் பெயரை மட்டும் போட்டால் சரிதான்" என்ற அளவுக்குக் கூட சம்மதித்து விட்டார். நாடகமும் நடந்தது. அவரது கதையின் சாயைதான் அதில் இருந்தது. அவரால் எழுதப்பட்ட சில வசனங்களே இடம் பெற்றிருந்தன. பாவம், நாடகத்தைப் பார்த்த நாடகாசிரியருக்கு அழுகையே

வந்துவிட்டது. ஆனல் இந்த நாடகாசிரியரை நான் மிக மிகப் பாராட்டுகிறேன். காரணம், ஒரு முறைக்கு இரு முறை பல்டி அடித்தும் அயர்ந்து விடாது அவர் தொடர்ந்து முயற்சி செய்ததுதான்.

தாமே முன் நின்று, கை விட்டு முன்பணம் போட்டு "தமது நாடகத்தையே" நடத்திக் காட்டி விட்டார். அதாவது, தாம் எழுதிய கதை, தமது வசனங்களுடன் அசல் நாடகத்தையே நடித்துவிட ஏற்பாடு செய்துவிட்டார் என்பதையே இப்படிக் குறிப்பிடுகிறேன். இந்த நாடகாசிரியரை நான் மிக மிகப் பாராட்டுகிறேன். தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டாலும்கூட மனம் தளராது வீம்பு கொண்டு தாம் எழுதிய நாடகத்தை இறுதியில் நடத்திவிட்டாரா இல்லையா? அதுவும் 'நாடகம் நன்ருயிருந்தது' என்ற நல்ல பெயரும் வாங்கி விட்டாரே! ஆனல் அவர் இந்த நாடகத்தை நடத்தப் பட்ட சிரமத்தையும் அது சம்பந்தமாகப் போட்ட மலருக்கு விளம்பரம் சேகரிக்க பல கம்பெனிகளின் படி ஏறி இறங்கியதையும் பார்த்த சகோதர எழுத்தாளர்கள், "பாவம், இந்த ஆசாமி அடுத்த வீட்டுக்காரரைப்பற்றி எழுதிவிட்டுப் பேசாமல் நிம்மதியாக இருப்பதை விட்டு, ஏன் இப்படி அல்லல்படுகிருர்" என்று அனுதாபப்படவே செய்தார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் நாடக உலகில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஒரு விசித்திர விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன் அதாவது, நாடகாசிரியர்கள் தங்களது சிருஷ்டிக்கு நாமகரணம் செய்கிருர்களே அந்த அழகைத் தான் சொல்லுகிறேன். நாடகத்தின் பெயரை நோட்டீஸ்களிலோ, விளம்பரங்களிலோ பார்க்கும்போது அது ஆங்கில நாடகமா என்றே சந்தேகம் ஏற்படுகிறது. அப்படி யாரும் சந்தேகித்துவிடக் கூடாது என்று எண்ணி, பக்கத்தில் "தமிழ் நாடகம்" என்று தனியே வேறு குறிப்பிட வேண்டியிருக்கிறது. இதற்கு உதாரணமாக, சமீபத்தில் சென்னையில் நடந்த "டயல் மிஸ்டர் சஞ்சீவி", "டெஸ்டினேஷன் எம்", "டயல் 93" ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இம்மாதிரி தமிழ் நாடகங்களுக்கு ஆங்கிலப் பெயர்களைச் சூட்டுவதனல் என்ன பலன் என்பது அந்த நாடகாசிரியர்களுக்கே தெரியாத விஷயம். என்னைக் கேட்டால் இதனல் பலனைவிடப் பாதகமே அதிகமெனலாம்.


இந்தியாவின் தலைசிறந்த பட்டணம் பொடி
உழுது உழைத்து உலகிற்கே உணவளிக்கும் உழவர்கள்..
நெற்றிவேர்வை நிலத்தில் விழ பாடுபடும் பாட்டாளிகள்..
உடுக்க உடை உதவ உடல் காக்கும் நெசவாளர்கள்..
காட்டிலுள்ளவற்றையும் கடைத் தெருவிற்கு கொண்டுவரும்
வர்த்தகர்கள்... கவலையைப் போக்கவல்ல கவிதை இயற்றும்
கவிஞர்கள்... பாரபட்சமின்றி வரைந்து தள்ளும்
பத்திரிகாசிரியர்கள்... சமயமறிந்து சட்டம் பேசும் சட்டநிபுணர்கள்..
நியாயம் நிலைத்து நிற்க நீதி வழங்கும் நீதிபதிகள்..
கடல் கடத்தி கரை சேர்க்கும் கப்பலோட்டிகள்..
தூரப்பிரதேசங்களுக்கு துரிதமாக கொண்டு சேர்க்கும்
விமானிகள்...... நாட்டினை பாது
காக்கும் போர்வீரர்கள்....
மற்றும் ஏனையோர்களுக்கும் மேன்மேலும்
ஊக்கம் தருவதும் உற்சாகமூட்டுவதும் உயர்தர
T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி
T.A.S. ரத்தினம் பிரதர்ஸ். தபால் பெட்டி 131. வண்ணாரப் பேட்டை, மதராஸ்.

ஸ்டுடியோ மோஹினி

எச். விஜயகுமார்

அவளுடைய உண்மைப் பெயர் என்னவென்று யாருக்குமே தெரியாது. ஆனால் ஸ்டுடியோவில் அவளை எல்லாரும் "மோகினி" என்று அழைத்து வந்தார்கள். அவளும் அதையே தன்னுடைய பெயராக ஏற்றுக்கொண்டு விட்டாள். அவளிடம் அழகு இருந்தது என்று சொல்லுவதைவிட அவளிடம் 'கவர்ச்சி அதிகம் இருந்தது' என்றே சொல்லவேண்டும். பொன்னிற மேனியின் மினுமினுப்பு அவளிடம் அதிகமிருக்கவில்லையென்றாலும் மாநிற மேனியின் மதிமயக்கும் போதை அவளுடம்பின் ஒவ்வொரு அங்கத்திலிருந்தும் பொங்கி வழிந்தது! அவள் மேனியின் சாயல், நடையின் ஒய்யாரம், கண்களின் குறுகுறுப்பு இவைகளெல்லாம் ஒருமுறை அவளைப் பார்த்தவர்களை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும்! அது மட்டுமன்றி ஒருமுறை பார்த்தவர்கள் அவளை மறப்பது என்பது இயலாத காரியம்!

ஸ்டுடியோவிற்குள் அவள் காலடி எடுத்துவைக்க வேண்டியதுதான் தாமதம்! சூழ்நிலையிலே ஒரு விறுவிறுப்பு, உற்சாகம், போதை முதலியவை எங்கிருந்தோ வந்துவிடும்! ஸ்டுடியோவிற்குள் எத்தனையோ பெண்கள் வருவதுண்டு, போவதுண்டு! ஆனால் அவர்களனைவரிடமும் காணப்படாத ஒரு தனி மோகன சக்தி அவளிடம் எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை! யௌவனமும் அழகும் ஒன்றுடன் ஒன்று கைகோர்சது வருவது போலத் தோன்றும் அவள் வரும்பொழுது!

இத்தனைக்கும் அவள் ஒரு சாதாரண 'எக்ஸ்ட்ரா' நடிகைதான்! மற்ற எக்ஸ்ட்ரா நடிகைகளைப் போல் 'ஒருநாள் "கதாநாயகி"யாக நடிக்க வாய்ப்புக் கிடைக்கும்' என்று இவளும் கனவு கண்டுகொண்டிருந்தாளோ என்னவோ தெரியாது! ஆனால் அவ்வித வாய்ப்பு இவளுக்குக் கிடைப்பது அரிது என்பதற்கு இரண்டு மூன்று காரணங்களிருந்தன. முதலாவது காரணம், அவள் நேரில் பார்ப்பதற்குக் கவர்ச்சியுள்ளவளாகத் தோன்றியபோதிலும், திரைக்கு ஏற்ற முகவெட்டு உள்ளவள் இல்லை. என்று ஒரு டைரெக்டர் நிறைய "ஸ்டில்கள்" எடுத்துப் பார்த்துச் சொல்லிவிட்டார். இரண்டாவது காரணம், அவள் குரல் 'மைக்'குக்கு ஏற்றதாக இல்லை, மூக்கிலிருந்து பேசுவது போலிருக்கிறது என்று ஒலிப்பதிவு நிபுணர் ஒருவர் நற்சாட்சிப் பத்திரம் தந்துவிட்டார்! தவிர, அவளிடம் நடிப்புத் திறமை அவ்வளவாக இல்லை என்பது எல்லா டைரெக்டர்களின் ஏகோபித்த முடிவு! அதுவும் டைரெக்டர் சர்மாவின் அசைக்க முடியாத, உறுதியான அபிப்பிராயம்!

தனது இத்தனை குறைகளையும் உணர்ந்து கொண்டவள்போல் "மோகினி" 'ஹிரோவின்' ஆவதற்குக் கொஞ்சம் கூட முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை! கிடைத்த வேலையைத் தன்னால் முடிந்த அளவு சிரமத்துடன் வஞ்சனையின்றிச் செய்து, கிடைத்த ஊதியத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, திருப்தியுடன் வாழ்ந்து வந்தாள்.

அவள் 'ஸெட்'டுக்குள் நுழைந்தவுடன் எல்லா உதவி டைரெக்டர்களுடைய மனதிலும் ஒரே எண்ணம்தான் தோன்றும். "நல்ல ஒரு டைரெக்டரின் கீழ் வேலை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தால் அவள் எந்தப் பிரபல நட்சத்திரத்திற்கும் பின்னடையமாட்டாள்" என்ற எண்ணம் அது! அதுவும் டைரெக்டர் சர்மாவின் முக்கிய உதவியாளர் மோகனின் மாறாத நம்பிக்கை இது! ஆனால் சர்மாவுடைய நம்பிக்கையோ இதற்கு நேர்மாறானது! ஆகவே அவனால் என்ன செய்ய முடியும்?

அவள் மேல் மோகனுக்குப் பரிவு ஏற்பட இன்னொரு காரணமுமிருந்தது. அவனும் ஒரு காலத்தில் 'எக்ஸ்ட்ரா'வாக இருந்தவன்தான். 'ஒரு நாளில்லையேல் ஒருநாள் கட்டாயம் கதாநாயகனாக நடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும்' என்று மற்ற எக்ஸ்ட்ரா நடிகர்களைப் போலவே அவனும் கனவு கண்டுகொண்டிருந்தவன்தான். ஆனால்,

கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே அது அவ்வளவு எளிதான காரியமல்ல என்று தெரிந்துகொண்டு விட்டான். ஆகவே, தனது போக்கை மாற்றி இப்போது உதவி டைரெக்டர் பதவிவரை வந்து விட்டான். 'என்றேனும் ஒரு நாள் டைரெக்டராக வரச் சந்தர்ப்பம் வாய்த்தால் தன்னுடைய முதல் படத்தில் மோகினியையே கதாநாயகியாகப் போடவேண்டும்' என்பதுதான் அவனுடைய இப்போதைய கனவெல்லாம்! மோகினியை அவனுக்கு அவ்வளவு பிடித்திருந்தது. அதனாலேயே யாராவது எக்ஸ்ட்ரா நடிகை தேவையிருந்தால்கூட அவன் உடனே மோகினியின் பெயரையே டைரெக்டருக்கு சிபாரிசு செய்வான். மோகினியும் இதை அறியாமல் இல்லை.

''மோகன், தங்களுடைய உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!'' என்று அவள் அன்பொழுகக் கூறி இலேசாகச் சிரிப்பாள்.

''இதற்குமேல் என்ன வேண்டும்?'' என்று மோகன் மனதிற்குள்ளாகவே சொல்லிக் கொள்வான்.

நாட்கள் செல்லச் செல்ல மோகினியின்மேல் மோகனுடைய அன்பு பெருகிக் கொண்டே வந்தது! அவளுடன் பேசக் கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் அவன் நழுவ விடாமல் பரிபூரணமாக உபயோகித்துக் கொள்வான்! மற்ற எக்ஸ்ட்ரா நடிகைகளும் இவனை மகிழ்விப்பதற்காக இவனிடம் வலிய பேச வருவதும், அசட்டுத் தனமாகச் சிரிப்பதும் உண்டு! தனக்குப் படத்தில் அதிக வேலை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஒரு நடிகை இவனைத் தன் வீட்டிற்கு 'விருந்தி'ற்காகக் கூட அழைத்தாள். ஆனால், மோகனோ அவர்களையெல்லாம் லட்சியம் செய்யாமல் மோகினியின் மேலேயே கண்ணாக இருந்தான்.

மோகினியும் அவன் மேலேயே உயிரை வைத்திருப்பவள் போல் அவனிடம் உறவாடுவதும், பேசுவதும், சிரிப்பதும், சில சமயங்களில் வெட்கப்படுவதுமுண்டு. அந்தச் சமயங்களிலெல்லாம் மோகனின் மகிழ்ச்சிக்கு எல்லையைக் காண முடியாது! தானும் மோகினியின் மனதைப் பூரணமாகக் கொள்ளை கொண்டு விட்டதாக அவன் நினைத்துக் கொள்வான். ஆனால், அடுத்த கணமே அவள் காமிராமேனுடனும் அதே மாதிரி சகஜமாகப் பழகுவதைக் கண்டு அவன் மனதில் பொறுமைத் தீ சுடர்விட்டு எரிய ஆரம்பித்து விடும்! ஆகவே, அவன் மோகினியின் நடையுடை பாவனைகள், அவள் காலையிலிருந்து மாலைவரை என்னென்ன செய்கிறாள், யாருடன் பழகுகிறாள் என்பதைப் பற்றியெல்லாம் கவலை கொண்டு ஆராய ஆரம்பித்து விட்டான். கொஞ்ச நாட்களுக் குள்ளாகவே அவள் டைரெக்டர் முதல் ஆபீஸ் பியூன்வரை எல்லாரிடமுமே மிகச் சகஜமாகச் சங்கோஜமின்றிப் பழகுகிறாள் என்பதை அறிந்ததும் மோகனின் மனதில் கோபமும் வெறுப்பும் குமுறின.

"சீ, கழுதை! வேசை...! வெட்கம் மானம் என்பது கொஞ்சம்கூடக் கிடையாது" என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்வான்.

ஆனால், இந்த வெறுப்பும் கோபமும் மோகினியின் மேல் அவனுக்கிருந்த அன்பை—அல்லது 'காதலை' என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள்—அதிகம் தூண்டி விட்டனவேயன்றிக் குறைக்கவில்லை....அவள் அப்படி மோகனின் மேல் என்ன பொடி தூவி விட்டாளோ தெரியவில்லை!

தனக்குக் கீழிருந்த உதவியாளருடன் ஒரு நாள் மோகன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பேச்சு வாக்கில் மோகினியைப் பற்றிய பேச்சும் வந்தது.

''அவள் எல்லாரையும் ஆட்டி வைக்கிறாள் மோகன்! பெரிய கைகாரி!'' என்று அந்த உதவியாளர் கூறி விட்டார்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் மோகனின் மனதில் ஆயிரம் தேள்கள் கொட்டியது போன்ற வேதனை யுண்டாயிற்று.

''மோகினி என்ன அவ்வளவு மோசமாகப் போய் விட்டாளா?....சீ....! இந்தப் பெண்களையே நம்பக் கூடாது'' என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியது.

ஒவ்வொரு எக்ஸ்ட்ரா நடிகையைப் பற்றியும் அவன் எத்தனை எத்தனையோ கதைகளைக் கேள்விப்பட்டிருந்தான். படமுதலாளி முதல் உதவி 'மேக்கப்' செய்பவர் வரையும் அந்த அப்பாவி நடிகைகள் படும் பாடும், அடையும் கேடும் அவன் அறியாதவை அல்ல!

அதுவும் மோகினியோ தனக்கே உரிய ஒரு தனிக் கவர்ச்சியைக் கொண்டவள்! ஆகவே, ஒவ்வொருவரும் அவளை அடைய விரும்புவதில் புதுமையோ வியப்போ இல்லை என்பதையும் அவன் மனம் ஒப்புக் கொண்டது. அப்படியிருந்தபோதிலும் அவன் மனதில் "மற்ற பெண்கள் எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும்! ஆனால் மோகினி மட்டும் தன்னைத் தவிர வேறு யாருடனும் சகஜமாகப் பழகுவதோ, சிரிப்பதோ கூடாது" என்ற எண்ணமும் கூடவே தோன்றும்!

மறு கணம் தன்னுடைய முட்டாள்தனத்தை எண்ணிச் சிரித்தும் கொள்வான்: "அவள் யார்? நாம் யார்? அவள் யாருடன் எப்படிப் பழகினாலும் அதைப்பற்றி நமக்கென்ன? தன் விருப்பப்படி நடக்க அவளுக்கு முழு உரிமை உண்டு! அதில் குறிக்கிடுவதற்கு நாம் யார்" என்று அவன் உள்ளம் உரையாடும்!

ஆகவே, வெகு நாட்கள் யோசனை செய்த பிறகு அவன் 'மோகினி'யின் மேலிருந்த தனது ஆசையைக் குறைத்துக் கொண்டான்! அவளிடம் வேலையில்லாமல் பேசுவதையும் பழகுவதையுங்கூட நிறுத்திக் கொண்டான். மேலும் படமும் முடியும் தறுவாயிலிருந்தது. எக்ஸ்ட்ரா நடிகைகளின் வேலை முழுவதும் முடிந்து விட்டது. ஆகவே மோகினியும் ஸெட்டிற்கு வருவது இல்லை!

ஒரு நாள் அதே ஸ்டுடியோவில் நடந்து கொண்டிருந்த வேறொரு படத்தின் 'ஷூட்டிங்'கிற்கு மோகினி வந்திருந்தாள்! மத்தியானம் இடைவேளையில் மோகன் அவளை எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்தது. "நமஸ்காரம்! மிஸ்டர் மோகன்!" என்று அவள் கூறிய போதிலும் மோகன் பதில் நமஸ்காரம் கூடச் செய்யவில்லை!

"என்ன ஸார்! என் மேல் ஏதாவது

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை–14. கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள் B. பால பட்டாபி செட்டியார், (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) கோயமுத்தூர்

கோபமா?'' என்று அவள் கெஞ்சிக் கேட்டாள்.

அதற்கும் அவன் பதில் கொடுக்க வில்லை.

''சரி சரி! கட்டாயம் என் மேல் ஏதோ வருத்தம்! சந்தேகமே யில்லை!'' என்றாள் அவள் மறுபடியும்!

''எனக்கென்ன வருத்தமும் கோப மும்?'' என்று கடைசியாக அவன் பதி லளித்தான்.

''பின் ஏன் ஒரு மாதிரியாக இருக்கி றீர்கள்! சரியாக முகம் கொடுத்துக் கூடப் பேசமாட்டேனென்கிறீர்களே?''

''நிஜமாகச் சொல்கிறேன் மோகினி! நீ என்னைப் பைத்தியமாக அடித்து விட்டாய்!'' என்றான் மோகன்.

இந்தச் சொற்களைக் கேட்டதும் மோகினி பின்னும் ஒரு புன்னகை புரிந் தாள்! பிறகு நாணம் மேலிட்டதால் கண்களைக் கவிழ்த்துக் கொண்டாள்!

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று அவள் தடுமாறும் குரலில் கேட் டாள்.

''நீ ஏன் என்னிடமிருந்து தூர தூர விலகிக் கொண்டு போகிறாய்? என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை போலிருக் கிறது....''

''சீசீ! என்ன அப்படியெல்லாம் பேசு கிறீர்கள்! நான் உங்களைத் தெய்வமாக நினைத்துப் போற்றுகிறேன் என் மனதில்.''

''அதனால் எனக்கு என்ன லாபம்?'' இன்னும் மோகனின் போதை தெளிய வில்லை.

''தாங்கள் விரும்புவது தான் என்ன?'' என்று களங்கமற்ற குரலில் கேட்டாள் மோகினி.

''உன்னுடைய தயவு....''

''நல்ல கதை இது! உங்கள் தயவு அல்லவா எனக்கு வேண்டும்!'' மீண் டும் அதே மோகனப் புன்னகை!

''உண்மையைச் சொல்லட்டுமா....? இத்தனை நாட்களில் என்றைக்காவது ஒருநாள் என்னை உன் வீட்டிற்கு அழைத்தாயா, ஒரு கப் காப்பி சாப் பிட!''

''பூ! இவ்வளவு தானே! என் போன்ற ஏழையின் வீட்டிற்கு நீங்கள் வரச் சம்மதிப்பீர்களோ என்று தான் நான் தயங்கிக் கொண்டிருந்தேன்! இப்போது நீங்களாகவே கேட்டது என்னுடைய பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்! சரி... எப்போது வருகிறீர்கள்?''

''நாளைக்கு அடுத்த நாள் ஞாயிற் றுக்கிழமை விடுமுறை! அன்றைக்குச் சௌகரியப்படுமா....?

''தங்கள் சௌகரியம் என் சௌகரி யம்! தாராளமாக வாருங்கள்! சாப்பா டும் அங்கேயேதான் சாப்பிட வேண் டும்!''

''வேண்டாம் வேண்டாம்! அவ்வ ளவு சிரமம் எதற்கு?''

''சிரமமா? நன்றாகச் சொன்னீர்கள்! என் வீட்டிற்கு வரத் தாங்கள் எவ்வ ளவு சிரமம் எடுத்துக்கொள்ளப் போகி றேன்?....சரி! அப்போது தங்களை நான் கட்டாயம் எதிர்பார்க்கிறேன்....வரட் டுமா....? 'ஸெட்'டில் கூப்பிடப் போகி றார்கள்?....நமஸ்காரம்!''

மோகினி சென்று விட்டாள், மின்னலைப்போல! அவள் பேசிய விதமும் பழகிய தோரணையும் மோக னின் மனதில் மீண்டும் நம்பிக் கையை உண்டாக்கின! 'தன்னை மோகினி உண்மையிலே விரும்புகிறாள். தன் மேல் அவள் உயிராக இருக்கி றாள், தன்னைத் தவிர வேறு யாருக்கும் அவள் உரியவள் அல்ல, என்பது போன்ற எண்ணங்கள் மீண்டும் அவன் மனதில் தோன்றி மகிழ்வையும் உற்சா கத்தையும் ஊட்டின! இடையிலிருக் கும் ஒரு நாள் அவனுக்கு ஒரு யுகம் போலத் தோன்றியது. இன்றைக்கே ஞாயிற்றுக் கிழமையாக இருந்திருக்கக் கூடாதா என்று அவனுக்குத் தோன்றி யது! இத்தனை நாட்களுக்குப் பிறகா வது மோகினியிடம் தனது உள்ளத்தை மறைமுகமாக எடுத்துக் கூற வாய்ப்பு வாய்த்ததில் அவனுக்கு எல்லையற்ற திருப்தி! தனது மனோபாவங்களை 'மோகினி' கட்டாயம் அறிந்து கொண் டிருப்பாள். அறியாமலிருக்க அவள் ஒன்றும் சிறிய குழந்தை அல்ல! அறிந் தும், அதை ஆமோதிப்பது போலத் தன் வீட்டிற்குச் சாப்பிட அவள் தன்னை அழைத்தது, அவள் தன் மீது கொண்டி ருக்கும் காதலால் தான் என்பதில் மோகனுக்குச் சந்தேகமே யிருக்க வில்லை! என்றெல்லாம் அவன் நினைத் தான்!

''ஸெட்டில் நடக்கும் காதல் ஒத்தி கைகளை அவன் கணக்கற்ற முறைகள் பார்த்திருந்தான்! படத்திலே காதலர்க

ளாகத் தோன்றுபவர்கள் நாளடைவில் 'உண்மைக் காதலர்களாக மாறித் திருமணம் செய்துகொண்ட கதைகளை அவன் கண் கூடாகப் பார்த்திருந்தான். ஏன்? டைரெக்டர் சர்மா கூட இப்போது தான் டைரெக்ட் செய்து கொண்டிருக்கும் படத்தின் கதாநாயகியிடம் காதல்கொள்ள ஆரம்பித்திருந்தார்! அப்படியிருக்கும் போதுதான் மட்டும் ஏன் மனம் விரும்பும் பெண்ணை — நடிகையைக் காதல் புரியக்கூடாது?.... அதுவும் மோகினியும் தன்னைக் காதலிக்கும் பொழுது!

''நான் பெற்ற செல்வத்''தில் ஜீ. வரலக்ஷ்மிக்கு தாலி கட்டுவதற்கு சிவாஜி கணேசன் ஒத்திகை பார்க்கிருர் போலும்!

கடைசியாக ஞாயிற்றுக் கிழமையும் வந்தது. காலை முதலே மோகன் தன்னை அலங்கரித்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டான். புத்தம் புது ஸூட் ஒன்றை அணிந்து கொண்டான்! முகத்திற்கு ''ஸ்னோ''பூசி இலேசாகக் கண்ணுக்குத் தெரியாத விதத்தில் கொஞ்சம் பவுடரையும் பூசிக்கொண்டான். கைக்குட்டையில் ''ஸெண்ட்'' இரண்டு துளி விட்டுக்கொண்டான். கண்ணாடி போல பளபளக்கும் ''பூட்ஸை''யும் அணிந்து கொண்டான். தலைமயிரை அழகாகப் படியவைத்து வாரிக்கொண்டான்! திரையுலகிலே முன்னணியில் இருக்கும் எந்தக் கதாநாயகனுக்கும் அழகிலோ, தோற்றத்திலோ தான் எந்த விதத்திலும் குறைந்தவன் அல்ல என்று அவன் உறுதியாக நம்ப ஆரம்பித்து விட்டான்.

பரிபூரணமாகத் தன்னை மீண்டும் ஒரு முறை கண்ணாடியில் பார்த்துக்கொண்டு தனது 'தலைவி'யைச் சந்திக்கப் புறப்பட்டான்!

பஸ்ஸிலிருந்து இறங்கி மூலைக் கடையொன்றில் 'ஸ்பெஷல்' பீடா ஒன்றை வாங்கி வாயில் போட்டுக் கொண்டு மோகினியின் வீட்டை நோக்கி மிகவும் குஷியாக நடக்கலானான்.

வரிசையாகக் கட்டப்பட்டிருந்த பல அறைகளில் மூன்றாவது அறை மோகினியினுடையது! அவ்வறைக்கு எதிராக வந்து நின்றபோது மோகனின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது! முதல் இரவில் மணப் பெண்ணின் மனோ நிலையைப் போன்று இருந்தது அவனுடைய மனோ நிலையும். அவனுடைய கை தானாகவே அறைக் கதவைத் தட்டியது. அடுத்த கணம் கதவு திறந்தது. மோகினி புன் முறுவலுடன் எதிரே வந்து அவனை வரவேற்றாள்.

''வாருங்கள்! தங்களையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்!''

மோகனுக்கு ஆகாசத்தில் பறப்பது போன்ற பிரமை ஏற்பட்டது! மோகினி அவனை நாற்காலியில் உட்கார வைத்து ஒரு நிமிஷத்தில் வருவதாகக் கூறிச் சமையற் கட்டிற்குள் செல்லத் திரும்பினாள். அதற்குள் எங்கிருந்தோ திடீரென்று இரண்டு குழந்தைகள் உள்ளே

நுழைந்து "அம்மா! அம்மா!" என்று கூறிய வண்ணம் மோகினியை வளைத்துக் கொண்டன! குழந்தைகளைப் பின் தொடர்ந்து ஒரு கிழவி வந்தாள்!

"மிஸ்டர் மோகன்! இவர் எனது தாயார்!" என்று அக் கிழவியை அறிமுகப்படுத்திவிட்டுத் "தன் குழந்தைகளை" அணைத்தவாறு "என்னை அம்மாவென்று அழைத்ததிலிருந்து இவைகள் எனது செல்வங்கள் என்று தாங்கள் ஊகித்தறிந்திருப்பீர்கள்! அம்மாவுடன் கோயிலுக்குப் போயிருந்தார்கள்" என்று கூறிய வண்ணம் அக் குழந்தைகளைத் தன்னுடன் அழைத்துச் சென்ருள்!

கிழவி பெரிய வாயாடி! மோகினி உள்ளே சென்றதும் அவள் மோகனிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்து விட்டாள்.

மோகனுக்கோ தலை சுற்றிக் கொண்டிருந்தது! தன்னை யாரோ இமயமலையின் உச்சிக்கு அழைத்துச் சென்று திடீரென்று அதல பாதாளத்தில் தள்ளிவிட்டது போன்ற உணர்ச்சியை அனுபவித்தான் அவன். கிழவியின் பேச்சில் இருந்து, மோகினியின் கணவன் மூன்று வருஷங்களுக்கு முன்பு ஏதோ ஒரு ரயில் விபத்தில் சிக்கி மாண்டுவிட்டதாகவும், அது முதல் கிழவியையும் அத் தந்தையில்லாக் குழந்தைகளையும் காப்பாற்றும் பொறுப்பு மோகினியின்மேல் விழுந்ததையும் மோகன் அறிந்து கொண்டான். ஜீவனோபாயத்திற்கு வேறு வழி கிடைக்காமையால் சினிமாவில் நடித்து வயிற்றைக் கழுவ நேரிட்டதைக் கூறி கிழவி சலித்துக் கொண்டாள்.

அதற்குள் மோகினி கையில் காப்பி டம்ளருடன் குழந்தைகள் பின் தொடர வந்தாள். டம்ளரை மேஜை மேல் வைத்து, "கொஞ்சம் காப்பி சாப்பிடுங்கள்; அதற்குள் சாப்பாடு தயாராகி விடும்" என்ருள்.

மோகனல் குனிந்த தலையை நிமிர முடியவில்லை! தலையைக் குனிந்தவாறே இயந்திரம் போலக் கையை நீட்டி டம்ளரை எடுத்துக் காப்பியை ஒரே மூச்சில் குடித்துவிட்டு, "மோகினி! எக்ஸ்க்யூஸ்மி! சாப்பிடுவதற்கு நேரமில்லை; என்று கூறியவாறு வேகமாக அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டான்!.... மோகினியின் முகத்தில், அதே மோகனப் புன்னகை தவழ்ந்தது.

தாம்பத்ய உறவு

[ஆசிரியர்: டாக்டர் கவி. எஸ். ஏ. சஞ்சீவி; விலை: ரு. 1-0-0; கிடைக்குமிடம்: சென்னை மன்றம், 36, கிருஷ்ணப் நாயக்கன் குளத்தெரு: சென்னை-1.]

கோடீஸ்வரன் முதல் பிச்சைக்காரன் உட்பட உலக மாந்தர் அனைவரிலும் தாம்பத்ய உறவு இல்லாதவர் இல்லை. அவர்களில் பலர் அறியாமையினால் தவருன வழிகளில் போய் அவதியுறுவது சகஜமாகி வருகிறது. புதிய மணமக்களை நேரான பாதையிலே—ராஜபாட்டையிலே—செல்ல இப் புத்தகம் சிறந்த முறையில் உதவும். இம்மாதிரிப் புத்தகங்கள் பெரும்பாலும் காமத்தைத் தூண்டும் முறையில் எழுதப்படுவது வழக்கம். ஆனால் இப் புத்தகம் பயன்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் தகுந்த முறையில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மணமக்களுக்கு புத்திமதி கூறும் முறையில் புஸ்தகம் அமைந்திருக்கிறது. மணமக்களுக்கு அளிக்க இப்புத்தகம் சிறந்த பரிசு எனச் சிபாரிசு செய்யலாம்.

ஆர்கனன்

[கிடைக்குமிடம்: இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட், கும்பகோணம்; விலை: ரு. 3-0-0.]

ஹோமியோபதி வைத்தியம் இன்று தமிழ் நாட்டில் பிரபலமாகி வருகிறது. அந்த வைத்திய முறையைக் கண்டு பிடித்தவர்—டாக்டர் ஸாமுவல் ஹானிமென் என்பவர். அவர் எழுதியுள்ள

மருத்துவ நூலான ஆர்கனனின் தமிழ் மொழி பெயர்ப்பாகும் இது. தமிழ் நாட்டில் இம் முறை வைத்தியம் பரவப் பெரிதும் காரணஸ்தராக இருப்பவரும், பிரபல ஹோமியோபதி டாக்டருமான வி. ஆர். மூர்த்தியும், பம்பாய் டாக்டர் எஸ். என். கே மூர்த்தியும் மூல நூலைத் தமிழ்ப் படுத்தியிருக்கிருர்கள். நன்ருகப் புரியும் எளிய நடையை மொழிபெயர்ப்பாளர்கள் கையாண்டிருக்கிருர்கள். குறைந்த செலவிலே செய்து கொள்ள வசதியாகவுள்ள இந்த வைத்திய முறைபற்றிய நூலுக்கும் விலையைக் கொஞ்சம் மலிவாக வைத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

உண்மை அமைதி

[ஆசிரியர்: புரட்சிப் பித்தன்; விலை: அணு 4; கிடைக்குமிடம்: விசுவம் வெளியீடுகள், 300-A, ராஜ வீதி, கோயமுத்தூர்.]

ஆசிரியரால் எழுதப்பட்டுள்ள, வசன கவிதை நடையிலே உள்ள கவிதைகள் கருத்துச் செறிவுடன் இருக்கின்றன.

தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்

[ஆசிரியர்: டி. கே. சண்முகம்; விலை: எட்டு அணு; கிடைக்குமிடம்: அவ்வையகம், சென்னை-6]

தமிழ்நாட்டு நாடக சரித்திரம் எழுதப்படுமானல் அதில் சங்கரதாஸ் சுவாமிகளுக்கு பிரதானமான இடம் அளிக்கப்படும். அப்படிப்பட்ட சேவைகளை அவர் நாடகக் கலைக்குச் செய்துள்ளார். அந்த விபரங்கள் சுவாமிகளுடன் சம்பந்தப்பட்டிருந்த சிலருக்கே தெரியும்; இன்று படஉலகில் பிரபலமாக உள்ள நடிகர்கள் பலரும் பாலப் பருவத்திலே அன்னாரிடம் சிக்ஷை பெற்றவர்களே ஆவர். சுவாமிகளால் ஆளாக்கிவிடப்பட்ட பலர் அவரை மறந்தே போய்விட்டாலும், அறியாப் பருவத்திலேயே அவரிடம் சிக்ஷை பெற்ற டி. கே. ஷண்முகம் தம் குருதேவரை மறந்துவிடவில்லை என்பதற்கு இப் புத்தகம் ஒரு அத்தாட்சியாகும். டி. கே. ஷண்முகம் தமது குருதேவரின் வாழ்க்கை வர்ணனையை ஒரு புத்தகமாக வெளியிட்டுத் தமது குருபக்தியை வெளிப்படுத்தியிருக்கிருர். புத்தகத்தைப் படிக்கும் வாசகர்கள், சுவாமிகள் நாடகக் கலைக்கு ஆற்றியுள்ள நற்பணியை நன்கு அறிய முடியும். நாடகக் கலாபிமானிகள் படித்துப் பாதுகாக்க வேண்டிய புத்தகம்தான் இது.

வரப்பெற்றோம்:

திண்டுக்கல்லிலிருந்து வெளிவரும் **பீரங்கி**, பொள்ளாச்சியிலிருந்து புறப்படும் **பொள்ளாச்சி வாசி** ஆகிய பத்திரிகைகள் தீபாவளிக்கென விசேஷ இதழ்கள் வெளியிட்டிருக்கின்றன.

பொதுஜனம் பேசுகிறார்

★ ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கான தமிழ்ப் படங்கள் வெளிவந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனல், ஒன்ருவது தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கை முறை, கலாசாரம், நாகரீகம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்ததில்லை. ஏனென்ருல், கதையே தமிழ் எழுத்தாளனுடையதல்ல. எங்காவது இந்தியிலோ, வங்காளியிலோ, மராத்தியிலோ ஒரு படம் வெளிவந்து வெற்றி பெற்றிருந்தால் அந்தக் கதையைத்தான், விலை கொடுத்து வாங்குவார்களே தவிர, தமிழ் எழுத்தாளனின் கதையைப் படமாக்கும் துணிவு இன்று எந்த படாதிபதிக்கும் கிடையாது. ஆனலும், இவர்களும் தங்களைக் 'கலைஞர்கள்' என்று சொல்லிக் கொள்கிருர்கள். கலைஞன் யார்? மக்களுக்காக-தன் நாட்டுக்காக ஓரளவாவது, தன்னலம் கருதாமல் தன் கலைத்திறன் மூலம் பணிபுரிபவன் எவனே அவனே கலைஞன். கலைஞன் என்று நாம் சொல்லும்போது அவன் தன் சொந்த சுக துக்கங்களை மறந்துவிட்டு கலைக்காகவே வாழவேண்டுமென்ரே, உடல்-பொருள்-ஆவி அனைத்தையும் கலைக்கு அர்ப்பணம் செய்துவிட வேண்டுமென்பதோ அர்த்தமல்ல. வருவாயைப்பற்றிய கவலையே அவனுக்கு இருக்கக் கூடாது என்பதல்ல. ஆனல், அவன் பணத்திற்கு தன்னை அடிமையாக்கிக் கொள்ளக் கூடாது. பணமே வாழ்க்கைக் குறிக்கோள்—வழிபடும் தெய்வம் எனக் கருதக் கூடாது. வருவாய்க்கும் வழி செய்து கொள்ள வேண்டும்; கலை வளர்க்கவும் முயலவேண்டும். இத்தகைய கலைஞர்கள் இருந்தாலே போதும். டி. கே. சண்முகம் நல்லதொரு இலட்சியக் கலைஞராகப் புகழ் பெற்றிருப்பதற்குக் காரணம் இதுவே. புதிய புதிய தமிழ் நாடகங்களை அரங்கேற்றுகிருர்; சிறந்த எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துகிருர். இவரது நாடகங்கள் தமிழ்நாட்டைப் பின்னணியாகக் கொண்டவை. இப் பணிகளினல் தமிழுக்கு, நாட்டுக்கு பெருமை ஏற்படுகிறது.

முத்து. ஜமால்பூர்.

நடிப்பில் திருப்பம்

குறிப்பிட்ட தொரு கட்சியில் சம்பந்தப்பட்டவர்களின் பெயரைக் கொண்டு, பட உலகில்-புரட்சி செய்யும் விதத்தில் ஏதாவது புதுமையாகக் காணலாம் என நினைத்துப் படம் பார்க்கப் போகும் 'புரட்சிப் பிரியர்'களுக்கு பெரிதும் ஏமாற்றமளிக்கும் வகையில்-எந்தக் கட்சி சார்பாகவும் இல்லாமல், ஒரு சாதாரணப் பொழுது போக்குப் படம் என்ற அம்சத்தையே பிரதானமாகக் கொண்டு, வெளிவந்திருக்கிறது. ஸ்ரீமதி பிக்சர்ஸின் "ஆசை அண்ணு-அருமைத் தம்பி". ஆரம்பத்திலிருந்து அண்ணனுக்காகவே சமைத்துப் பாடுபட்டு, அண்ணியின் மரணத்துக்குப்பின் ஆதரவாய் விடப்பட்ட குழந்தையைக் காப்பாற்றி, வளர்த்து அந்தப் பெண் விரும்பிய மணளனுக்கே மணமுடித்து வைத்து கடைசியில் அண்ணனலேயே முடிவு ஏற்படுமோ என்னும் கட்டத்தில் யாவரும் ஒன்று சேரும் வரையில்-ஒரு சிறந்த குணசித்ர பாகமேற்று-ஓர் சிறந்த தியாகியாக-கடைசியில் கண்ணை மூடிவிடும்போது, அடாடா சாகடித்து விட்டார்களே! அந்தத் தியாகியின் வாழ்வில் சுகமே கிடையாதா என ஐயுறும்போது, தனக்கே இயல்பான ஹாஸ்ய நடிப்போடு, "நான இறப்பேன்? பேரன் பேத்திகளுக்கு கல்யாணம் ஆகும் வரையில் இருப்பேன்" என்று கூறி நாற்காலியிலிருந்து ராமச்சந்திரன் எழுந்திருக்கையில், அதுகாறும் மனதில் எழுந்த எண்ணங்கள் மறைந்து நிம்மதி பெறுகிருேம். "ராஜி என் கண்மணி"யிலேயே குணசித்ர பாத்திரமேற்று நடித்த ராமச்சந்திரனுக்கு, மீண்டும் அதே மாதிரிப் பாத்திரம் கிடைத்து, திறம்பட நடித்திருக்கிருர். ஹாஸ்ய நடிகர் என்பதற்காக எல்லாப் படங்களிலும் கூத்தடிக்க வைக்கும் படாதிபதிகள், ரசிகர்களுக்கு சலிப்பேற்படாத வகையில் ஒவ்வொரு நடிகருக்கும் பலரகமான பாத்திரங்

• பரிசுக் கடிதம் எழுதியவர்:—முத்து. ஜமால்பூர்.

களை அளித்து, அவரவர் திறமையைப் பரிசோதிக்க வேண்டும் என்பதை இனியேனும் தயாரிப்பாளர்கள் உணருவார்களா? கே. ரகுபதி, கும்பகோணம்.

யார்மீது பழி?

சமீபத்தில் வெளிவந்திருக்கும் சில படங்களைப் பார்த்ததும் "தமிழ்ப் படங்கள் முன்னேற வேண்டாம். இருக்கும் நிலையைவிட்டு பின்னேறாமல் இருந்தால்போதும்" எனத்தோன்றுகிறது. சில நல்ல படங்கள் இடை இடையே வெளிவருகின்றன என்பது உண்மை ஆனால் இதைக்கொண்டு மட்டும் தமிழ்ப் படங்களின் இன்றைய நிலை பற்றி திருப்தி கொள்ள முடியாது. வேஷத்துக்குத் தக்க ஆள் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக ஆளுக்குத்தக்க வேஷமும், நடிகர்களுக்கு ஏற்பக் கதைகளும் பொறுக்கப் படுகின்றன. பணம்தான் முதலாளிகளின் லட்சியமாக உள்ளது. கடைசியாக பழிமுழுவதும் பொதுமக்கள் மீதுதான். "பொதுமக்கள் மட்டமானபடங்களைப் பார்ப்பதால்தானே முதலாளிகள் திரும்பத் திரும்ப அதே மாதிரியான படங்களைத் தயாரிக்க முற்படுகிறார்கள்" என்று கேட்கலாம். ஆனால் எங்கள் ரஸனை அவ்வளவு மட்டமாகி விடவில்லை. எல்லாப் பழிகளையும் பொதுமக்கள் மீதே போடமுடியுமா? பொழுது போவதற்கு வேறு வழி இல்லாமையால் ஏதாவது ஒன்றைப் பார்த்துத் தொலைய வேண்டி இருக்கிறது என்பதே பலரது அபிப்ராயமாகும்.

ஏ. வி. மஹேஸ்வரி, கடலூர்.

வசதியும் திறமையும்

நடிகை திலகமும் நடிகர் திலகமும் ஒன்று சேர்ந்து நடித்திருக்கும் "மங்கையர் திலகம்" என்னும் படம் திரைப்பட உலகில் உண்மையிலேயே ஒரு திலகமாகத் திகழும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு அப்படம் ஒரு ஏமாற்றம் என்றுதான் கூறவேண்டும். நாட்டின் பண்பாட்டிற்கு ஏற்ப உள்ளத்தை உருக்கும் வகையில் உயர்தர உணர்ச்சிகளைச் சித்தரித்து எழுதப்பட்டிருக்கும் கதையைச் சாதாரண நடிகர்

தமிழ்நாடு ஏஜண்டுகள் :—சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், மேலகோபுர வாசல், மதுரை.

களைக் கொண்டு படம் எடுத்திருந்தால் கூட முயற்சி வெற்றியடைந்திருக்கும், பண வசூலைப் பொருத்த அளவில். ஆனல் பத்மினியும் சிவாஜி கணேசனும் நடிக்கும் படத்தில் இதற்கும் மேலாகக் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சங்கள் இருந்தால்தான் ரஸிகர்கள் திருப்தியடைவார்கள். அம்மாதிரியான குறிப்பிடத்தக்க பெருமைகள் ஒன்றும் இப்படத்தில் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. அதற்கு மாருக, பிரதான நடிகர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பொருத்தமற்ற வேஷமும் பேச்சும் கதையின் போக்கில் கவர்ச்சியைக் குறைத்து விடுகின்றன. ஆரம்பத்தில் வாசுவைச் சிறு பையனகவும் முடிவில் இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனகவும் காட்டியிருக்கும் டைரெக்டர், சுலோசனவை மட்டும் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் ஒரு யுவதியாகவே தோற்றமளிக்கச் செய்திருக்கிருர். வாசுவின் பாகம் பேச்சுத் திறமையுள்ள ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் அவர் பேசித் தீர்க்கவேண்டும் என்பதற்காகவே அவருக்கான வசனங்கள் எழுதப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அவரை "பேச்சுக் கடன்" ஆற்றச் செய்திருக்கிருர்கள் என்று எண்ணச் செய்கிறது. நல்ல வசதியிருந்தும் நன்கு பயன்படுத்தும் திறமையில்லாததால் தமிழ்ப் படங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதற்கு "மங்கையர் திலகம்" மற்றுமோர் சான்ருகும்.

ஜே. ராஜலக்ஷ்மி, சென்னை-1.

நல்ல படம் தயாரிப்பீர்!

ஒரு மனிதன் நல்லவனகவோ, கெட்டவனகவோ இந்த உலகில் பிறப்பதில்லை. இந்த உலகில் பிறந்த பின்புதான் அவன் நல்லதையோ கெட்டதையோ பழகிக் கொள்கிருன். அவனை நல்லவனகவோ கெட்டவனகவோ மாற்றுவது அவன் பிறந்த சமுதாயத்தைப் பொறுத்ததே அந்த முறையில் தான், ஒரு சமூகக் கொள்கைகளைப் போன்றதுதான் சினிமாவும். ஒருவன் நல்லமனப்பான்மையுடன் நல்ல படங்களைப் பார்ப்பானகில் அவன் அறிவு களங்கமின்றி கண்ணியமாகச் செழிப்புற்று வளர முடிகிறது. உதாரணமாக, தெய்வபக்தியில் குறைவான எத்தனையோ பேர்கள். "ஔவையாரை"ப் பார்த்து தெய்வபக்தியுடையவராயும், விபூதியே சைவர்களின் அணிகலன் என்று போற்றியதையும் நான் கண்ணுரக் கண்டேன். அதேபோல் "பராசக்தி"யைப் பார்த்த சில பெண்கள் குழந்தையுடன் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்ய முயற்சித்து, கோர்ட்டில் ஆஜராகி நீதிபதியால் 'இனிமேலும் இப்படியான படங்களைப் பார்த்துவிட்டு இப்படியான செய்கைகளில் ஈடுபடாதீர்கள்!' என்று எச்சரிகை செய்யப்பட்டுள்ளதையும் பத்திரிகை மூலம் அறிந்துள்ளேன். படங்களைத் தயாரிக்கும் பொழுது, வியாபாரத்துக்கு என்பதை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளாது நாட்டைச் சீர்திருத்த நல்லதோர் படம் தயாரிப்போம் என்ற உள்ளக்கருத்துடன் உன்னதப் பண்பு வைத்து, மக்கள் மனதை மாண்புடையதாக்கி பண்பும் அறிவும் சிறக்கத்தக்கதான சிறந்த படத்தைச் சிறந்த முறையில் தயாரித்தலும் வேண்டும்.

ஏ. ராமலிங்கம், இலங்கை.

ஆபாசம் எது?

ஒரு சிலர் "ஆங்கிலப் படங்களில் இருந்துதான் விபசாரம் அதிகரிக்கிறது" என்று சொல்கிருர்கள். இது ஓரளவுக்கு உண்மையெனினும் தமிழ்ப் படங்களுக்கும் இதில் பெரும் பங்கு உண்டு. ஆங்கிலப் படங்களில் நேரிடையாகக் காட்டும் காட்சிகளை தமிழ்ப் படங்களில் 'ஒளி மறைவாகக்' காட்டுகின்றனர். உதாரணங்கள்: "மாயாவதி" என்ற படத்தில் மஹாலிங்கத்தின் காலின்மேல் அஞ்சலிதேவியின் காலைக் காண்பித்துவிட்டு (கால்களைமாத்திரம்) அடுத்த காட்சியில் அஞ்சலி தேவி தன் நாக்கை உதடுகளின்மேல் சுழற்றிவிட்டுக்கொண்டு மஹாலிங்கத்தினிடம் "எப்படி இருக்கிறது?" என்று கேட்கிருர். இன்ஸ்பெக்டர் படத்தில் பி. கே. சரஸ்வதி சோபாவில் உட்கார்ந்திருக்கிருர். ஷண்முகம் பின்புறமாக வந்து அவர் கன்னத்தின்மேல் கையைவைத்து அவர் முகத்துக்கு நேராகக் குனியும் வரை நாம் பார்க்கிருேம். "சந்திரலேகா"வில் ராஜகுமாரியை சுவரில் சாத்தி ரஞ்சன் அவரை முத்தமிட முயற்சிக்கும் காட்சியையும் பார்த்தோம். ரஸிகர்களிடை பரபரப்பை ஊட்டிய "தாரா சசாங்கம்" காட்சியை நாம்

நரஸு புரடக்ஷன்ஸார் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளில் தயாரித்து வரும் "கிஸ்மத்" படத்தில் ஜெமினி கணேஷ், சாவித்திரி, சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, சாயிராம், கிரிஜா, பேபி சரஸ்வதி ஆகிய நக்ஷத்திரங்கள் நடித்து வருகின்றனர்.

இன்னும் மறக்கவில்லை. வைஜயந்தி மாலா, வித்யாவதி, ஹரிணி போன்ற வர்கள் 'நீச்சல் உடை'யில் வருவதை யும் பார்த்துக் கொண்டுதானிருக் கிறோம். இவைகளையெல்லாம் எந்தக் காட்சியில் சேர்ப்பது என்பது தெரிய வில்லை. முதலில் நம் படங்களில்உள்ள ஆபாசக் காட்சிகளை அகற்றுவதற்கு முயற்சித்துவிட்டுப் பிறகு ஆங்கிலப் படங்களில் உள்ள ஆபாசக் காட்சி களைப் பற்றிப் பேசுவோம்.

ஜி. என். ராஜகோபாலன், பூனா.

வெட்கக் கேடான விஷயம்

அளவுக்கு மீறிய விளம்பரத்தினால் சில படங்கள் அதோகதியானது ரசிகர் களுக்குத் தெரியும்; தயாரிப்பாளர்களுக் கும் தெரியும். பொய் விளம்பரத்தினால் ஏற்பட்ட ஏமாற்றம்தான் அப்படங் களுக்குச் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய மதிப்பையும் இல்லாமல் செய்து விட்டன. விளம்பரம் என்ற வகையில் அவைகளை மறந்துவிடலாம். ஆனால் தென்னிந்தியாவில் நீண்டகாலமாக வெளிவரும் ஒரு பிரபல சினிமாப் பத் திரிகை சமீபத்தில் வெளிவந்த "குலே பகாவலி"யில் வரும் புலிச்சண்டையைப் பற்றி வானளாவப் புகழ்ந்து ஒரு கட் டுரை எழுதியிருக்கிறது. உண்மையை மறைத்துப் பல பொய் விஷயங்களையும் அதில் கொடுத்திருக்கிறது. — தந்திரக் காட்சிகளை மறைப்பதற்காக ஏன் பொய்யைக் கூறி ரசிகர்களை ஏமாற்ற வேண்டும்? தயாரிப்பாளர்கள் இதைச் செய்திருந்தாலும் 'விளம்பரம்' என்று அதைக் கவனியாமல் விட்டுவிடலாம். ஆனால் நல்ல பத்திரிகை என்று ரசிகர் கள் நம்பியிருக்கும் ஒரு பத்திரிகை இப் படிச் செய்யலாமா? இது பத்திரிகை தர்மமாகுமா? இந்த விஷயத்திற்கு யார் காரணமாயிருந்தாலும் குறிப் பிட்ட பத்திரிகையின் பேரில்தான் பழி சேரும். இதை அறியாமல் இப் பத்தி ரிகை ரசிகர்களுக்குத் துரோகம் செய் தது வெட்கக் கேடான விஷயம்.

"மணி" ஆரப்பற்றை—இலங்கை.

திரைப்படத் திலகம்

இன்றைய சினிமா உலகில் பல படங் கள் பல காரணங்களால் வெற்றி யடைந்திருக்கின்றன. அடுக்கு வசனங் களாலும், கத்திச் சண்டைகளாலும், காதல் கதைகளாலும் பல படங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. அவை களைப் பார்க்கும்போது நாம் மகிழ்ச்சி யடைந்தாலும், அந்த மகிழ்ச்சி நம் உள்ளத்திலேயே தங்கி விடுவதில்லை. ஆனால் "மங்கையர் திலகம்" பார்த்த பிறகு அதிலுள்ள ஒவ்வொரு காட்சி யும் நம் கண் முன்னால் தோன்றிக் கொண்டே இருக்கும். அழகிய பூந் தோட்டத்தில் ஆனந்த கீதம் பாடும் காதல் காட்சிகள் அதில் இல்லை. பற் கள் நொறுங்கும்படியான அடுக்குச் சொற்கள் இல்லை. ஆயிரம் பேரை ஒரு வனே எதிர்த்து வெற்றி பெறும் ஸ்டண் டுக் காட்சிகளும் இல்லை. ஆனால் அதில் வரும் ஒவ்வொரு காட்சியும் அருமையான காட்சி. காதல் காட் சிகளும், அடுக்குச் சொற்களும், ஸ்ட ண்டுக் காட்சிகளும் இல்லாமலேயே ஒரு நல்ல படத்தை எடுக்க முடியும் என்பதை நன்கு விளக்குகிறது "மங் கையர் திலகம்.' சுலோசனா மங்கையர் திலகமாக விளங்குவது போல் (இது வரை வந்த) திரைப் படங்களுக்கெல் லாம் ஒரு திலகமாக விளங்குகிறது "மங்கையர் திலகம்"

இ. கே. ராஜலக்ஷ்மி,
கோழிக்கோடு (மலபார்)

கவனிப்பார்களா?

"ஆஸாத்", "சந்திரலேகா," "நிஷான்" இவைகளின் வெற்றி முதலாளி களின் கண்களைத் திறக்க வேண்டும். நல்ல கதையம்சங்கள் கொண்ட "பூலோக ரம்பை", "மதன காமரா ஜன", "ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி" முதலிய படங்களை வட இந்திய நக்ஷத்திரங்களான திலீப் குமார், மீனகுமாரி இவர்களைக் கொண் டே படம் எடுத்து வட இந்திய மார்க் கெட்டுகளைப் பிடிக்க வேண்டும். இங் கெல்லாம் மதராஸி-ஹிந்திப் படங் களைப் பற்றி ஒரே புகழ்ச்சியாகப் பேசு கிறார்கள். தமிழனுக்குத் திறமை அதிகம். ஹாஸ்யப் பேச்சுக்கு அவனிடம் மற்ற மாகாணத்தவர் பிச்சை யெடுக்க வேண் டும். பெரிய அரங்க நிர்மாணமோ தமி ழனுக்கு சிறு பிள்ளை விளையாட்டு. தமி ழன் அருமையான ஆங்கிலம் எழுது வதில் வல்லவன் என்று வட இந்திய ரிடமிருந்து பட்டம் பெற்றதுபோல

அருமையான ஹிந்திப் படங்களை வெளியிட்டு விஜயபட், சாந்தாராம் போன்ற டைரெக்டர்களைத் தோற்கடிக்க வேண்டும்.

ஆர். ராமசாமி, ஹைதராபாத்.

மங்கையர் திலகம்

“நல்ல படமே வராதா?” என்று கடந்த பல நாட்களாக ஏங்கித் தவித்த தமிழர்களுக்கு ஏக்கத்தைத் தவிர்த்து உற்சாகமூட்டும் வகையில் அமைந்துவிட்டது “மங்கையர் திலகம்”. விறுவிறுப்பு அதிகம் இல்லாத கதையை வைத்துக்கொண்டும் படத்தில் வெற்றி பெறலாம் என்பதை நிரூபித்துவிட்டார் டைரெக்டர் பிரசாத். நடிப்பில் பத்மினி முதன்மை ஸ்தானம் பெற்றுவிடுகிறார். சிறுவன் பாஜியின் திறமையை அற்புதமாக எடுத்துக் காட்டிவிட்டார் டைரெக்டர் பிரசாத். அவன் முகத்தில் அன்பு, ஆணவம், ஆசை, அகங்காரம் இவை தனித்தனியே தோன்றும்போது தத்ரூபமாக இருக்கின்றது பிரதிபலிப்பு. அவன் பேச்சும் நடிப்பும் பிரமாதம் என்று சொல்லலாம். வெகு சீக்கிரம் “பாஜி” முன்னேறிவிடுவான் என்பதில் ஐயமில்லை. ஆனல் அதற்கு டைரெக்டரின் சாமர்த்தியம் மிக அவசியம் என்பது “போர்டர் கந்தன்”—“மங்கையர் திலகம்” இரண்டையும் பார்த்தவர்களுக்கு விளங்கிவிடும். சிவாஜி கணேசன் நடிப்பும் முதல்தரம். சுப்பையா உணர்ச்சியுடன் நடித்திருக்கிறர். தங்கவேலு மிகையில்லாமல் நடித்திருந்தால் மிக நன்ருயிருந்திருக்கும். மொத்தத்தில் “மங்கையர் திலகம்” சமீபத்தில் வெளியான படங்களின் திலகம்தான்.

வே. ஸ்ரீ. கோவிந்தன், கிண்டி.

மெச்சத் தகுந்தது!

“சரியல்ல” என்ற தலைப்பில் கடந்த ஆகஸ்டு மாதம் ஒரு சகோதரர் எழுதியிருப்பது பற்றி மிகச் சந்தோஷப்படுகிறேன். ஆணும், பெண்ணும் சம உரிமை கொண்டாடும் இக்காலத்தில், இன்னும் முரணுக சில விஷயங்கள் நடந்துதான் வருகின்றன சில குடும்பங்களில். பொதுநன்மைக்காக வெளியோரிடம் பேசுவதும், வாயளவில் இருப்பதே தவிர, தன் சொந்த விவகாரத்

தில் அடக்கி ஆள்வதே தவிர, அனுச ரித்துப் போவதென்பது சாத்யம் அவர்களுக்கு இல்லை. இனிமேலாவது தடை உத்தரவு இல்லாமல் பெண்களுக்கு மதிப்புக்கு ஏற்றபடி தக்க சமத்துவம் கொடுக்க வேண்டுமெனப் பெண்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

கௌஸல்யா ஜெயஸிங்,
சென்னை-4.

ஏன் அவசியமில்லை?

கடந்த ஜூலை மாத 'குண்டூசி'யில் 'சினிமா அவசியமா?' என்ற கேள்வியைக் கேட்டு ஒரு அன்பர் தீட்டியிருந்த கடிதத்தைக் கண்டேன். அவருக்கு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். அவர் சினிமாவினால் ஏற்படும் தீமைகளை விளக்கியிருக்கிறாரே ஒழிய நன்மைகளைக் கூறவில்லை. சினிமா ஒரு பொழுது போக்கு சாதனத்தோடல்லாமல் மக்களின் அறிவை வளர்க்கும் ஒரு கருவி என்பதை எவரும் மறுக்க முடியாது. சினிமாவினால் தீமையும் ஏற்படுகிறது, மறுக்கவில்லை. சமுதாய சீர்திருத்த எண்ணங்களை மக்கள் மனதில் பதிய வைக்கும் ஒரு இயந்திரம் தான் சினிமா. சினிமாவினால் அறிவையும் புகட்டலாம்; ஆபாசத்தையும் வளர்க்கலாம். அதனால் அதைப் பயன்படுத்தும் முறையில் தான் இருக்கிறது நன்மையும் தீமையும். சினிமாவில் மட்டும் தான் ஆபாசமிருக்கிறதா? யாரோ சில கச்சணிந்த கொங்கை மாதர் அரை நிர்வாணத்துடன் ஆடினால் அதைத் தடுக்க வேண்டும், அதை விட்டு ஒரு உன்னதக் கலையை— அறிவுலகம் கண்டெடுத்த பொக்கிஷத்தை அழிக்கலாமா? சேர, சோழ, பாண்டியர் ஆண்ட பொழுது மக்கள் என்ன பொழுது போக்கு இன்பத்தை அனுபவித்தனர் என்று கேட்கிறார். அந்தக் காலத்தில் மனிதன் ஓரிடம் விட்டு வேறு இடத்திற்குச் செல்ல வேண்டும் என்றால் நடந்தே சென்றான். இப்பொழுது பறந்தல்லவா செல்கிறான் ஆகாய விமானம் மூலம். அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் முடி போடுவது அவ்வளவு அழகல்ல. அப்பொழுதும் அக் காலத்திற்கு ஏற்றவாறு மக்களின் பொழுது போக்குக்காக கலைகள் இருக்கத்தான் செய்தன. காலம் வளர வளர, மக்களின் அறிவு வளர வளர உலகம் முன்னேற்றத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்ததன் விளைவாக சினிமா ஏற்பட்டது. இதை நம்பி பல ஆயிரம் பேர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அதற்கு மூடுவிழா நடத்தி விட்டால் பல ஆயிரம் பேர்களின் வாழ்வுக்கும் மூடுவிழா நடத்த வேண்டியது தான். அதில் நண்பர் ஆத்ம சுகம் காண்கிறாரா? கதிரவனுக்கு இணையான ஒளியைக் கொடுக்கும் மின்சாரத்தினால் அபாயம் கூட நேரிடுகிறது. அதற்காக மின் சக்தியே வேண்டாம் எனக் கூற முடியுமா? சினிமாவில் ஏதாவது தவறு இருந்தால் திருத்தம் செய்யப்படட்டும். ஒழுக்கக்கேட்டை நீக்கட்டும். ஆபாசமிருந்தால் எடுத்துக் கூறட்டும். குளத்தில் பாசி படிந்திருந்தால் பாசியை நீக்கவேண்டுமேயல்லாது குளத்தையே மூடிவிடுவது அறிவுடைமையாகாது. அது போல சினிமாவில் ஒழுக்கக்கேடு இருந்தால் அதை நீக்கப் பாடுபடவேண்டுமே தவிர அதை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொள்வதும் அறிவுடைமை ஆகாது. நன்றாக ஆராய்ந்து பார்த்தால் சினிமா அவசியமே என்ற முடிவுக்கே அவர் வருவார். நண்பர் சிந்திப்பாராக!

"பாலு", ஒரத்தநாடு.

மங்கையர் திலகம்

"மங்கையர் திலக"த்தைக் காணும் பொழுது மக்கள் மனதில், மங்காத ஒளி விளக்காய்த் திகழும் சில கருத்துக்களை வசனத்தின் மூலம் கேட்கிறோம். கடவுளைப் பழித்து கண் மூடித் திரியும் கண்யவான்களின் கூட்டத்திற்கு, கண்ணைத் திறக்கும் சில கருத்து நிறைந்த வசனங்கள், மனம் வெதும்பி துயரப்படும் தன் தம்பி வாசுவை நோக்கி கருணாகரன் சொல்கிறார். "இன்பத்தையும் துன்பத்தையும் எவனொருவன் சமமாகப் பாவிக்கிறானோ அவன் தான் ஆண்டவனின் வடிவத்தைக் காண முடியும்." இது வாசுவுக்கு மட்டும் சொல்லப்பட்ட உண்மையல்ல. வையத்தில் வாழும் மனித இனத்திற்குச் சொல்லப்பட்ட கருத்துரை. கடவுள் என்று ஒருவன் இருந்தால் அவனை எனக்குக் காட்டு? என்று கேட்பவர்களுக்கு உள்ளத்தில் பதியும் வண்ணம் உருவாக்கப்பட்ட பதில். மற்றொன்று மனித சமுதாயத்தைப் படைத்த கடவுள் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியது ஏன்? என்று கேட்பவர்களுக்குப் பதில் கொடுக்கிறார்கள்

''மங்கையர் திலக'' வசன கர்த்தாக்கள். ''இன்பம் மட்டும் இருந்தால் நாம் மதிமபங்கி விடுவோம், அதனுலேதான் கடவுள் துன்பத்தையும் கலந்து வைத்திருக்கிருர்'' என்ற வசனத்தின் மூலம். தன்னலம் கருதாத பிரார்த்தனையின் மூலம் எதையும் அடையலாம் என்ற கருத்தையும், கோயிலில் குழந்தையின் உடல் நிலை அபிவிருத்தி அடைவதன் மூலம் காட்டிய வசன கர்த்தாக்களையும், ''மங்கையர் திலகம்'' தயாரிப்பாளர்களையும் மக்கள் மன்றம் என்றும் மறவாது. தமிழ்ப்பட உலகில் கருத்து நிறைந்த வசனங்கள் மூலம் மனதில் படியும் நாத்திகம் எனும் இருள் கரைய ''மங்கையர் திலகம்'' போன்ற கருத்து நிறைந்த கதைகளை உயிருட்டும் வசனங்களின் மூலம் மக்களுக்கு அளிக்க மேன்மேலும் வைத்யா பிலிம்ஸ் ஈடுபட வேண்டுகிறேன்.

எஸ், ஜி. சாலை, மதுரை.

அவசர முடிவு !

கடந்த ஜுலை மாத குண்டுசி இதழில் 'சினிமா அவசியமா' என்ற தலைப்பில் கடிதம் எழுதியிருந்த அன்பர், ''சினிமா போன்ற பொழுது போக்கு அவசியமில்லை. அதனுல விபசாரம் பெருகவும், இளம் உள்ளங்கள் கெட்டுப் போகின்றன. கலையம்சங்கள் சிறிதும் கிடையாது. அவ்வளவும் ஆபாசமே'' எனத் தீட்டியுள்ளார். அக்கால அரசர்களும், மக்களும் பொழுது போக்கிய விதத்தையும் உதாரணம் காட்டியுள்ளார். அக்காலம் அடிமைகளாக, நாகரீக மில்லாமல் இருந்தனர் மக்கள். இக்காலம் சுதந்திரமாக நாகரீகமாக வாழ்கின்றனர் மக்கள். அப்படியிருக்க அக்காலத்தையும், இக்காலத்தையும் இணைத்துக் கூறியிருப்பது பொருத்தமற்ற வாதம். அத்துடன் சினிமாவில் அரை நிர்வாண நடனங்களே மிகுந்துள்ளதாகக் கூறுகிருர் அன்பர். உண்மை. அன்பர் கூறியுள்ள அக்கால மக்கள் பொழுதுபோக்குக் கோவில்களுக்குச் சென்று கடவுள் வழிபாடு செய்தனர் என்றும் கூறியுள்ளார். அக்கோயில்களில் இல்லையா ஆபாசம்? கோவில் தூண், சுவர்களில் சிற்பங்களாகக் காட்சி அளிக்கிறதே ஆபாசம்! அக் காலத்திலும் மக்களுக்குப் பொழுது போக்க ஏற்ற சாதனம் இல்லாமையால் அவ்வண்ணம் இருந்த



னர். என்றுமே அப்படி இருக்கவேண்டும் என அன்பர் கருதுகிருர். எல்லாப் படங்களிலும் அரை நிர்வாணமாக ஆடை அணிந்து ஆடுவதாகக் கூறியுள்ளார். ஒருசில படங்களில் ஆபாச நடனம் இருப்பது உண்மை. அதற்குக் காரணம் யார்? சென்ஸார் அல்லவா? அவலே நினைத்து உரலே இடித்தால்....! அதுபற்றி அரசாங்கத்தைக் கண்டியுங்கள். அதற்காக உன்னதமான கலே தேவையில்லே எனக் கூருதீர்கள். சர்க்காரின் தூதுவரான சென்ஸாரின் அனுமதி இல்லாமலா அந்த ஆபாசம் வெளி வருகிறது? சென்ஸாரின் கவனக் குறைவைக் கண்டியுங்கள். அதற்காக ஏழைகளின் இலப்ப பொழுது போக்கு சாதனமான சினிமாவை வெறுக்காதீர்கள். சில டில்லி தாய்மார்களேப் போல, ஆபாசமில்லாத "அண்ணி", "ஒளவையார்", "வள்ளியின் செல்வன்", "ஜெயகோபி" போன்ற படங்களே பார்க்கவில்லேபோலும் அன்பர். ஆபாசமான நடனங்களே நீங்கள் மட்டுமல்ல, நானும் என்போன்ற ரசிகர்களும்தான் வெறுக்கிருேம். ஆனல் அதற்காகத் தங்களேப் போல அவசரப்பட்டு சினிமாவே தேவையில்லே எனக் கூறமாட்டோம். சென்ஸாரின் கவனக் குறைவைத்தான் கண்டிப்போம். கழுத்தில் புண்வந்தால் கழுத்தை வெட்டுவது அறிவீனம். அது ஆறுவதற்குரிய மருந்தைப் போட்டு ஆற்றவேண்டும். அதுபோல சினிமாவில் ஆபாசம் இருந்தால் அதற்காக சினிமா தேவையில்லே எனக் கூருமல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து இனி அம்மாதிரிக் குறைகள் ஏற்படாமல் தடுக்கத்தான் முயற்சி எடுக்க வேண்டும் என அன்பர் நினைத்து சினிமா தேவையில்லே என்ற எண்ணத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

எஸ். ஜீ. சங்கரராஜன், கமுதி.

கோட்டகைகளில் கலாட்டா!

கடந்த ஜூன் மாத "குண்டூசி"யில் "இது செய்தி" பகுதியில் வெளிவந்த "கொட்டகைகளில் கலாட்டா" என்ற செய்தி தியேட்டரதிபதிகளின் அறிவுக் கண்களே நன்ருகத் திறந்திருக்கவேண்டுமென எண்ணுகிறேன். பணத்தாசையாலும், அபரிமித லாப இச்சையாலும் உந்தப்பட்டு, தியேட்டரில் எத்தனே பேர் செளகரியமாக அமர்ந்து படம் பார்க்க முடியுமோ அதைப்போல இருமடங்கு மும்மடங்கு டிக்கட்டுகளே விநியோகித்து, சினிமாப் பார்க்கப் போகிறவர்களே உப்பு மூட்டை, புளி மூட்டைகளேப் போல் ஒடுக்கி, அடுக்கி, நசுக்கிப் பிழிந்து உபத்திரவப்படுத்தி அனுப்புகிருர்கள், தியேட்டரதிபதிகள். இத்தகைய நரக வேதனையை அனுபவிக்கும் நிலேயில், எத்தகைய உயர்தர படமாயினும் என்னதான் ரசிக்க முடியுமோ எனக்குத் தெரியாது! நாற்பது பிரயாணிகளே ஏற்றிச் செல்லும் ஒரு பஸ்ஸில் ஒரு பிரயாணி கூட இருந்தால் வழக்குத் தொடரும் சர்க்கார், ஆயிரக் கணக்கில் அவஸ்தைப்படும் சினிமா ரசிகர்கள் விஷயத்தில் ஏன் இவ்வித பாரபட்சம் காட்டுகிருர்கள்? ஒரு தியேட்டரில் அதன் அளவுக்குத் தக்கபடி, இத்தனே டிக்கட்டுகள் தான் ஒரு காட்சிக்கு விநியோகிக்கலாம் என்ற ஒரு சட்டம் இருப்பதாகத் தெரியவில்லே அப்படி இருந்தால் ஏன் அமல் நடத்தப்படுவதில்லே? ரசிகர்கள் படைபதைக்கும் வெய்யிலில் மணிக்கணக்காகக் காத்திருந்து இடிபட்டு,உள்ளே சென்று, தாங்க முடியாத உஷ்ணத்தில் வியர்வையை ஆருக ஊற்றி, நரக வேதனேப்பட்டு, எப்பொழுது வெளியே போவோம் என்று இருந்துவிட்டு, படம் முடியுமுன் எழுந்து வெளியே வந்து சற்று காற்று வாங்குகிருர்கள். படம் முடியுமுன் ஓடுகிருர்களே என்று அவர்களே நோவதில் பயன் என்ன! இத்தகைய அசாத்தியமான கூட்டங்களில் குழப்பம் வந்தால் அது எப்படி இருக்கும் என்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே. அதுவும் பெண்டு பிள்ளேகளோடு தியேட்டருள் சிக்கித் தொண்டவர்கள் இந்தக் குழப்ப நிலேயில் எவ்வளவு திகிலடைந்திருப்பார்கள் என்பது எந்த அரசாங்கத்திற்கும் தியேட்டரதிபதிகளுக்கும் தெரியவேண்டும். இத்தகைய ஆபத்தான விஷயத்திற்கு சர்க்கார் தகுந்த சட்டம் இயற்றி, கூட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விஷயம் நாடகங்களுக்கும், சங்கீத நாட்டியக் கச்சேரிகளுக்கும் பொருந்தும்.

வி. ஏ. சிங்காரவேல்,
ஹப்புத்தலே, இலங்கை.

சந்தேகப் புயல்

'அன்பு வாசன்'

கிரிஜா கூறுகிறாள் :

அவரை அறிவாளி என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். எதையும் அறியக் கூடியவர் அறிவாளியாம். ஆனால் நான் அவரை அறிவாளி என்று ஒப்புக் கொள்ள முடியவில்லை. எல்லாவற்றையும் அறிய வேண்டிய அவர், என்னை—கொதிக்கும் என் உள்ளத்தை—அறிந்து கொள்ளவில்லை. பின் எப்படி நான் அவரை அறிவாளி என்று சொல்வது? மற்றவர்கள் அவரை அறிவாளி என்று சொல்லும்போது எனக்கு ஏற்படும் இன்பத்திற்கு அளவே இல்லை. நான் அவரை அறிவாளி என்று எண்ண இடமே இல்லை — இப்படிச் செல்கிறது என் பைத்தியக்கார எண்ணம். ஏன் இப்படிப்பட்ட பைத்தியம் ஏற்பட்டது? நான் இதை எண்ணும் போது, என் இதயத்தின் சூனிய வெளியில் ஒரு குரல் எதிரொலிக்கிறது. இந்தப் பைத்தியக்காரத்தனமான எனது எண்ணத்துக்கு அவர் தான் காரணம் என்று முணுமுணுக்கிறது அந்தக் குரல். ஆம்; என்னைப் பைத்தியம் போல் ஆக்கியவர் அவர்தான். தெளிந்த என் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்த பளிங்கு இன்பம், இப்பொழுது சேற்றுக் குட்டையானது அவரால் தான்.

அவரை நான் காதலிக்கிறேன். இன்று நேற்றிருந்தல்ல. சுமார் ஐந்து ஆண்டுகளாக. இந்த ஆபீஸில் டைபிஸ்டாக நான் வேலைக்கு வந்தபோது தான் அவரும் வந்தார். டைப் யந்திரத்தில் விரல்களால் அழுத்தப்பட்டு எழுத்துக்களை ஏற்கும் வெள்ளைக் காகிதம் போல, அவரால் என் உணர்ச்சியற்றிருந்த உள்ளம் காதல் என்ற மூன்று எழுத்துக்களைப் பதித்துக்கொண்டு விட்டது. நிர்மலமான நீல வானத்தில் எண்ணற்ற விண் மீன்கள் உலவினாலும், நிலவிடம் மட்டும் பூமி தேவி நெருங்கிப் பழகுகிறாள். நானும் அவரை நெருங்கிப் பழகப் பார்க்கிறேன். அவர் என்னை ஏறெடுத்தும் பார்க்கமாட்டேனென்கிறார். ஆனால் என் உள்ளத்தை மட்டும் களவாடி விட்டார். உலகம் உள்ளத்தைக் களவாடியது அவர் குற்றமல்ல; உள்ளத்தைப் பறிகொடுத்தது என் குற்றம் என்று கூறும். நான் என்ன செய்யட்டும்! ....

அவருக்குக் காதல் உணர்ச்சியே இல்லையா? இந்தக் கேள்வியை நான் கேட்டுக் கொள்வதே பைத்தியக்காரத்தனம். அவருக்குக் காதல் உணர்ச்சி இருக்கிறது. ஆம்; அவர் வேறொருத்தியைக் காதலிக்கிறார். இனத்துக்கு இனம் நன்மை செய்யும் என்று கூறுகிறார்கள். ஆனால் என் இனத்தைச் சேர்ந்த ஒருத்தியே அவரைக் கவர்ந்து விட்டாள்.

காதல் உலகில் இனத்துக்கு இனம் ஒற்றுமை இருக்காதோ! ஆம்; காந்தம் இரும்பைத் தான் இழுக்கிறது. காந்தத்தையே அல்ல.

அவள் எங்கிருந்தோ வந்தாள். அவளும் இங்கே ஒரு டைப்பிஸ்ட் தான். அவளால் அவர் உள்ளத்தில் அந்த மூன்று எழுத்துக்கள் பதிந்து விட்டன. ஆம்; அவர் அவளைத்தான் காதலிக்கிறார். அவளும் அவரைக் காதலிக்கிறாள். நானும் அவரைக் காதலிக்கிறேன். இரண்டே இரண்டு இதயங்களின் உலகமான காதல், இன்று மூன்று இதயங்களைக் கொண்டு போராட்டத்தில் ஆழ்ந்து விட்டது.

அவளும் நானும் சேர்ந்து தான் உட்கார்ந்து டைப் அடிப்போம். அவர் எதிர்த்த திசையில் உட்கார்ந்து டைப் அடிப்பார். அவளும் அவரும் பார்த்துக் கொள்வார்கள். சிரிப்பார்கள். என் உள்ளம் படபடக்கும். எனக்காக நான் காத்து வந்த சொத்து என் கண் முன்னேயே கொள்ளை போவது போல் என் உணர்ச்சி தவிக்கும். ஆனால் உள்ளத்தின் உள்ளே தவிக்கும் உணர்ச்சிக்கு வெளியில் தாவிக் குதித்து எதையும் செய்ய உருவமோ, வலுவோ தான் இல்லை என்பதையே உணர்வேன்.

வனஜா கூறுகிறாள் :

காதல் என்பது உள்ளத்தில் உருவமற்று, வியாபித்து இன்பமாகத் தவிக்கும் ஓர் உணர்ச்சி என்று இதுவரைக்கும் எனக்குத் தெரியாது. காதலைப்பற்றி இதுவரை நான் படித்துத்தான் பார்த்திருக்கிறேன். இப்போது காதலைப்பற்றி நான் பாடம் சொல்லிக் கொடுக்கும் அளவுக்கு வந்து விட்டேன். இதற்கு நான் பெற்ற பயிற்சி எங்கே தெரியுமா? அவருடைய கண்களில் தான். குவி லென்ஸ், விழித் திரை, கிருஷ்ண படலம்—என்று கண்களைப் பற்றி அலசி அலசி பள்ளிக்கூடத்தில் படித்தபோது, அதற்கு உள்ள சக்தியைப் பற்றி நான் படிக்கவில்லை; யாரும் சொல்லித் தரவுமில்லை. இப்போது தான் அது கண்களாலேயே கற்பிக்கப்படும் கசக்காத பாடம் என்று தெரிந்து கொண்டேன்.

அந்தப் பாடம், நான் கேட்ட அந்த நாள்........

அப்போது தான் நான் என் சொந்த ஊரிலிருந்து இங்கே டைப்பிஸ்டாக வந்திருந்தேன். புதிதாகையால் யாரோடும் அதிகம் பழகவில்லை. பக்கத்தில் இருக்கும் கிரிஜா கூட அப்போது கலகலப்பாக என்னோடு பேசவில்லை. பொறாமையோடு என்னைப் பார்த்துப் பார்த்து ஒதுங்கினாள். காரணம் புரியவில்லை. ஆகவே, அலுவலகத்தில் வேலை முடிந்தவுடன் வீட்டுக்குக் கிளம்பி விடுவேன்.

முதல் நாள் நாங்கள் புதிதாகக் குடி வந்திருந்த வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தேன். புது ஊரின் காட்சிகளை ரசித்தபடியே சென்று கொண்டிருந்த என் பார்வையில் அந்த மாடி வீடு சிக்கியது. வழக்கப்படி என் பார்வை அடுத்த வீட்டுக்குத் தாவ வேண்டும். ஆனால் அந்த வீட்டில் பதிந்த என் பார்வை பதிந்தது தான். ஏதோ ஒன்று என்னைப் பிடித்து இழுத்து நிறுத்தியது போல ஆகி விட்டது.

அங்கே அவர் தான் நின்று கொண்டிருந்தார். அவர் பார்வையும் எனக்காக நின்றிருந்தது போல் என்னை நோக்கிக் கொண்டிருந்தது. என்? காரணம் இல்லாமல் அவரையே நான் பார்த்தேன். அவரும் ஏன் விளக்கம் இல்லாமல் என்னையே பார்த்தார்? தன்னோடு அலுவல் பார்ப்பவள் தன் தெருவிலேயே இருக்கிறாள் என்ற எண்ணத்தில் அப்படிப் பார்த்தாரா?

இன்பத்தை என் இதயத்தில் பூசி விட்ட இந்த நிகழ்ச்சியைப் பற்றிய கேள்விக்கு எனக்கு விடையே கிடைக்கவில்லை. பார்வைக்கு இவ்வளவு சக்தி உண்டு என்று எனக்கு இதுவரையில் தெரியாது. அவருக்கும் தெரிந்திருக்க முடியாது என்றே நினைக்கிறேன்.

ரயிலில் போகும் போது வழியில் இருக்கும் தந்திக் கம்பங்களையும், தாவரங்களையும் தாண்டிச் செல்வது போல போக வேண்டிய நான் சற்று அமைதியாக நடந்தேன், அவர் நின்ற வீட்டு அருகே. அப்படியும் அந்த வீட்டைக் கடந்து விட்டேன். ஆனால் அவர் பார்வை என் முதுகின் வழியாகத் துளைத்துக் கொண்டுவந்து என் உள்ளத்தைக் கிள்ளுவது போல இருந்தது. மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன். அவரும் என்னையே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார். தாங்க முடியாத வெட்கத்தோடு மேலே நடந்து விட்டேன்.

அவர் நின்றிருந்த வீட்டுக்கும் ஐந்தாவது வீடுதான் என் வீடு. வாசலில் ஏறும் போதும் அவரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. எழுந்த அந்த ஆசைக்கு அணைப்புக் கொடுப்பது போல் அவரும் பார்த்துக்கொண்டே இருந்தார். இதற்கு முன் ஆண்கள் என்னை இப்படிப் பார்த்தால், நான் அவர்களை நாகரிகமற்றவர்கள், காட்டுமிராண்டிகள் என்று திட்டுவது வழக்கம். ஆனால் அவரை நான் திட்ட முடியவில்லை. அவர் உருவை என் உள்ளத்தில் ஓவியமாகத் தீட்டிக் கொள்ளத்தான் முடிந்தது!

ஏன் இப்படிப்பட்ட உணர்ச்சி வேறுபாடு எனக்கு?

சபேசன் கூறுகிறான் :

"ஏன் இப்படிப்பட்ட உணர்ச்சி வேறுபாடு எனக்கு?"—நான் அவளைப் பார்த்த—அவள் என்னைப் பார்த்த அன்றைய தினம் முழுவதும் இந்தக் கேள்வியை நானே கேட்டுக் கொண்டே இருந்தேன்.

எழுத்தாளர்கள் ஏதோ காதல், சாதல், மோதல் என்று எதுகை மோனைகளில் அடுக்கிக் காட்டும் அந்த மூன்றெழுத்துத் தத்துவந்தான் — காதல்

நக்ஷத்திரச் சாயல்!

முதல் ஸ்திரீ :—(மெதுவாக) அடியே, குழந்தையின் மூஞ்சியைப் பாரேன்! அசல் ஜிப்பி (குரங்கு) மாதிரியே இருக்கு!...

இரண்டாவது ஸ்திரீ :—அதனலென்னடி; பிற்காலத்திலே இவன் அம்மாவையும்விடப் பெரிய ஸ்டார் ஆகிவிடலாமே!...

தான்—என்னை இப்படிப்பட்ட உணர்ச்சி வேறுபாட்டுக்கு வித்திட்டது என்று தெரிந்து கொண்டேன். என் மூளையைக் குழப்பிக் கொண்ட பின் கடைசியாக அதைத்தான் உணர்ந்தேன்.

அவள் தன் பார்வையால் என் உள்ளத்தைக் கிள்ளி விட்டதால் வலி ஒன்றும் தோன்றவில்லை. அதனல் ஏற்பட்ட புண்ணும் ஆசைப் புண்ணகத்தான் இருந்தது. அவள் எப்படிப்பட்ட சாகசப் பெண்!

ஆம்; உண்மையில் அவள் சாகசப் பெண் தான். மறு நாள் ஆபீசிலும் அப்படியே பார்த்தாள். நானும் பாாத்தேன்.

அர்த்தமற்ற பார்வைகள். ஆனால் ஏதோ ஒரு பலனை நோக்கித்தான் அந்தப் பார்வைகள் மோதிக்கொண்டன.

முதல் நாள் பார்வை; மறு நாள் சிரிப்பு; மூன்றும் நாள் முணுமுணுப்பு; நான்காம் நாள் பேச்சு — இவ்வளவு சுறுசுறுப்பாக நாங்கள் ஒருவரை ஒருவர் நெருங்கி விட்டோம்.

பனிப் படலம் மூடிய என் உணர்ச்சிகள் அவள் பார்வை ஒளியால் பளிச்சிட்டன. காதல் என்ற புனித உணர்ச்சியை விளைத்துவிட்ட எங்கள் பார்வைகள் மலரின் தேனும் வண்டின் மயக்கமும் ஆகிவிட்டன. அவளும் நானும் சேர்ந்து தான் வீட்டுக்குப் போவது வருவது எல்லாம். சந்தேகம் இல்லாவிட்டாலும் அதை சிருஷ்டித்துக் கொண்டு என்னிடம் விளக்கம் கேட்டாள். விளக்கம் தெரிந்தாலும தெரியாவிட்டாலும் சிருஷ்டித்துக் கொண்டு அவளுக்கு விளக்குவேன்.எங்களை அறியாமல் நாங்களே நடித்தோம். நடிப்பு உண்மையாகி விட்டது.

அவள் பெயரில்தான் எத்தனை அழகு! வனஜா!—ஆகா, நான் ஒரு கவிஞனுகை இல்லாததன் குறையை இப்போதுதான் உணர்ந்தேன். அழகுணர்ச்சியை வார்த்தைகளில் வடித்தெடுக்கும் கவிதைகள் மூலம் அவள் எழிலைப் பாடிக்கொண்டே இருக்கலாம் என்றிருந்தது எனக்கு. ஆனால் நான் கவிஞன் அல்லவே. சாதாரண ஒரு டைப்பிஸ்ட் தானே!

அவளுக்கும் எனக்கும் இடையே இழையோடிய காதல் கிரிஜாவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. கிரிஜா வனஜாவோடு சேர்ந்து டைப் அடிப்பவள். ஆனால் வனஜா தன் இதயத்தை உணர்ச்சி மெஷினல் டைப் அடித்துக் காதல் காவியமாக்கிக் கொண்டு விட்டாள் என்று கிரிஜாவுக்குப் பொருமை. பாவம்! கிரிஜா மிகவும் நல்ல பெண். அவள் ஏன் எனக்காக வாடினுள்? நான் அவள் காதலனுகவில்லை என்ரு?

ஆம்; அவள் ஐந்தாறு ஆண்டுகளாகவே என்னுடன் இந்த ஆபீசில் வேலை செய்து வருகிருள். அவள் எப்போதும் சுறுசுறுப்பானவள் என்றும் மதிப்புப் பெற்றிருக்கிருள். ஆனல் இப்போது சோக உணர்ச்சியின் குழம்பால் தீட்டப்பட்ட ஓவியமாக இருக்கிருள். என்னை ஏக்கத்துடன் பார்க்கிருள். உன்னுல் தான் இப்படி ஆனேன் என்பது போலக் கண்களால் பேசுகிருள். என் உள்ளமும் நெகிழுகிறது.

பாவம், கிரிஜா என் ஒருவனுக்காகத் தன் உள்ளத்தைப் பாழாக்கிக்கொள்ள வேண்டுமா?

என்ன சங்கடம்!

கிரிஜா கூறுகிருள் :

மனித இனம் ஏன் உணர்ச்சியுடன் படைக்கப்பட்டது? அந்தக் கடவுள் உணர்ச்சியைப் படைத்த பின்னர் உள்ளத்திற்கு அமைதியையும் படைத்திருந்தால் நன்ருய் இருந்திருக்கும். ஆனல் உள்ளத்தை உணர்ச்சியின் இருப்பிடமாக்கி, எண்ணத்தால் வாட வைக்கிறது பாழுந் தெய்வம்!

எண்ணங்களே, உள்ளத்தின் உள்ளே வாழ்க்கை நடத்தும் ஊமைவாய் உணர்ச்சிகளே, ஏன் என்னைக் கிள்ளுகிறீர்கள்? ஆனல் உங்கள் கிள்ளலால் வாய்விட்டு அழக்கூட முடியவில்லையே; அழுதாலும் நான் யாருக்காக அழுகிறேனே, அவர் ஏன் என்று கேட்பதற்கில்லையே.

ஆம்; அவர் கேட்கமாட்டார். அவர் புலன்களில் ஒன்றிற்குக்கூட என்மீது கவனம் ஏற்படவில்லை. தற்செயலாக என்னைப் பார்த்தாலும் அனுதாபத்தோடு பார்க்கிருர். அந்த அனுதாபத்தில் அன்புதான்-சகோதரியிடம் காட்டும் அந்த உணர்ச்சிதான் — இருக்கிறது; காதலியிடம் காட்டும் குதூகல உணர்ச்சியை நான் காணமுடியவில்லை.

இரண்டு மூன்று நாட்களாக அவர் என்னை அதிகமாகப் பார்க்கிருர். ஆனல் அதே அனுதாபத்தோடுதான். இப்போது நான் என் உள்ளத்தைத் திறந்து காட்டினல் என்ன? கனவுச் சாம்பல் நிறைந்த சுடுகாடான என் உள்ளத்தைக் கண்டு, அதைத் தேன் மலர்கள் பூத்த பூங்காவாக மாற்ற மாட்டாரா அவர்?

எழுதினேன். என் இதயத்தில் அழுந்தப் பதிந்து, என்னை அழுத்திக் கொண்டிருந்த ஆசைகளையும், உணர்ச்சிகளையும் ஒரு தாளில் ஏற்றினேன். எப்படியோ அவரிடம் கொடுத்துவிட்டேன்.

என்ன நினைத்து வாங்கினுரோ,என்ன தான் பதில் சொல்லப் போகிருரோ!

ஏவி,எம். தயாரித்துவரும் "சோரி சோரி"
ஹிந்திப் படத்தில் நடிக்கும் நர்கிஸ்,
ராஜ்கபூர் முதலியோரை மேலே காணலாம்

ஏவி. எம்.மின் "பாய் பாய்" ஹிந்திப் படத்தில் தோன்றும் நிம்மி.

வனஜா கூறுகிறாள்:

காதல் என்பது உள்ளத்தில் ஊறிக் கொண்டிருக்கும் அமிர்தம் என்று கனவு கண்ட நான், இப்போதுதான் அதை ஓர் விஷம் என்று அறிந்து கொண்டேன்; ஒரு ஆண்மீது பல பெண்களால்—அல்லது ஒரு பெண்மீது பல ஆண்களால் ஏவப்படும் போட்டி உணர்ச்சி—காம உணர்ச்சி—என்று சந்தேகமில்லாமல் தெரிந்து கொண்டேன்.

சே, இந்த ஆண்களே மிகவும் மோசமானவர்கள். நிலையான மனமே இல்லாதவர்கள். பண்பாடு,பண்பாடு என்று வாயளவில்தான் பேசுவார்கள். அவரும் அப்படித்தான் செய்துவிட்டார்.

அவரை என் மனமாரக் காதலித்தேன். அவரும் என்னைக் காதலிப்பதாக நடித்திருக்கிறார். நான் ஏமாந்தேன். அவரது புன்னகையில் பூசியிருந்த மெருகை, பேச்சு விஷத்தில் தடவியிருந்த தேனை நம்பினேன்; நன்றாக ஏமாந்தேன். காதல் என்று வாயால்தான் பேசுகிறார். காமம் என்று செயலால் காட்டுகிறார். உண்மையுடன், அவரை நம்பிக் காதலித்த நான் இப்போது என் உள்ளத்தைச் சோக மயமாக்கிக் கொண்டேன்.

அவள்—எனது தோழி கிரிஜா—அன்று அவரிடம் ஒரு கவரைக் கொடுத்தபோது எனக்குச் சந்தேகம் தான் எழுந்தது. அவளையே அதிகமாகப் பார்த்துக் கொண்டுமிருந்தார். எனக்கு ஆத்திரமும், அழுகையும் அளவுகடந்து எழுந்தன. கண்ணுக்கு அழகான, கருத்துக்குக் குளிர்ச்சியான பெண்கள் எத்தனை பேர் இருந்தாலும் அவர்களை நாட வேண்டும என்ற அவருடைய கொள்கை எனக்கு இப்பொழுது நன்றாக விளங்கி விட்டது. அழுதேவிட்டேன்.

நான் உண்மைக் காதல் கிடைத்து விட்டது என்று வெற்றிச் சிந்து பாடினேன் அன்று; அந்த வெற்றிச் சிந்து புறமுதுகிட்டோடும் அலறலாக மாறி விட்டது. இன்று.

என் மனதை அறுத்துக்கொண்டிருந்த அந்த விஷயத்தைத் துணிந்தே மறுபடியும் கேட்டேன் —அவள் கொடுத்த கடிதம் என்ன கடிதம் என்றுதான்! ஆனால் அவர் மழுப்பினார். மானேஜர் கொடுத்த கடிதத்தை போஸ்ட் செய்யச் சொல்லிக் கொடுத்தாளாம். இவ்வளவு தூரம் என்னிடம் உண்மையை மறைத்தார் என்பதைத் திருட்டுத்தனமாக அவர் புத்தகத்திலிருந்து

அவள் கடிதத்தை எடுத்துப் படித்த பிறகுதான் நான் தெரிந்து கொண்டேன்.

அவள் அவரை மனமாரக் காதலிக்கிறாளாம். இதுவரை அவளையே பார்க்காத அவர், இப்போது அடிக்கடி பார்க்கிறாராம். என்னென்னமோ அவள் எழுதியிருந்தாள்—காதல் கோரிக்கை! இந்தக் கடிதத்தை அவர் மறைத்தது ஏன்?

என்னிடம் இவ்வளவு கபடமாக நடிக்கும் அவரிடமிருந்து நான் உண்மைக் காதலை எதிர்பார்க்க முடியுமா?—இப்படி ஏங்கினேன். பொறுத்துப் பார்ப்போம் என்று மனதைத் தட்டிக் கொடுத்துக் கொண்டேன்.

ஆனால், மறு நாள்........

அந்த நாளைக்குமேல் என்னால் பொறுத்துப் பார்க்கவும் முடியவில்லை; அதற்குத் தேவையும் இல்லாமல் போய்விட்டது.

ஆம்; அவர் அவளிடம் ஒரு கடிதத்தை யாரும் பார்க்கவில்லை என்று நினைத்துக் கொண்டு கொடுத்தார். ஆனால் அவரையே சதா நினைத்துக் கொண்டு, ஆராய வேண்டும் என்ற நோக்கத்துடன் மறைந்து நின் என்ற கண்களுக்குக் கூடவா அது தெரியாமல் போய்விடும்?

அன்று முழுவதும் என் மனம் சரியாக இல்லை. வழக்கம் போல அவர் தங்கியிருக்கும் வீட்டுக்குச் செல்லும் நான் அன்றும் போனேன். அவர் மீது சிறிது ஆத்திரமாகவே பேசினேன். என் உள்ளத்தில் கிடந்து குமுறிக் கொண்டிருந்த உணர்ச்சிகள் அனைத்தையும் கொட்டிவிட்டேன். முதலில் அவர் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தார். நான் பேசப் பேச அவருடைய அமைதி தவழும் முகம் சிவந்தது.

"உண்மைக் காதல் என்று ஏமாந்தேன். உங்கள் புன்னகையையும், பேச்சையும் நம்பினேன்; என் உள்ளத்தை அடகு வைத்தேன். அந்தக் கள்ளி கிரிஜா...."

"கள்ளி என்று அவளைச் சொல்லாதே. அப்படிச் சொல்ல உனக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று திடீரென்று எழுந்து கத்தினார்.

நான் திடுக்கிட்டுப்போய் விட்டேன். அவர் அப்படிச் செய்வார் என்று நான் கற்பனை செய்தது கூடக் கிடையாது. இப்போதுதான் எனக்குப் புரிந்தது அவர் உள்ளம். அவளுக்காகப் பரிந்து

ஏவி. எம். தயாரிப்பான "சோரி சோரி" ஹிந்திப் படத்தில் ராஜ்கபூர் இவ்விதம் காட்சியளிக்கிறார்.

இப்பொழுது தமிழ்நாடெங்கும் ஓடிக்கொண்டிருக்கும் "டவுன் பஸ்"ஸில் அஞ்சலி தேவியையும், முத்துலக்ஷ்மியையும் இப்படிப் பார்த்திருப்பீர்கள்.

கொண்டு பேசும் அவர் உண்மையில் அவளை விரும்பாமல் இருப்பாரா? என்னுடைய இந்த எண்ணம் தவறு என்று யார் சொல்லமுடியும்?

நான் ஒன்றும் பேசவில்லை. தேம்பித் தேம்பி அழவேண்டும்போல் இருந்தது—கண்களில் நீர் துளிர்த்தது. பேசாமல் வெளியில் சென்றுவிட்டேன.

துன்ப பாரம் நிரம்பிய உள்ளத்தோடு என்னால் நடக்க முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடி, ஆமைபோல ஊர்ந்தேன்.

"வனஜா"—கிரிஜா அழைப்பது கேட்டது. ஆத்திரத்தோடு அவளைத் திரும்பிப் பார்த்தேன். ஆனால் அவள் என்னைப் பொறுமையோடு, ஆனால் அனுதாபம் மின்னவிடப் பார்த்தாள். நான நின்றேன். என்னை நெருங்கி வந்தாள்.

"வனஜா, ஏன் என்னமோபோல இருக்கிறாய்?"

அவள் வேண்டுமென்று கேட்டாளோ, உண்மையாகக் கேட்டாளோ, எனக்குத் தெரியாது. அவளது கேள்விக்கு என்னால் பதில் அளிக்காமல் இருக்க முடியவில்லை.

"ஒன்றுமில்லை கிரிஜா" என்றுதான் சொல்ல முடிந்தது.

அவள் தொடர்ந்து பேசினாள். அப்படிப் பேசுவாள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. பொறுமையோடு என்னிடம் பேசும் அவள் அவவிதம் உள்ளத்தைத் திறந்து பேசியது எனக்கு ஆச்சரியமூட்டியது.

"வனஜா, நீ அதிர்ஷ்டக்காரி. ஆனால் அவசரக்காரி. நீ என் மீது தவறாக நினைத்தாய். உன்னுடைய புனிதமான காதலில் நான் குறுக்கிடுவதாக ஆத்திரமடைந்தாய். அது உண்மையோ இல்லையோ என் உணர்ச்சி என்னை அப்படிச் செய்தது. நான் அவருக்கு என் காதலை விளக்கினேன் ஒரு கடிதம மூலம். ஆனால் அவர்....இந்தா இதையே படித்துப் பார்", என்று தன் புத்தகத்தின் இடுக்கில் புதைந்து கிடந்த ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள் என்னிடம். குழப்பத்தோடு அவள்

முகத்தைப் பார்த்தவாறே வாங்கிப் படித்தேன்! அது அவர் எழுதிய கடிதந்தான்.

அன்புச் சோதரி கிரிஜா!

என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் வனஜாவின் இடம் உனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிருப். ஆனால் என் உள்ளம் பல இதழ்களுடைய ஒரு தேமலர். அதில் பல அன்பு மகரந்தப் பைகள் உள்ளன; ஆனால் ஒரே ஒரு காதல் சூல்பைதான் உண்டு. உன்மீது எனக்கு அன்பு உண்டு; ஆனால் காதல் கிடையாது. காதல் என்பது இரண்டே இரண்டு இசயங்களின் சுயநலக்கூட்டுறவு. அன்பு என்பது விரிந்த உலகத்தின் மீது ஊர்கின்ற ஒவ்வொரு உயிர்மீதும் தெளிக்கின்ற தேன். காதலுக்கு இலக்கு இரண்டே இரண்டு பேர்—ஆண், பெண். அன்புக்கு இலக்கு உலகில் உள்ள அனைவரும். சகோதரி, நீ மிகவும் நல்லவள்; அழகும் உள்ளவள்; அன்பு நிறைந்தவள்; அறிவு நிரம்பியவள். இவ்வளவு அன்பு, பண்பு, அழகு, அறிவு அனைத்துக்கும் உரிமையான உன்னை ஒரு மானசிகச் சகோதரியாகப் பெற்ற நான் அடைகின்ற பெருமைக்கு அளவில்லை.

நீ என்னை நேசி; நான் உன்னை நேசிக்கிறேன். ஆனால் நீ தங்கை; நான் அண்ணன். நம் இருவருக்கும் இடையே இழையோடுவது அன்பு.

இப்படிக்கு உன் சகோதரன்,
சபேசன்.

கடிதத்தைப் படித்து முடித்ததும், நான் கிரிஜாவை ஏறிட்டுப்பார்த்தேன். ஆனால் அவள் அங்கே இல்லை. திடுக்கிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தேன். அவர் வந்து கொண்டிருந்தார்.

அவர் என்னை நோக்கிச் சிரித்தபடியே வந்தார். நான் நாணத்தால் தலை குனிந்து உதட்டைக் கடித்துக்கொண்டபடி நின்றேன்.

அவரும் தலையை நிமிர்த்தினர்; நானும் நிமிர்த்திவிட்டேன்; பார்வைகளின் மோதல்! எங்கள் இருவர் பார்வையும் ஒன்றுபட்டு தூரத்தில் யாரையோ தேடின.

ஆடியசைந்து ஓர் உருவம் தலைவில் சென்று கொண்டிருந்தது—அது கிரிஜாவாகத்தான் இருக்கவேண்டும்.

டானிக் யாருக்குத் தேவை

- தேகாரோக்கியமிருந்து அதை நிரந்தரமாக அனுபவிக்கத் தீர்மானமுள்ளவர்கள்.
- துர்பலமான நிலையில் உள்ள, ஆரோக்கியத்திலும், வீரியத்திலும் திளைக்க விரும்புவோர்.

மனித தேகம் ஒரு யந்திரமே

நீராவி, உஷ்ணம், கிரீஸ் எப்படி ஒரு யந்திரத்திற்குத் தேவையோ அதுபோல் மனித உடலுக்கு வாத, பித்த, கப மூன்றும் தேவை.
இவைகளின் சரியான சேர்க்கையே உயிர்.

இவைகளின் தேவை ஏற்படுவதுதான் ஒழுங்கீனம்—வியாதி. அதைத் தொடர்ந்து வியாதிதான்.

அவைகளுக்கு நிவர்த்தி:

நவரத்ன கல்பம்

(ஒன்பது உயர்ந்த கற்களின் கலவை: வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம், பவழம், முத்து, கோமேதகம், வைடூரியம்.)

- சிதறிப்போன தேகாரோக்கியம்.
- இழந்துபோன வீரியத்தை மீண்டும் பெறுதல்.
- இழந்த வாலிபத் தன்மை.

இவைகளைப் பெறவும் சிறந்த டானிக்.

★

கவிராஜ் பண்டிட்
துர்கா டட் ஷர்மா
வைத்திய வாசஸ்பதி அவர்களால் கண்டுபிடிக்கப் பெற்றது.

★

இலவச பிரசுரத்திற்கு எழுதவும்:

Navratna Kalpa Pharmacy
JULLUNDUR CITY (India)
Grams: 'NAVRATNA'

நக்ஷத்திரங்களின் வருமான வரி

ஸ்ரீ தேஷ்முக்கிடம் வைஜயந்திமாலா கே. சுப்ரமண்யம் முறையீடு

இந்தியப் படங்களுக்கு ரஷ்யத் தலைவர்கள் பாராட்டு

வைஜயந்திமாலாவும் டைரெக்டர் கே. சுப்ரமண்யமும் சமீபத்தில் யூனியன் நிதி மந்திரி ஸ்ரீ. தேஷ்முக்கை சந்தித்து, வருமான வரி விஷயத்தில் நடிக, நடிகைகளின் கஷ்டங்களை எடுத்துக் கூறினர். நடிக, நடிகைகளால் அதிக காலம் சம்பாதிக்க முடிவதில்லை என்றும், பிரமாதமாய் சம்பாதிப்பவர்கள் கூட பிற்காலத்தில் திண்டாட வேண்டியிருக்கிறதென்றும், எனவே, வரி வசூல் விஷயத்தில் நடிக நடிகைகளையும் நூலாசிரியர்கள் இனத்தின் கீழ் வைத்துச் சலுகை காட்ட வேண்டியது அவசியமென்றும் வற்புறுத்தினர்.

பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் நடிக, நடிகைகளிடமிருந்து வருமான வரி எவ்விதம் வசூலிக்கப் படுகிறதென்ற தகவல்களைச் சேகரித்துத் தரும்படி ஸ்ரீ தேஷ்முக் டைரெக்டர் சுப்ரமண்யத்தைக் கேட்டுக் கொண்டார்.

நிதி மந்திரி கோரிய தகவல்களைச் சேகரித்துக்கொண்டு ஸ்ரீ சுப்ரமண்யம் நடிகர் ஸ்தாபனப் பிரதிநிதிகளுடன் மீண்டும் நிதி மந்திரியைச் சந்திப்பார்.

நிம்மி தேக அசௌக்கியம்

நிம்மிக்கு தேக சுகமில்லையாம். கொஞ்ச காலத்திற்கு பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்களாம்.

இந்தியப் படங்களுக்கு ரஷ்யத் தலைவர்கள் பாராட்டு

சோவியத் யூனியனில் திரையிடப்பட்ட சில இந்தியப் படங்களை ரஷ்ய மக்கள் பெரிதும் விரும்புவதாயும், படங்கள் மூலம் இரு நாடுகளுக்குமிடையே கலாச்சாரத் தொடர்பை பலப்படுத்திக் கொள்ள நல்ல வாய்ப்பு இருக்கிறது என்றும், சமீபத்தில் சோவியத் பிரதமர் புல்கானின் பம்பாய் நகரசபை வரவேற்புக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

இந்திய பிலிம் டிவிஷன் டாக்குமென்டரிகளின் உயர் தரத்தை குருஷ்சேவ் புகழ்ந்தார். "டார்ஜீலிங்", "மலைகளின் மாயஜாலம்", "நாளை நமதே", "ஐசுவர்ய விருக்ஷம்" என்ற நான்கு டாக்குமென்டரிப் படங்களை அவர்கள் பார்த்தனர்.

ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் தொழிலாளர் ஈடுபட்டிருப்பதைச் சித்தரிக்கும் "நாளை நமதே" என்ற படத்தை குருஷ்சேவ் சிறப்பாகக் குறிப்பிட்டார். தொழிலாளரை உற்சாகப்படுத்த ரஷ்யா சினிமாவை ஒரு சாதனமாகப் பயன்படுத்தி வருவதாகவும் அதே மாதிரி 2-வது திட்ட வெற்றிக்கும் சினிமா பெரிதும் உதவ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஹிட்ச்காக்குக்கு இட்லி, தோசை

பிரபல ஹாலிவுட் டைரெக்டர் ஆல்பிரட் ஹிட்ச்காக் தம்பதிகளுக்கு டி. சூர்யகுமாரி சமீபத்தில் பம்பாயில் ஒரு விருந்து நடத்தினர். அவர்களுக்குத் தமிழ் நாட்டு இட்லி, தோசைகள் பரிமாறப்பட்டன. டைரெக்டர் ஹிட்ச்காக் ஏதோ பத்தியத்தில் இருந்தபடியால் அவர் சாப்பிடவில்லை. ஆனல் அவருடைய பங்கையும் சேர்த்து ஸ்ரீமதி ஹிட்ச்காக் ருசித்துச் சாப்பிட்டார். முதல் தடவையாக அவர் வெற்றிலையும் போட்டுக் கொண்டு, "வெகு குஷியாக இருக்கிறது" என்றாராம்.

மூளுஸின் திட்டம்

"உலகம்" படத்தைத் தயாரித்து ஒரு புரட்சியை உண்டுபண்ணிய படாதிபதி மூளுஸ் பெரிய திட்டங்கள் போட்டிருக்கிறார். ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவை அவர் வாங்கியிருக்கிறார். அவர் தற்போது மேற்படி ஸ்டுடியோவை ராயல் ஸ்டுடியோ என்ற பெயரில் புதுப்பித்துள்ளார். அவர் அந்த ஸ்டுடி

யோவை ஒரு முதல் தரமான ஸ்டுடியோவாக மாற்றி தமிழ், தெலுங்கு, மலேயாளம், கன்னடம், சிங்களம் ஆகிய பாஷைகளில் படங்களைத் தயாரிக்க திட்டம் போட்டிருக்கிறார்.

எம். ஏ. வி.யின் முயற்சி

கோவை எம். ஏ. வி. பிக்சர்ஸார் சேலம் ரத்னா ஸ்டுடியோவை விலைக்கு வாங்கியிருக்கின்றனர். அவர்கள் உடனடியாக "ராமாயண"த்தின் படப்பிடிப்பை அங்கு தொடங்குவார்கள். "ராமாயண"த்தில் சிவாஜி கணேசன், என். டி. ராமராவ், டி. கே. பகவதி, நரஸிம்ம பாரதி, நாகய்யா, அஞ்சலிதேவி, எம. என். ராஜம், ஜி. வரலக்ஷ்மி ஈ. வி. சரோஜா ஆகியோரெல்லாம் நடிக்கக் கூடுமென்று தெரிகிறது. எம். ஏ. வி. பிக்சர்ஸார் பிரம்மாண்டமான முறையில் தயாரிக்கப்போகும் முதல் படம் இது.

ஏவி. எம். மின் தயாரிப்பான "சோரி சோரி" ஹிந்திப் படத்தில் பிரபல வட இந்திய நக்ஷத்திரமான நர்கீஸ் நடித்திருக்கிறார்.

"புது வாழ்வு" நாடகம்

புரசை வளர்கலை நாடக மன்றத்தினர் சென்ற மாதம் 26-ம் தேதி எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் "புது வாழ்வு" என்ற நாடகத்தை நடித்தனர். எம். ஏ. ஆர். ஷெரீப் என்பவர் எழுதிய நாடகம் இது. மேடையைப் பற்றிய அனுபவக் குறைவால் ஆசிரியர் காட்சிகளுக்கு இடையே அதிக நேரம் எடுத்துக் கொண்டு சபையோரின் பொறுமையைச் சோதித்து விட்டார். பல கதைகளின் கலப்போ என்று கூடத் தோன்றியது. வசனங்களும் அவ்வாறே. கதாநாயகனை நரசு ஸ்டுடியோஸ் ப்ரொடக்ஷன் மானேஜர் பாலாஜி தோன்றி திறம்பட நடித்தார். பைத்தியக்காரக் கட்டத்தில் இவர் நடிப்பு நன்கு சோபித்தது. லூஸ் சாமியாகத் தோன்றிய பாலு, தந்தை வேஷத்தில் வந்த சௌந்தரராஜன் இவர்கள் தவிர ஏனையோர் எவரும் குறிப்பிடத்தக்க முறையில் நடிக்கவில்லை. அனாவசியமான காட்சிகளும், நடனங்களும் இருந்தன. நடிகைகள் எல்லோரும் சுமாராக நடித்தனர். எஸ். வி. வஸந்தா, ஏ. எல். சகுந்தலா, சரோஜா ஆகியோர் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். ஜெமினி கணேசன் தலைமை வகித்த இந்த நாடகத்திற்கு, நரசு ஐயர் உட்பட பல பட உலகப் பிரபல பட முதலாளிகளும், நடிகர்களும் வந்திருந்தனர். மொத்தத்தில் "புது வாழ்வு" ஒரு சுமாரான நாடகம்.

"சீதா கல்யாணம்" நாடகம் நடந்து கொண்டிருந்தது. பாத்திரங்கள் ஏற்ற சிறுவர்—சிறுமியர் அற்புதமாக நடித்துக் கொண்டிருந்தனர். பள்ளிக்கூட வருஷ விழாவிலே அந்தப் பள்ளியின் பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர் — சிறுமியர் பங்கெடுத்துக் கொண்டு நடிக்கும் நாடகம் அது.

காட்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக மளமளவென்று நடந்துகொண்டிருந்தன. நாடகத்தின் முக்கியமான காட்சி வந்தது. தனுசை (வில்) முறிக்கும் காட்சிதான் அது.

ஜனகன் தர்பார். பல தேச ராஜகுமாரர்களும் உட்கார்ந்திருக்கின்றனர். ராவணன் வேடம் தரித்த சிறுவன் எழுந்து "இது ஒரு பிரமாதமா?" என்பது போல டம்பமாக நடந்து வந்தான். கலர்க் காகிதம் ஒட்டப்பட்டு, காஸ் லைட் வெளிச்சத்தில் மின்னிக் கொண்டு கீழே கிடந்தது வில். ராவணன் அதைத் தூக்க முயன்று முடியாததுபோல் நடித்துவிட்டு முக வாட்டத்துடன் ஒருபக்கமாகப் போட்டிருந்த ஆசனம் ஒன்றில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அடுத்து வந்தான் சுந்தர முகச் சிறுவன் ஒருவன்; ஆம்; ராமன் வேடம் தரித்த சிறுவன்தான். கம்பீரமாக நடந்து வந்தான். வில்லை எடுத்து சுலபமாக ஒடித்தான். முகத்தில் புன்னகை தவழ ராமன் வேடம் தரித்த சிறுவனும்

அன்றொரு நாள்...

ஆசனம் ஒன்றில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அடுத்தது வெற்றிபெற்ற ராகவனுக்கு சீதை மாலை சூட்ட வேண்டிய நிகழ்ச்சி. அதுவரை வெட்கப் படாமல் தைரியமாக நடித்து வந்தாள் சீதையாக வேடம் அணிந்த சிறுமி. மாலை போட வேண்டும் என்ற கட்டம் வந்ததும் எங்கிருந்தோ சிறுமிக்கு வெட்கம் வந்து விட்டது.

குனிந்த தலையை நிமிராமல், பூமியையே பார்த்தபடி கையில் மாலையுடன் சபைக்கு வந்தாள் சீதை. தனது தைரியம் அனைத்தையும் வரவழைத்துக் கொண்டு, மட மட வென்று ராமன் வேடதாரி உட்கார்ந்திருந்த பக்கம் போனுள். மாலையைச் சட்டென்று கழுத்தில் போட்டுவிட்டாள். அடுத்த விநாடி கொட்டகையே அதிரும்படி, தர்பாரிலிருந்தும் சபையிலிருந்தும் கேலிச் சிரிப்பும் கரகோஷமும் எழுந்து எதிரொலித்தன.

விஷயம் இதுதான். சீதை ராமனுக்கு மாலை போட வேண்டியவள்; தவறுதலாக தனக்கு ஏற்பட்ட பதட்டத்தில் ராமன் வேடதாரிக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ராவணன் கழுத்தில் மாலையைப் போட்டுவிட்டாள்.

தனது சிறு வயதிலேயே அப்படி அனைவரையும சிரிக்கவைத்த சிறுமிதான் பிற்காலத்தில் ரஸிகர்களை நகைக்கவைக்கும் ஹாஸ்ய நடிகையாக மாறியிருக்கும் நடிகை எஸ். ஆர். லக்ஷ்மி.

"எனக்கு பிரியமான நறுமணம்"

என்கிறார் சாவித்திரி

"லக்ஸ் டாய்லட் சோப்பின் புதிய வாசனை உண்மையாகவே விரும்பப்படுகிறது. அதன் நறுமணம் அதிக நேரம் தேகத்தில் கமழும்"

சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப்பின் சிறந்ததாக நறுமணமாக்கப் பட்டுள்ள நுரை உலகத்தில் மிக்கப் பிரபலமான அழகுடைய பெண்மணிகள் சருமத்தை புத்தம் புதிதாகவும், மிருதுவாகவும், வனப்புடனும் வைத்திருக்கிறது.

உங்கள் தினசரி எழிலளிக்கும் ஸ்னானத்திற்கு பெரிய சைஸ் சோப்பை உபயோகித்து மகிழுங்கள்

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 461-50 TM

வானவில்

[20-ம் பக்கத் தொடர்ச்சி]

அடுத்தபடத்திலேயே பிரதான பாத்திரம் தாங்கும் வாய்ப்பை உண்டுபண்ணிக் கொண்டு விடலாமே' என்று துடிக்கும் நடிகர் எத்தனையோ பேர். இவர்களை யெல்லாம் தாண்டி இன்னொரு சாரார் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பது நம் வரையிலே பொய்த்து விட்டதே! கம்பெனிக்காரர்கள் மரியாதையாக நடத்தவில்லையே!' என்று ஆயாசமுறும் பிரகிருதிகள் பலர்.

இந்த நிலைகளுக்கும் மனோஹரனுக்கும் சம்பந்தமே இல்லை. அவன் கதாசிரியன்; வசன கர்த்தா; சாகித்திய கர்த்தா; நடிகன் — பிரதான பாகமேற்று நடிக்கும் நடிகன். இவ்வளவு தானா? இல்லை உதவி டைரெக்டரும் கூடத்தான். ஸ்டுடியோவில் அவன் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசுவார் யாருமில்லை. அது மட்டுமா? அழகு, அறிவு, அந்தஸ்து முதலிய சகல அம்சங்களிலும் மிக மிக உயர்ந்த பூலோக அப்ஸரஸ் சுமதி அவனை, மலரைச் சுற்றி வட்டமிடுகிற வண்டைப் போலச் சுற்றி அலைந்து கொண்டிருக்கிறாள். தன்னோடு ஒரு வார்த்தை பேசமாட்டாளா என்று எத்தனையோ ஆண்களும் பெண்களும் அவளைப் பற்றி நினைத்து ஏங்க, அவளோ, தன்னோடு இன்பமாய், மனங் கலந்து ஒரு வார்த்தை பேசமாட்டானா என்று மனோஹரனைப்பற்றி எண்ணி ஏங்கித் தவித்தாள். அவள் தகப்பனாரோ 'மனோஹரன் உண்டானால் உலகத்தில் எதுவும் உண்டு; இல்லையானால் உலகத்தில் ஒன்றுமே இல்லை' என்ற நிலையிலே இருந்தார்.

இத்தகைய மகோன்னத நிலைகள் யாவும் ஒருபுறம் இருக்க, அவனுடைய சிறந்த லட்சியமாகிய கிராம முன்னேற்றம் 'வெற்றிச் சின்னம்' என்ற மகுடத்தோடு பல முறை மேடையில் பிரகாசித்து இன்று திரைப்படம் ஆகிறது. படம் வெளியானால் அதன் சிறப்பு அம்சங்களுக்காக அவனுக்குக் கிட்டும் புகழ் மாலைகள் ஒருபுறமிருக்க, அவன் லட்சியம் எத்தனை சுலபமாக வெற்றியை அடையும்? நேரிலே கிராமம் கிராமமாய்ச் சென்று பல நாட்கள் மெனக்கட்டுச் செய்யவேண்டிய அலுவல்கள் திரைப்படத்தின் மூலம் எவ்வளவு சுலபமாக முடிவடைகின்றன? அந்த ஒன்றை நினைத்தாலே மனோஹரன் மட்டற்ற மகிழ்ச்சியால் பூரித்துப் போக வேண்டுமே? அதற்கு மாறாக அவன் விடுதலையை வேண்டுவது ஏன்?

இரண்டு காரணங்கள்; இரண்டும் அவனுடைய இரண்டு சிறந்த லட்சியங்களைப் பாதிப்பவையாக இருந்தன. முதலாவது சுமதி; அவளால் அவனது கடமை ஊசலாடிக் கொண்டிருந்தது. இரண்டாவது கிராம முன்னேற்றம். என்னதான் திரைப்படத்தின் மூலமாக அந்தச் சேவையைப் புரியலாம் என்றாலும் நேரில் சென்று கிராம மக்களைக் கண்டு அளவளாவி, திட்டங்களைப் புகுத்தி, உடலால் உழைத்துச் செயலாற்றுவது போல் ஆகுமா? தவிர சினிமாவில் அப்பட்டமான கிராம முன்னேற்ற அம்சங்கள் மட்டுமே இடம் பெறவில்லை. நாடகத்தை விடப் பல மாறுதல்கள். பொது ஜனங்கள் சலிப்பின்றி இருந்து பார்க்க வேண்டுமே! காதல், ஹாஸ்யம் முதலிய பகுதிகள் சேர்க்கப்பெற்றன. அதனால் கிராம முன்னேற்றம் என்ற பகுதி இலைமறைக்காயின் ஸ்தானத்தை எட்டிவிட்டது. விடுதலை கிடைத்து விட்டால் ஓட்டமாக ஓடிச்சென்று கிராமம் கிராமமாகப் போய் பணியாற்றலாம்; கல்யாணியை மணந்துகொண்டு.........

மனோஹரன் விடுதலை கோரியதில் தவறில்லை என்ற அபிப்பிராயம் இப்போது நமக்கு ஏற்படுகிறது.

வராந்தாவில், 'ஸார்!' என்ற குரல் கேட்டது. மனோஹரன் எழுந்து சென்றான்.

17. சலனம்

'' ஸார், இதையெல்லாம் உங்க கிட்டே மானேஜர் கொடுக்கச் சொன்னாரு '' என்றபடி நாலைந்து உறைகளை மனோஹரனிடம் கொடுத்தான் அந்தப் பையன். அவன் ஸ்டுடியோவிலிருந்து வந்தவன். இரண்டு மூன்று நாட்களாய்ப் பிடிக்கப்பட்ட படப் பகுதியின் 'ஸ்டில்'களை மனோஹரனின் பார்வைக்காக மானேஜர் அனுப்பியிருந்தார்.

அவற்றை வாங்கிக் கொண்டு அந்தப் பையனை அனுப்பிவிட்டு உள்ளே வந்த மனோஹரன், வேலைக்காரச் சிறுவன் கொண்டு வந்து வைத்திருந்த காப்பியைப் பருகிவிட்டு ஸ்டுடியோச் சிறுவன் கொடுத்துச் சென்ற உறைகளை

பிரித்து அவற்றில் இருந்த படங்களைப் பார்வையிடலானான்.

விதவிதமான எத்தனையோ படங்கள், வரிசையாக, ஒவ்வொன்றாய் பார்த்துக்கொண்டே வந்தவன் ஒரு படத்தைக் கண்டு பார்வையை நிலைத்தான்.

மனித உள்ளத்தின் போக்கே அதி விசித்திரமானது. உண்மையைக் காட்டிலும் போலியிலே அது அதிகமாக மயங்கிவிடும். ஒருவரிடம் நேரில் நெடு நாள் பழகி அவருடைய குணநலன்களை நன்கு அறிந்திருந்தாலும் அவரைப் பற்றிப் பிறர் பேசுவதைக் கேட்பதில் அளவற்ற ஆர்வம் காண்பிப்பது மனித இயற்கை. சிறந்த ரத்தினத்தைக் காட்டிலும் போலி வைரத்தைக் கண்டு புளகிப்பது மனித உள்ளம். அழகுள்ள மனிதரையோ, வனப்பு மிக்க இயற்கைக் காட்சிகளையோ நேரிலே காணும்போது ரசிக்கத் தெரியாமல் படத்தில் கண்டு பரவசமுறும் உள்ளங்கள் பல. நேரில் ரசிக்கும் ஆற்றல் உள்ளவர்களும் படத்திலே அதிகமாக ரசிப்பதும் உண்டு. திறமை மிக்க கலைஞன் விஷயம் அப்படி அல்ல; அவனுடைய ரசிகத் தன்மையே அலாதி. அவன் உள்ளம் போலியிலே அவ்வளவாக ஈடுபடாது. மனோஹரன் ஒரு கலைஞனேயானாலும் நடுத்தரத்தில் சேர்க்கத் தக்கவன் தான்.

அந்தப் படத்தில் மனோஹரனும் சுமதியும் காட்சி அளித்தனர். ஆற்றிலே தவறி விழுந்துவிட்ட கன்னிகையைத் தொண்டர் தலைவன் கரையேற்றும் கட்டம். அவன் அவளைத் தூக்கிக் கொண்டிருக்கிறான்; அவள் பாதி வழியில் கண் விழித்து அவனைப் பார்க்கிறாள். மிக மிகச் சமீபத்தில் கண்களின் சந்திப்பு!

தளதளவென்ற செழிப்பான அவள் மேனி தண்ணீரில் விழுந்ததால் நனைந்த ஆடைக்குள்ளிருந்து தென்பட்ட நிலை எவர் மனத்தையுமே கிறுகிறுக்கச் செய்யக் கூடியதாகத்தான் இருந்தது.

'கட்டமைந்த உடல்! சரியான பருவம்! நல்ல அழகி'...' என்று அவன் உள்ளம் முணுமுணுத்தது.

ஆற்றை அடுத்துள்ள தோப்பை அடைந்ததும் அவன் அவளைக் கீழே விடுகிறான். அவள் ஒயிலாக நிற்கிறாள். மொட்டு வெடித்து மலர்வதுபோல் முறுவலிக்கிறாள்.—இது அடுத்த படம்.

முன்னதைவிடப் பின்னதில் மனோஹரனின் பார்வை அதிகம் ஊடுருவி நிலைத்து நின்றது.

'சுமதி நல்ல அழகிதான்' என்று மறுபடி முணுமுணுத்தது அவன் உள்ளம்.

படத்தைக் கையில் எடுத்தான். பல கோணங்களில் பார்த்தான். "ஆம். சுமதி நல்ல அழகிதான்" என்று வாய்விட்டுக் கூறினான். மாசக் கணக்காக நேரில் பார்த்து நெருங்கிப் பழகி வரும் சுமதியின் அழகை அவன் இப்போது படத்திலே அவள் உருவத்தை ஊன்றிப் பார்ப்பதன் மூலம் உணர்ந்தான். அவயவங்களின் அமைப்பு, அவற்றின் எடுப்பான தோற்றம் இப்போதுதான் அவன் கண்களையும் கருத்தையும் கவர்ந்தன.

"சுமதி அழகி மட்டுமல்ல; ஆற்றல் மிக்கவளுங்கூட. 'வெற்றிச் சின்னம்' பிரமாதமான வெற்றியைப் பெறப்போவது அவளுடைய தோற்றம், பாட்டு, பேச்சு, நடிப்பு ஆகியவற்றால் அன்றோ ?......குணம்........அவளுடைய குணத்திற்குத்தான் என்ன ?....உள்ளம்....அது அன்பு மயமானது. என் பேரில் உயிரை அல்லவா வைத்திருக்கிறாள்! என் காதலைப் பெறுவதற்காக அவள் படுகிற பாடு கொஞ்சமா?...."

தன்னை மறந்து வாய் விட்டு அவன் பேசிக் கொண்டிருந்தது அவ்வளவையும் பூனை போல் பின்னால் வந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த சுமதி அதற்கு மேல் பொறுதவளாய் இரண்டே எட்டில் அவனைச் சமீபித்துப் பின் புறத்தால் அவன் கண்களைப் பொத்தினாள்.

தன்னிடம் அம்மாதிரி அங்கே விளையாடக் கூடியவர் சுமதி தவிர வேறு யாரும் இல்லை என்பதை மனோஹரன் அறியானா? கண்களைப் பொத்தும்போது கல கலத்த அவள் கை வளையல்களும், அவளது அண்மையால் குப்பென்று வீசிய மலர் மணமும் ஸென்டின் நறுமணமும் அவள் சுமதிதான் என்பதை அவனுக்கு அறிவிக்காவா? இருந்தும் அவன் தன்னைச் சட்டென்று விடுவித்துக் கொள்ள வில்லை. அப்போதைய அவன் மன நிலைக்கு அவளது அந்த லீலை உவந்ததாகவே இருந்தது. அதனால் ஒன்றும் பேசாமல் மெல்லத் தன் இரு கைகளாலும் அவள் இரு கரங்களையும் தொட்டான்; வளையல்களை அசைத்தான்; மழமழ வென்றிருந்த

அக் கரங்களை வருடினான். எதிரே இருந்த கண்ணாடியில் இருவரின் பிம்பங்களும் தெரிந்தன. சுமதி அதைப் பார்த்து ரசித்தாள். மனோஹரன் முறுவலிப்பதும் கண்ணாடியில் தெரிந்தது.

"போதுமே...விட்டு விடு."

"யார் என்று சொன்னால்தான்....."

"மாலதி... இல்லை....சும—"

சட்டென்று கைகளை எடுத்துக் கொண்டு பின்னடைந்தாள் சுமதி. சிரித்தபடி அவளை நோக்கினான் மனோஹரன். அவள் முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"என்னைத் தொடாதீர்கள்!" என்று சீறியபடி கைகளை உதறினாள் அவள்.

"நாளை ஷூட்டிங்கின்போது....?"

"அது வேறு விஷயம்..... நீங்கள்...... நான் வருகிறேன்...." சடக்கென்று திரும்பி நடந்தாள் அவள். மனோஹரன் வழிமறித்தான், சிரித்துக்கொண்டே.

"நீங்கள் திருடர்!"

ஓகோ என்று அவுட்டுச் சிரிப்புச் சிரித்தான் மனோஹரன். "எல்லாரும் திருடனைத் திருடன் என்றும் கள்ளன் என்றும் தான சொல்வார்கள். நீயோ திருடனுக்குக் கூட மரியாதை கொடுத்துத் 'திருடர்' என்கிறாய். நீ மிகவும் பெருந்தன்மை உடையவள் மால...சும—"

"யார் அந்த மாலதி?"—நறநற வென்று பல்லைக் கடித்தாள் சுமதி.

"உட்கார் சுமதி. படபடக்காதே."

"முடியாது. யார் அந்த மாலதி?"

"ஏன்? எதற்காக கேட்கிறாய்?"

"சரி, சொல்ல வேண்டாம். வழியை விடுங்கள். நான் போக வேண்டும்."

"உட்கார்; சொல்கிறேன்."

சுமதி பொத்தென்று கட்டிலில் உட்கார்ந்தாள். முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"உனக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன், சுமதி. கேட்பாயா?"

"என்ன அது?"

"கோபம், சந்தோஷம் முதலிய உணர்ச்சிகளை அளவு கடந்து வெளிப்படுத்தினால் அவற்றின் மதிப்புக் குறைந்து விடும்."

"தாங்க்ஸ்."

"எதற்கு இந்த தாங்க்ஸ்?"

"புத்திமதி சொன்னதற்காக."

"சொல்ல வேண்டியவை இன்னும் எவ்வளவோ இருக்கின்றனவே."

"கேட்டுக் கொண்டிருக்கத்தான் எனக்குப் பொறுமையில்லை. நான் வருகிறேன்."

"பொறு! மாலதி யார் என்று கேட்டாயே, தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"சொல்வதானால் சீக்கிரம் சொல்லுங்கள். நான் போகவேண்டும்."

"என்னைப் பிரிந்து செல்வதிலேயே நோக்கமாக இருக்கிறாயே; வாழ்க்கை முழுவதும் நாம் சேர்ந்து......."

"பகற் கனவு!"

"நேற்று வரையில்....?"

"ஏன், சற்று முன்பு வரையிலுங் கூடத்தான்."

"இப்போது? பகற்கனவாகிவிட்டதாக்கும்! ஐயோ பைத்தியமே!"

"பேசி மழுப்பாதீர்கள். உங்கள் சாகஸத்தில் இனியும் மயங்கமாட்டேன்."

"உம். சரி....சொல்லட்டுமா?"

"உங்கள் இஷ்டம்."

"என்னுடைய அடுத்த திரைக் கதை என்ன தெரியுமா? 'மாலதியின் சுயம்வரம்.' ஒரே காதற் காட்சிகள். நீயும் நானுந்தான் அதில் நடிக்கப் போகிறோம். அதில் உன் பெயர்தான் மாலதி. புரிந்ததா?"

"இந்தக் கற்பனையை ஜோடித்துக் கூற இத்தனை அவகாசம் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்ததாக்கும்!"

"சரியாய்ப் போயிற்று! குடலைக் கிழித்துக்காண்பித்தாலும் மை வித்தை என்பவர்களிடம் என்னத்தைப் பேசுவது? நம்பினால் நம்பு; விட்டால் விடு."—இவ்வாறு கூறிவிட்டு மனோஹரன் நாற்காலியில் போய் அமர்ந்தான்.

அவனுடைய அசட்டையான போக்கும் கம்பீரமான மொழிகளும் அவள் உள்ளத்தை நெகிழ வைத்தன. மெல்ல எழுந்து சென்று, அவன் அருகே நின்று கண் கொட்டாமல் அவனையே பார்த்தாள். சிறிது நேரமாகியும் அவன் தலை நிமிராமல் போகவே, மெதுவாக அவன் மோவாயைப் பற்றி முகத்தை நிமிர்த்தினாள். அவளது கண்களின் கடைகளில் துளிர்த்து நின்ற நீர் முத்துக்கள் அவன் நெஞ்சை உருகச் செய்தன. எழுந்து கைக்குட்டையால் அவள் கண்களைத் துடைத்தான். அவள் அவன் இடுப்பை அணைந்தவாறு மார்பின் மீது சாய்ந்தாள்.

(தொடரும்)

வாழ்க்கை வர்ணனை

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படத்தைத் தயாரிப்பதற்காக உதய சங்கர் சென்னைக்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்த சமயத்தில் லக்ஷ்மிகாந்தாவின் விண்ணப்பம் அவர் கைக்குக் கிடைத்தது. ஆகவே, 'தாம் சென்னைக்கு வரும் போது சென்னையிலேயே தம்மைச் சந்திக்கும்படி' அவர் காந்தாவுக்கு பதில் எழுதினர்.

"கல்பனா" ஒரு புரட்சிகரமான படம் ஆகும். முதன் முதலாக ஒரு வட இந்தியப் பட முதலாளி தென்னிந்தியாவுக்கு வந்து த் தயாரித்த படம் அது. உதய சங்கர் தம் லக்ஷியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தம் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இப் படம் மேனுடுகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்றது. இவை யெல்லாவற்றையும் விட தற்போது பிரபல நக்ஷத்திரங்களாக விளங்கும் லலிதா, பத்மினி, பி.கே. சரஸ்வதி, ஜி. சகுந்தலா, லக்ஷ்மிகாந்தா ஆகியோரை திரையுலகிற்கு அறிமுகப்படுத்தி வைத்த படம் இதுவே என்பது குறிப்பிடத் தக்கது. மேற்குறிப்பிட்ட எல்லோரும் "கல்பனா"வில் நடனம் ஆடியிருக்கின்றனர்.

உதயசங்கர் சென்னைக்கு வந்ததும், லக்ஷ்மிகாந்தாவும் சென்னைக்கு வந்து அவரைச் சந்தித்தார். "கல்பனா"வில் உதயசங்கரின் மனைவியான சிம்கியின் பாகத்தை நடிப்பதற்கு காந்தா தேர்ந்தெடுக்கப் பட்டார். மற்றவர்களைவிட காந்தாவுக்கே அதிக வேலை இருந்தது.

படம் முடிந்ததும் உதயசங்கர் காந்தாவை அழைத்து, அவரது நடிப்பு மிகத் திருப்திகரமாய் அமைந் திருப்பதாசப் பாராட்டினர். அதோடு நில்லாமல், தாம் உலக விஜயம் செய்யப் போவதாகவும், காந்தாவும் தம்முடன் வரவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். லக்ஷ்மிகாந்தா சந்தோஷம் தாங்காமல் 'அந்த நாள் என்று வருமோ' என்று ஆவலால் துடித்துக் கொண்டிருந்தார். ஆனல், இடையில் ஒரு முட்டுக்கட்டை ஏற்பட்டு, காந்தாவின் உலக விஜயம் கனவாகவே முடிந்து விட்டது.

"கல்பனா" படம் முடிந்ததும் அதில் பங்கெடுத்துக் கொண்ட நடன மணிகளை யெல்லாம் நம் தமிழ்ப் பட முதலாளிகள் ஒப்பந்தம் செய்து கொள்ள முனைந்தனர். லக்ஷ்மிகாந்தாவை ஜூபிடர் பிக்சர்ஸார் இரண்டு வருஷங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ள முன் வந்தனர். இதை அறிந்ததும் காந்தாவின் வளர்ப்புக் கிழவி அவருக்கு முட்டுக்கட்டையாக மாறி விட்டாள். "உள்ளூரில் கிடைக்கும் சந்தர்ப்பத்தை உதறி விட்டு, இவள் என்னவோ உலகம் சுற்றப் போகிருளாம்" என்று கிழவி கொந்தளித்தாள். கடைசியில் அவள் கட்சி தான் ஜெயித்தது; காந்தா ஜூபிடரில் ஒப்பந்தமானர்.

படங்களில் வெறுமனே நடனம் ஆடிக் கொண்டிருப்பதற்குப் பதில் எப்படியாவது நடிப்பின் மூலம் நக்ஷத்திரம் ஆகிவிட வேண்டும் என்பதே காந்தாவின் ஆசையாகும். ஜூபிடரின் ஒப்பந்தம் இதைப் பூர்த்தி செய்து வைக்கும் என்று அவர் எதிர்பார்த்தது வீணயிற்று. ஜூபிடர் பிக்சர்ஸார் அவரைத் தம் படங்களில் நடனத்திற்கு மட்டுமே பயன்படுத்தி வந்தனர். "யோகினி" "விஜயகுமாரி", "அபிமன்யு", "வேலைக்காரி" ஆகிய படங்களில் கோஷ்டி நடனங்களில் காந்தாவுக்குப் பங்கு கிடைத்தது. கடைசியில் ஜூபிடர் பிக்சர்ஸார் அவருக்கு "கிருஷ்ண விஜயம்" படத்தில் ஒரு பாத்திரத்தை அளித்து நடிக்கச் செய்தனர். மாய பூதகியாக நடித்திருப்பவர் இவர்தான்!

ஜூபிடரின் ஒப்பந்தம் முடிந்ததும் லக்ஷ்மிகாந்தா வெளிப் படங்களில் நடிக்க முயன்ருர். பிரபல டைரெக்டர் பிரசாத் தயாரித்து வெளியிட்ட "மனதேசம்" படத்தில்—முதன் முறையாய் ஒரு தெலுங்குப் படத்தில்—அவர் ஹாஸ்ய பாகம் ஏற்று நடித்தார். அவரது பாகம் நன்கு அமையவே அவர்

''மாப்பிள்ளை'' தமிழ்ப் படத்தில் டி. கே. ராமச்சந்திரனும், லக்ஷ்மிகாந்தாவும்.

ஆந்திர சினிமா ரஸிகர்களுக்கு நன்கு அறிமுகமானார்.

பிறகு காந்தா சோபனாசலாவின் "பல்லட்டூரு பில்லா'' தெலுங்குப் படத்தில் நடித்தார். இந்தப் படத்திலும் அவரது நடிப்பு நன்கு பாராட்டப்பட்டது.

பின்னர் அவர் ''மாயலமாரி'' தெலுங்குப் படத்திலும், ''மாயக்காரி'' தமிழ்ப் படத்திலும் நடிக்கவும், நடனம் ஆடவும் செய்தார்.

அடுத்தபடியாக, காந்தா பிரபல டைரெக்டர் பட முதலாளி எச். எம். ரெட்டியின் பார்வைக்கு வந்தார். அவரிடம் நல்ல திறமைகள் மறைந்து கிடப்பதை உணர்ந்த ஸ்ரீ. ரெட்டி தம் ''நிரபராதி'' படத்தில் காந்தாவுக்கு 'காந்தா' என்ற பாத்திரத்தையே கொடுத்து நடிக்கச் செய்தார். காந்தா அவ் வேஷத்தை கன கச்சிதமாய் நடித்து முடித்தார். பின்னர் காந்தா ''பாதாள பைரவி'' படத்தில் நடனம் மட்டும் ஆடினார், "ஓர் இரவு'' படத்தில் ''ஐயா சாமி. ஆவோஜி சாமி'' என்ற பிரசித்திபெற்ற பாட்டிற்கு நடனம் ஆடியிருப்பவர் காந்தா தான். இவ் விரு படங்களும் அவருக்கு நன்மதிப்பை ஏற்படுத்தின.

இவற்றைத் தொடர்ந்து ''சௌதாமினி'', ''வாலி சுக்ரீவா'', ''அக்னி பரீக்ஷா'', ''பிரியராலு'' ஆகிய தெலுங்குப் படங்களில் அவர் நடனம் ஆடியிருப்பதோடு நடித்துமிருக்கிறார். ''பிரியராலு'' படத்தில் அவருக்கு ஒரு முக்கியமான பெரிய வேஷம் கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்தை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டு நல்ல புகழ் பெற்றார்.

தெலுங்குப் பட வுலகில் காந்தாவின் புகழ் அதிகரித்துக்கொண்டிருந்த போதிலும் தமிழ்ப் பட முதலாளிகள் ஏனோ அவரை அதிகமாய் பயன் படுத்திக் கொள்ள முன்வரவில்லை. வெகு காலத்திற்குப் பிறகு காந்தாவுக்கு நல்லதோர் சந்தர்ப்பம் ''மாப்பிள்ளை'' படத்தில் கிடைத்தது. வில்லன் டி. கே. ராமச்சந்திரனுடன் இவர் 'வில்லி'யாகத் தோன்றி, சக்கை போடு போட்டதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இப்படத்தில் காந்தாவும், பி. கே. சரஸ்வதியும் சேர்ந்து நடனமும் ஆடியிருக்கின்றனர்.

''மாப்பிள்ளை''க்குப் பின் காந்தா, ''சத்திய சோதனை'', ''நல்ல காலம்'' ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். ''அபூர்வ சகோதரர்கள்'', ''போர்ட்டர் கந்தன்'', ''நல்லே படசு'' ஆகிய படங்களில் நடனம் மட்டும் ஆடியிருக்கிறார். மற்றும், நாகூரின் ''இத்தரு பெண்

விஜயாவின் "குணசுந்தரி" தமிழ்ப் படத்தில் முத்து லக்ஷ்மி அரசகுமாரியாக நடித்திருக்கிறார்.

லாலு", "அந்தே காவாலி", "பாலசன்யாசம்மா கதா" ஆகிய தெலுங்குப் படங்களிலும் அவர் ஆடியும் நடித்துமிருக்கிறார். "போனமச்சான் திரும்பி வந்தான்" படத்தில் கே. ஏ. தங்கவேலுவுடன் நடித்ததன் விளைவாக காந்தாவின் புகழ் ஒரு படி உயர்ந்தது. தற்போது அவர் டைரெக்டர் நாகூர் தயாரித்து வரும் "குடும்ப விளக்கு" படத்தில் நடித்து வருகிறார்.

லக்ஷமி காந்தாவுக்கு சினிமாவில் நடிப்பதைப் போலவே நாடகங்களில் நடிப்பதிலும் மிக இஷ்டம். சமயம் வாய்க்கும்போதெல்லாம் அவர் நாடகங்களில் நடித்து வருகிறார். 'நடிப்பு மேம்பாடு அடைவதற்கு நாடகங்களில் நடிப்பது மிக அவசியம்' என்று கருதுகிறார். இந்த எண்ணத்தினால் அவர் ஹாஸ்ய நடிகர் தங்கவேலு நடத்தி வரும் நாடகக் கோஷ்டியில் சேர்ந்து மேடையில் பிரதம பாகங்களில் அடிக்கடி நடித்து வருகிறார்.

லக்ஷ்மிகாந்தா இந்த உலகில் ஒரு அனாதை. "உற்றார் உறவினர்" என்று கூறிக் கொள்ளக்கூடிய பாக்கியமற்றவராய் வாழ்க்கையில் வெறுப்புற்று வந்த அவரை சந்திர சேகரன் என்ற தெலுங்கு நடிகர் தமக்கு உரியவராக்கிக் கொண்டிருக்கிறார். அவரும் சில பிரபல தெலுங்குப் படங்களில் நடித்திருக்கிறார்.

வாழ்க்கையில் உறவினர் இல்லை என்ற காரணத்தால்தானோ என்னவோ லக்ஷ்மிகாந்தா பக்ஷி ஜாதிகளிடமும், மிருக ஜாதிகளிடமும் அதிக உறவு கொண்டாடி வருகிறார்! இவர் வீட்டில் நிறையக் கோழிகளும் அவற்றின் குஞ்சுகளும் இருக்கின்றன. மிருக ஜாதியின் பிரதிநிதிகளாக இரு பயங்கரமான நாய்களும் வாழ்ந்து வருகின்றன. இவற்றின் மீதெல்லாம் காந்தா அபாரமான அன்பு செலுத்தி வருகிறார்.

காந்தாவுக்கு, தெலுங்கு, தமிழ். கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகள் தெரியும். நிறைய சினிமாப் படங்கள் பார்ப்பதில் அவருக்கு மிக இஷ்டம்.

சுமாரான முகத் தோற்றமுடைய லக்ஷ்மிகாந்தா தம்மை அளவுக்கு அதிகமாக குறைவாய் நினைத்துக் கொள்ளுகிறார். பல வருஷ அனுபவம் காரணமாக அவர் நடனத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருக்கிறார். ஆகவே எதிர் காலத்தில் அவரும் ஒரு முன்னணி நக்ஷத்திரமாகி விடலாம்.

கமலாவின் கடிதம்

[50-ம் பக்கத் தொடர்ச்சி]

நான் மௌனமானேன். நீங்களே தொடர்ந்து கூறினீர்கள்: "கமலா! உனக்கு துணைக்கு உன் தாயாரை அழைத்து வைத்துக்கொள். அல்லது நீ பிறந்தகம் போய் இருந்தாலும் எனக்கு சம்மதம் தான்."

இவ்வாறு கூறிவிட்டு வண்டியில் ஏறிய உங்களைப் பார்க்க முடியாது என் கண்கள் பொல பொலவென்று நீரைச் சொறிந்தன.

பிறகு வாரம் ஒன்று ஓடி விட்டது. போன மனிதர் ஒரு கடிதம் போட்டீர்களா? அதுதான் இல்லை. உங்களிடமிருந்து கடிதம் வராததால் நாளாக ஆக என் கவலை அதிகமாயிற்று. நீங்கள் எங்கிருக்கிறீர்கள்? க்ஷேமமாய் இருக்கிறீர்களா? ஒன்றுமே எனக்குத் தெரியவில்லை.

உங்களுக்கு சித்திரத்தில் பித்தாயிற்றே அதுதான் சித்திரக் கலை கற்றுக் கொள்ளப் போயிருக்கிறீர்களோவென்று நினைத்தேன். அத்துடன் இலக்கியப் பித்தும் அதிகம் ஆனதால், குழந்தைகள் பத்திரிகையிலிருந்து மாதர் மஞ்சரி வரை அலசிப் பார்த்தேன்.

"தட் தட்" என்றும் "டம் டம்" என்றும் விசித்திரமான புதுப் பெயர்களைத் தாங்கி வரும் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில்கூட தங்கள் திருநாமம் தென்படவில்லை.

கடைசியில் என்னடாவென்றால் நடிப்புக் கலையும் எனக்கு தண்ணீர் பட்டபாடு என்று திரையுலகம் மூலம் நிருபித்து விட்டீர்கள். ஒரே படத்தில் நடித்து நக்ஷத்திரப் பதவியை அடைந்து விட்டீர்கள். அதற்காக நான் மிகவும் பாராட்டுகிறேன்.

ஒரு சமயம், "திரைச் செய்தி" என்ற மாத சஞ்சிகையில் தங்கள் உருவப் படத்தையும், வாழ்க்கை வரலாற்றையும் படித்துப் பார்த்தேன். எல்லாவற்றையும் விட நீங்கள் உங்களை மட்டும் உலகத்துக்கு அறிமுகப்படுத்திக் கொண்டீர்களே தவிர, நான் ஒருத்தி இருப்பதாகவோ, அல்லது என்னைக் கைப்பிடித்ததாகவோ அந்த வரலாற்றுப் பகுதியில ஏன் வெளியிடவில்லை?

இட்போது நான் உங்களைக்குறை கூறுகிறேன். அன்று நீங்கள் என் 'படித்த பெருமையை'க் குறை கூறினீர்கள். இன்று உங்கள் நடிப்புப் பெருமையில் என்னை மறந்தே விட்டீர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன்.

நீங்கள் உங்கள் பெயரை எதற்காக மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்? எனக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தானே?

போதும்....போதும் நீங்கள் கலைஞனானது. உங்கள் அழகிய கிராமம் உங்களை எதிர்ப்பார்க்கிறது. உங்கள் அன்பான மனைவி உங்கள வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறாள்.

உங்கள் கிராம சேவையும், ஏழைகளின் உள்ளங்களும் உங்கள் அமைதியான வாழ்வுக்காகத் தவம் கிடக்கின்றன.

நீங்கள் கலைக்குத் தொண்டு செய்தது போதும். வீட்டில் அன்பும் ஆனந்தமும் ததும்ப வாழ்க்கையை நுகர்ந்து கொண்டே கலைக்குத் தொண்டாற்றுங்கள். இதைத்தான் நான் உங்களை வேண்டிக் கொள்வது.

உங்களுக்குப் படிப்பு இல்லை என்றோ, அல்லது கிராமத்தில் உட்கார்ந்து கொண்டு வெட்டிப் பொழுது போக்குகிறீர்கள் என்ற எண்ணமோ எனக்கு கிஞ்சித்தும் கிடையாது. இனிமேலும் ஏற்படாது.

வாருங்கள்—வந்து பல ஏழைகளின் கண்ணீரைத் துடையுங்கள். அனேக குழந்தைகளின் மனதில் கதை சொல்லும் மாமாவைப் பற்றிய ஏக்கத்தை நீக்குங்கள். உங்கள் அன்பையே எண்ணி உங்களைத் தஞ்சமடைந்த உங்கள் அருமை மனைவியின் உள்ளத்தின் புண்ணை ஆற்றுங்கள்.

இதற்கும் மேலாக உங்களை வளர்த்த ஜீவன்—முனியம்மாவின்—கடைசி வேண்டுகோளுக்காகவாவது, சினிமா உலகத்திலிருந்து விடுதலை பெற்று வாருங்கள்".

நீங்கள் என்னுடைய தூய்மையான எண்ணத்தைப் புரிந்துக் கொண்டது உண்மையானால் உங்கள் வருகைக்கு முன்பாக, உங்கள் அன்பான பதிலை எதிர்பார்க்கிறேன். நமஸ்காரம்.

இப்படிக்கு, அடியாள் "கமலா"

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.

ரேவதி புரொடக்ஷன்ஸாரின் "கள்வனின் காதலி"
தமிழ்ப் படத்தில் கதாநாயகியாக நடிக்கும் பானுமதி.

GUNDOOSI Regd. No. M. 4924 December 1955

Registered as a News Paper in Ceylon.